ஒக்டோபர் 17 - 23, 2004 24 பக்கங்கள் 16.00

October 17 -23, 2004

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி


THE SUDAR OLI සුඩර් ඔළි



## விறுவிறுப்பான போட்டி

# வெல்வது யார்?

## மறுக்கும் சிங்களம்





# காலத்தின் கட்டாய தேவை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக்கட்சியின் தேய்வில் வளர்ந்துவரும் ஜே.வி.பி

இப்பொழுதெல்லாம் எங்கள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் ஜே.வி.பி.யின் உச்ச மட்டத் தலைவர்களான ரில்வின் சில்வா, விமல் வீரவன்ச போன்றவர்களை நேருக்கு நேராகச் சந்தித்து வார்த்தை முழக்கங்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் அறவே இல்லாமல் போய்விட்டன.



ஐக்கியமக்கள்சுதந்திரகூட்டமைப்புத்தலைவராக ஜனாதிபதி பதவி வகித்தபோது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியான ஜே.வி.பி. தலைவர்களை கூட்டங்களிலும், கலந்துரையாடல்களிலும் சந்திக்க வேண்டிய அவசியம் இருந்தது. அக்கட்டங்களில் ஜே.வி.பி உயர்மட்ட உறுப்பினர்கள் ஒரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியுடன் நடந்துகொள்ளும் பழக்கவழக்கங்களுக்கு அப்பாற்பட்டு காரசாரமான சூடு பறக்கும் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டனர். இதனால் சந்திரிகா அம்மையார் மிகவும் நொந்து போயிருந்தார். பொருத்தமான ஒரு யுக்தியாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தலைமைப் பதவியை இராஜினாமாச் செய்திருந்தார்.

ஆனால், அமைச்சரவைக் கூட்டங்களில் ஜனாதிபதி தலைமை தாங்குவது அரசியல் யாப்பு வழியான அவரது கடமையும், உரிமையும் ஆகும். அங்கும் ஜே.வி.பி. அமைச்சர்கள் அமைச்சரவையில் அங்கத்தவர்களாக இருப்பதனால் ஜனாதிபதி தொடர்ந்தும் கொதிப்பும்,குழப்பங்களும் நிறைந்த விவாதங்களை ஜே.வி.பி. அமைச்சர்களிடமிருந்து சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளார்.

### வேண்டாப் பெண்டில் நிலை

கொழும்பு அரசியல் களத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் உடன்பாட்டுக்கு வருவதிலும் பார்க்க ஜே.வி.பி.யுடன் 'வேண்டாப் பெண்டில் கைதொட்டால் குற்றம், கால் தொட்டால் குற்றம்' என்ற ரீதியிலாயினும் – அரசியல் கலியாணத்தை ஒப்பந்த முறிவுக்கு உட்படுத்தாமல்— ஒருவாறு இழுத்துச் செல்வதே அம்மையாரின் அடிப்படையான உபாயமாகும்.

இந்தநிலைமையில் அமைச்சரவைக் கூட்டங்களில் ஜே.வி.பி.அமைச்சர்களுடன் எழும் சர்ச்சைகளையும், விவாதங்களையும் தனக்கான மன நோகடிப்பாகவோ, கௌரவப் பிரச்சினையாகவோ எடுக்க முடியாதவராகவே ஜனாதிபதி தொடர்ந்தும் இருக்க வேண்டிய நிலையே உள்ளது.

### ஜனாதிபதி ஜே.வி.பி ஆதரவைப் பெறுவாரா?

தனது தற்போதைய ஜனாதிபதிப் பதவிக்கான தவணைக்காலம் முடிவை நெருங்கிவரும் இத்தறுவாயில் மீண்டும் தான் மூன்றாவது தடவையும்ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியாத சட்டச் சூழல் இருப்பதனால் பிரதமர் பதவியை அதிகாரமுள்ளதாக்கும் வகையில், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை ஒழிப்பதற்கு—அரசியல்யாப்புக்கு வெளியே உள்ள அரசியல் நிர்ணயசபை போன்ற பொறிமுறைகளைப்பயன்படுத்துவதற்கு ஜே.வி.பி.யின் ஆதரவைப் பெற முடியும் என்றும், அதிகாரமுள்ளதாக உருவாக்கப்படமுடியும் என்றும் தான் எதிர்பார்க்கும் பிரதமர் பதவியை தனக்குரியதாக்கிக் கொள்ள முடியும் என்றும் ஜனாதிபதி நம்புகிறார்.

### ஜே.வி.பி. யை உதறித்தள்ள முடியாத ஜனாதிபதி

ஜே.வி.பி. தனது பலத்தை பதின்மூன்றாவது நாடாளுமன்றத்தேர்தலிலும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களிலும் மிகத் தெளிவாக நிரூபித்துவிட்டது.ஜே.வி.பி அரசியல் பலம் கொண்ட ஒரு கட்சியாக வளரத் தொடங்கிவிட்டது என்பதை இலங்கைத் தீவிலுள்ள சகலரும் அறிவது போல ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரும் நன்கு அறிவார். தனது தந்தையார் எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்கா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு தனது தாயார் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களால் வளர்க்கப்பட்டு, பின்னர் ஒரு இடைப்பட்ட காலத்தில் (1978—1994வரை) வீழ்ச்சியுற்றுப் பின்னர் 1994இல் மீண்டும் தன்னால் புத்துயிர் அளிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேய்வில் தான் ஜே.வி.பி. வளர்கிறது என்பதை ஜனாதிபதி நம்பினால் என்ன, நம்பாவிட்டால் என்ன இப்பொழுது ஜே.வி.பி.யை ஜனாதிபதியால் உதறித்தள்ளிவிட முடியாது.

ஜே.வி.பி. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியாயினும், பிரதான அமைச்சுக்கள் சில அவர்களிடம் இருப்பினும் அரசாங்கத்தின் மக்கள் நலன்கள், பாதகமான நடவடிக்கைகள் பலவற்றிலிருந்து ஜே.வி.பி தூரவிலகி நின்று, காட்டமாக விமர்சித்துக்கொண்டிருக்கின்றது. ஜே.வி.பி அமைச்சர் ஒருவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவர்களை மாபியாக் கும்பல் என்று கூட கூட்டமொன்றில் வைது தள்ளியுள்ளார்.

### ஜே.வி.பி.இன் ISGA எதிர்ப்பு

ஜே.வி.பி. அரசியல்,பொருளாதார ரீதியாக மூன்று பிரதான விடயங்களை தனது கைகளில் எடுத்துள்ளது. விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகள் விடயத்தை முற்றுமுழுதாக எதிர்ப்பதும் அதைப்பயன்படுத்தி எந்தவித பேச்சு வார்த்தைகளிலும் புலிகளுடன் ஜனாதிபதி ஈடுபடுவதைத் தடுத்து அவரை அரசியல் ரீதியில் பிரபல்யமற்றவர் ஆக்குவதும் ஜே.வி.பியின் முதலாவது விடயமாகும். இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் தனி நாடுஅமைப்பதற்கான யுக்தி தான் என்று ஸ்ரீலங்காவின் மூலை முடுக்கு எங்கும் ஜே.வி.பி. பிரசாரத்தை வேகமுடன் முடுக்கிவிட்டிருந்தது.சகல பல்கலைக்கழகங்களிலும்,சிங்கள மாணவர்களிடமும்,சிங்களவர்களாகவுள்ள விரிவுரையாளர்கள்,பேராசிரியர்கள் அனைவரிடமும் ஜே.வி.பி இக் கருத்தை ஊன்றச் செய்துள்ளது. சிங்களப் பிரதேசங்களின் நகரங்களிலும், கிராமங்களிலும் மேடைகள் மூலமும், சுவரொட்டிகள் மூலமும் தனது தொடர்பாடலை ஜே.வி.பி திட்டமிட்டு மேற்கொண்டுவிட்டது.

### வேலை நிறுத்தங்களைத் தூண்டும் ஜே.வி.பி

இரண்டாவது பிரதான விடயம் யாதெனில் அரசாங்க நிறுவனங்கள், துறைகளுக்குள் வேலை நிறுத்தங்களைத் தூண்டி, தொழிற்சங்க ரீதியாக தனது கட்சியைப் பலப்படுத்தும் ஜே.வி.பியின் யுக்தியாக உள்ளமையாகும். தெற்கில் ஒரு கூட்டமொன்றில் அண்மையில் பேசிய ஜே.வி.பி அமைச்சர் லால்காந்த் பின்வருமாறு கூறினார்.



"ஜே.வி.பி வியர்வை சிந்தி கடினமாக பாடுபட்டதனாலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சில அங்கத்தவர்களின் சுகபோகமான வாழ்க்கை அரசாங்கத்துக்கும், அமைச்சுக்கும் பயன்படவில்லை. ஆனால், அவர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் மகுடிக்கு நாங்கள் ஆடத் தயாராக இல்லை. நிலைமை இப்பொழுது பொறுமையின் எல்லையைக் கடந்து விட்டது.

"ஜே.வி.பியினர் நாட்டை ஆளுகின்ற ஆட்சியாளர்களாகமட்டுமல்ல, தொழிற்சங்க நடவடிக்கைகளையும் நடத்துபவர்களாக உள்ளனர்.எமது அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் இரண்டு தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொண்டோம். முதலாவது நடவடிக்கை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் மேற்கொள்ளப்பட்டது. இரண்டாவது அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் போதனை சாரா ஊழியர்களின் இருபத்திநான்கு நாட்கள் நீடித்த வேலை நிறுத்தம் ஆகும். இரண்டு தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் நாங்கள் வென்றுள்ளோம். அரசாங்கம் எமது நிபந்தனைகளை ஏற்க நிர்ப்பந்திக்கப்பட்டது. நீங்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு மூவாயிரம் பஸ் வண்டிகளையும்

(18 ஆம் பக்கம் பார்க்க)

- யாழ் ஆத்மா -

# பிரயாணிகளை வதைக்கும் பிரயாணங்கள்

இன்றைய உலகில் விஞ்ஞானம் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இதனால் நாகரிகங்கள் அதீத வளர்ச்சி கண்டுள்ளது. எனினும் வளர்முக நாடு என்ற வகையில் இலங்கையில் குறைபாடுகளே காணப்படுகின்றன.

மத அனுஷ்டானங்களும், நாகரீகக் கட்டுப்பாடுகளும் இன்று எம் நாட்டில் மீறப்பட்டு வருவதைக் காணலாம். இதற்கு இன முரண்பாடோ அல்லது யுத்தமோ காரணமாகவிருக்கலாம். இதனால், இன்று அநாகரிகங்கள் மேலோங்கியுள்ளன. இந்த அநாகரிகச் செயற்பாடுகள் பிரயாணங்களின் போது செயல் வடிவம் பெறவும் தவறவில்லை. அப்போது அது பிரயாணிகளை வதைக்கும் பிரயாணங்களாகிவிடுகின்றன.

வளர்ச்சியடைந்த நாடுகளில் போக்குவரத்துக்காக எத்தனையோ வசதி வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால், இலங்கையில் அவை இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. ஆனபோதும் வடக்குக் கிழக்கில் போக்குவரத்துத் தொடர்பாக புறக்கணிப்புத் தாராளமாகவே உள்ளது.

பொருத்தமான வாகனங்கள் இன்றியும், சீரான போக்குவரத்துக்கு இன்றியும் பிரயாணிகள் அவஸ்தைப்படுகின்றனர்.

தூர இடப் பிரயாணங்கள் என்று புறப்படும் வாகனங்கள் ஆங்காங்கே கண்டபடி தரித்துச் செல்வதும், சொகுசு வாகனம் என்ற போர்வையில் எந்தவித சொகும் இன்றி சேவையில் ஈடபடுவது, பயணக் கட்டண பெறுமதி போக,மிகுதிப் பணம் கொடுக்க மறுக்கும் நிகழ்வுகளும் பிரயாணிகளை எரிச்சலடையச் செய்கின்றன.

போதியபயிற்சியும், அனுமதிப் பத்திரமும் இன்றிச் செலுத்தப்படும் வாகனங்களால் ஏற்படும் விளைவுகளைக் கண்டும் மக்கள் மிரள்கின்றனர்.

இவை தவிர சோதனைச்சாவடிகளிலும் பிரயாணிகள் வதைக்கப்படுகின்றனர். நினைத்த மாத்திரத்தில் உயரும் பிரயாணக் கட்டணத்தாலும் துன்புறுகின்றனர்.

இவை தவிர பிரயாணங்களின் போது நடைபெறும் களவுகள், அடாவடித்தனங்கள், மிரட்டல்கள் இடம்பெறுவதுடன் படுமோசமான வதைப்புகளும் இடம்பெற்று வருகின்றன.

பிரயாணங்களின்போதுதனியாகவோ, உறவினர்களுடனோ வரும் பெண்கள் உடல், உள ரீதியாக இம்சைப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அண்மையில் கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கிப் புறப்பட்ட பேருந்து ஒன்றில் என்ற பேருந்தில் மிக இழிவான ஒரு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

34 வயது மதிக்கத்தக்க தமிழ்ப் பெண்ணை நான்கு சிங்கள வாலிபர்கள் இம்சைப்படுத்தி இருக்கின்றனர்.

கூரிய ஊசியால் குத்தியும், கையினால் தாக்கியும், முட்கம்பியின் மேல் உட்கார வைத்தும்,சகிக்க முடியாத சொற்களை பிரயோகித்தும் வதை செய்தனர்.

பேருந்தில் இருந்த ஏனையவர்கள் இதனை ரசித்து வேடிக்கை பார்த்துக் கொண்டும் இருந்தனர். எவருமே இதனைத் தடுக்க முன்வரவில்லை. சாரதியிடமும், நடத்துனரிடமும் முறையிட்ட போதும் அது பலனளிக்கவில்லை.

இறுதியில் காயங்களுடன் திருகோணமலை வைத்தியசாலை விபத்துச் சேவைப் பிரிவில் சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டிய பரிதாப நிலையும் ஏற்பட்டது. பொலிஸில் முறையிட்டும் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இவ்வாறாக தொடர்கிறது பிரயாணிகளை வதைக்கும் பிரயாணங்கள்.

பொது மக்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டிய பாதுகாப்புத் தரப்பினரே வேலியே பயிரை மேய்ந்த கதையாகிவிட்டது.

இவ்வாறு இடம் பெறும் சம்பவங்கள் தமிழர்களை கொதிப்படையச் செய்யும் என்பதை மனதிற் கொள்ள வேண்டும். இச்சம்பவம் தொடர்பாக திருமலை மகளிர் சங்கங்களின் ஒன்றியம் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

# வாசகர் இதயம் பேசுகிறது

*எம்.அம்பிகா, அட்டன்.*

வாரம் ஒரு முறை மலர்ந்து வரும் ஞாயிறு 'சுடர் ஒளி'யே!

நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் வெகு ஜோர்.

குறிப்பாக என்னைக் கவர்ந்த சிறுகதைகள் வண்ணத்தில் வெளிவருவது கண்களுக்கு விருந்தாகிறது.

மற்றைய பகுதிகளும் வண்ணக் கலவையுடன் கலந்து வரவேண்டும் என்பதே எனது அவா. நிறைவேற்றுவீர்களா?

நன்றி, வணக்கம்.

*ந.கலைவாணி, ஒலுமடு.*

அன்பான 'சுடர்ஒளி'க்கு பலகோடி வாழ்த்துக்கள்.

சுடர்ஒளியே நீ தாங்கிவரும் ஆக்கங்கள் அனைத்தும் தரமானவை. கவிதைப்புனல், சிறுகதை, பித்தன்பதில், அரசியல் அம்பலம், சிறுவர்பகுதி, சொற்சிலம்பம், வாசகர் இதயம் போன்றவை மிகவும் பிடித்தமானவை. உன் சேவை வானுயர வாழ்த்துகிறேன்.

*ச.வசந்தப்பிரியா, ஒட்டுசுட்டான்.*

சுடர் விட்டு எரியும் 'சுடர் ஒளி'யே! பலகோடி வாழ்த்துக்கள்!

ஞாயிறு தோறும் உன் வரவை எதிர் பார்த்துக் காத்திருக்கும் வாசகர்களில் நானும் ஒருத்தி. சிறுகதை, பித்தன்பதில், கவிதைப்புனல், கண்ணாமூச்சி ஜோக், நெட் குறும்பு என்னை கவர்ந்தவை. இவைகள் அனைத்தையும் தவறாமல் வாசிப்பேன். உன்சேவை தொடர்க. ஆயிரம் கரங்கள் கொண்டு அகிலத்திற்கு ஒளி ஊட்டும் ஆதவனாய் நீ எழுக, உன் புகழ் விண்ணுயர வாழ்க, வாழ்க என்று வாழ்த்துகிறேன்.




*கே.எல்.ஹில்மி, சாய்ந்தமருது.*

எனது மலர் ஒளிக்கு எனது இதயம் கனிந்த வந்தனங்கள். உன்பணி எங்களை மகிழ்விக்கின்றது என்பதில் சந்தேகம் இல்லை. எமது நாட்டில் எத்தனையோ பத்திரிகைகள் தோன்றிமறையும் இந்நாட்களில் நீ தொடர்ந்தும் நிலைத்து நின்று தரும் பல்சுவை விருந்து சிறப்பானது. நீ தருகின்ற கவிதை, கட்டுரை, சிறுகதை, பித்தன் பதில் அத்தனையும் அசத்தலானவை. ஞாயிறு தோறும் உன்வரவை ஆவலோடு எதிர்பார்க்கின்றேன். உன்வரவைக் காணாமல் என் காரியங்கள் நடைபெறமாட்டா. உன்பணி தொடர என் வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் தவிப்பு



**மகனை மீட்கப் போராடும் தாய் இவள்**

தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.

நவீன புறநானூறாக உணர்வும், விறுவிறுப்பும்நிறைத்து இதனை செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

2 "வீட்டுலயாரு? கதவைத்திறவுங்க, நாங்கபொலிஸ் வந்திருக்கோம்!" கரகரத்த குரல் ஒன்று சத்தமாகச் சொன்னது.

பொலிஸா? இந்தநேரத்திலா? நம் வீட்டிற்கா? லேசாக அடிவயிறு கலங்குவது போல் இருந்தது. கதவைத் திறக்க ஓரடி முன் வைத்தாள் அற்புதம். பின் என்ன நினைத்தாளோ கட்டில் பக்கம் திரும்பினாள்.

"என்னங்க... என்னங்க... எந்திருங்க" - குயில்தாசனைத் தட்டி எழுப்பினாள்.

"என்ன இந்த நேரத்தில" - தூக்கக் கலக்கத்துடன் கேட்டார் குயில்தாசன்.

"வாசலில பொலிஸுங்க.. வந்து பாருங்க."

"என்ன?" திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தார் குயில்தாசன்.

அதற்குள் மீண்டும் கதவைத் தட்டும் ஒலி, தட்டவா செய்தனர்?.... இடித்தனர். மீண்டும் அதே கரகரத்த குரல்.... "யாருங்க வீட்டுல... சீக்கிரம் கதவைத்திறங்க... பொலிஸ் வந்திருக்கோம்."

"இந்நேரத்துல எதுக்கு பொலிஸ் வந்திருக்கு? என்னன்னு தெரியலையே - சரி வா பார்ப்போம்."

குயில்தாசன் முன் சென்று கதவைத் திறந்தார். வெளி விளக்கு, முன் அறை விளக்கு இரண்டையும் போட்டார். வெளியே 3 பேர் நின்றிருந்தனர். ஒருவரை அடையாளம் தெரிந்தது குயில்தாசனுக்கு. உள்ளூர் எஸ்.ஐ. அவர் தான் பேசினார்.

"வணக்கம் ஐயா! இவங்க சென்னையிலிருந்து வந்திருக்காங்க; மத்திய அரசு பொலிஸ்.விசாரிக்கணுமாம்."

"உள்ள வாங்க" நகர்ந்து வழி விட்டார்.

அந்த வீடு அப்படி ஒன்றும் பெரிய வீடல்ல. உள்ளே நுழைந்தவுடன் ஒரு முன்அறை. அதன் வலது புறம் ஒரு சிறிய படுக்கை அறை. முன் அறையிலிருந்து உள்ளே சென்றால் ஹோல், அதிலிருந்து உள்ளே சென்றால் சமையலறை, அதன் வலதுபுறம் குளியலறை, பின்னால் சிறிய தோட்டம். மாடியில் கூரைவேய்ந்த ஒரு சிறிய அறை.

புதியவரில் ஒருவர் பேசினார். "வணக்கம். ஒண்ணும் கலவரப்படாதீங்க. வீட்டுல வேற யாரு இருக்கா?"

பேசிக் கொண்டே உள்ளே நுழைந்தனர்.

"என் சின்னப் பொண்ணு தாங்க இருக்குது!"

அதற்குள் ஹோலில் படுத்திருந்த அருளும் எழுந்துவிட்டாள்.

ஹோலுக்குள் நுழைந்த அதிகாரியின் பார்வையில் முதலில் பட்டது தொலைக்காட்சிப் பெட்டி மேலிருந்த 'தம்பி' படம்தான். அதை எடுத்துப் பார்த்தவாறே. "மத்தப் பிள்ளைங்கல்லாம் எங்க?" என்றார்.

"பெரிய பொண்ணு வல்லத்துல வேலை பார்க்குதுங்க. பையன் சென்னையில பெரியார் திடலுல இருக்கான்!"

"அப்படியா!" என்றவாறே திரும்பிய அதிகாரியின் கண்களில் அடுத்துப்பட்டது அங்கே கம்பியில் கோர்த்துத் தொங்க விடப்பட்டிருந்த கடிதங்கள்.

அதை நோக்கிச் சென்ற அவர் ஒவ்வொரு கடிதமாக எடுத்துப் பார்க்க ஆரம்பித்தார். இதற்கிடையே எஸ்.ஐயும் அந்த மற்றொருவரும்,வீடு முழுவதும் சோதனையிட ஆரம்பித்தனர்.

கடிதங்களைப் புரட்டிக்கொண்டே வந்த அதிகாரியின்கை ஒரு கடிதத்தில் நின்றது. அந்தக் கடிதத்தை எடுத்து குயில்தாசனிடம் நீட்டி "இவர எப்படித் தெரியும் உங்களுக்கு?" என்றார்.

குயில்தாசன் கடிதத்தை வாங்கிப் பார்த்தார். "பாக்கிய நாதன்."

"திராவிடர் கழக மாநாட்டுக்கெல்லாம் வருவாருங்க! அப்ப பழக்கம். பிரஸ் வைச்சிருக்கேன். உங்க கவிதையெல்லாம் தொகுத்து வெளியிடறேன்னு சொன்னாரு. இந்தக் கடிதம் கூட அதப்பத்தி தான் எழுதியிருக்காரு."

"அப்படியா! சரி நாங்க இந்தக் கடிதத்தை எடுத்துக்கிறோம்."

எஸ்.ஐயும் மற்றொருவரும் ஹோலுக்குள் நுழைந்தனர்.

"முடிஞ்சுதா?" என்றார் அதிகாரி.

"முடிஞ்சுது சார்."

அதிகாரி மீண்டும் குயில்தாசன் பக்கம் திரும்பி "ஐயா! நாங்கள் உங்க பையனை விசாரிக்கணும். 2 நாளுல வந்துட்டா இங்கேயே விசாரிச்சிடறோம். இல்லைன்னா சென்னையிலே மல்லிகைக்குக் கூட்டிட்டு வாங்க."

குயில்தாசன் உடல் பதறியது. பையனை விசாரிக்கணுமாமே! எதுக்காக இருக்கும். அப்படி என்ன தப்புச் செய்திட்டான் என் பிள்ளை. அதிகாரிக்குப் பதிலுரைக்கவும் மறந்தவராகக் குழம்பிப் போய் நின்றார்.

சட்டெனச் சுதாகரித்தது அற்புதம்தான்.

"சரிங்கய்யா! ஆனா அந்த மல்லிகைன்னு சொன்னீங்களே, அது எங்க இருக்குதுங்க? எங்களுக்குச் சென்னை அத்தனை பழக்கம் இல்லீங்களே?"

"அப்படியா கொஞ்சம் இருங்க"

- என்ற அதிகாரி ஒரு துண்டு சீட்டில் ஏதோ எழுதினார்.

"இந்தாங்க இதுதான் மல்லிகையோட முகவரி. இங்க வந்து இந்தப் பேரக்கேளுங்க. நாங்க கிளம்பறோம்...." என்றபடி வெளியேறினார்.

அவர்கள் சென்றவுடன் கதவைத்தாழிட்டுத்திரும்பிய அற்புதத்தைப் பிலுபிலுவெனப் பிடித்துக் கொண்டார் குயில்தாசன்.

"இவன்என்னசெஞ்சான்னு தெரியலையே! அன்புக்குக் கலியாணம் பேசிட்டிருக்கிற இந்த நேரம் பார்த்து பொலிஸ் தேடி வர்றா மாதிரி ஆயிருச்சே என்ன பிரச்சினையோ? உன் பிள்ளை என்ன பண்ணான்னு தெரியலையே!"

"இங்க பாருங்க! நம்ம பையன் அப்படிப்பட்டவன் இல்ல! தப்பு தண்டா செய்யிற மாதிரி நாம அவனை வளர்க்கல. நம்மட்ட சொல்லாம அவன் எதுவுமே செஞ்சதில்ல. நீங்க வீணா பதட்டப்படாதீங்க."

"அது சரிதான்! ஆனால், விசாரிக்கணும்னு பொலிஸ் வந்த பிறகு நாம சும்மா இருக்கக்கூடாது. இரண்டு நாளெல்லாம் பொறுக்க முடியாது நீஉடனே சென்னைக்குக் கிளம்பிப்போ! அவங்க சொன்ன இடத்துக்கு அவன நீயே கூட்டிட்டுப் போய்ட்டு வந்துடு."

"சரிங்க, நான் காலையில வண்டியிலேயே கிளம்பறேன். இப்ப போய் படுங்க!"

"சரி சரி" முணுமுணுத்துக் கொண்டே சென்று படுத்த குயில்தாசனுக்கு உறக்கம் வரவில்லை.

அவருக்கு மட்டுமா - அற்புதத்திற்கும் அருளுக்கும் கூடத் தான்.

பல தூங்கா இரவுகளுக்கு இந்த இரவு முன்னோடி என்பதை மட்டும் அவர்கள் அறிந்திருக்கவில்லை.

***

அந்த ரயில் வண்டி சென்னையை நோக்கி விரைந்துகொண்டிருந்தது. அற்புதத்தின் மனமோ அதைவிட வேகமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தது.

பொலிஸ் எதுக்காக அறிவைத் தேடுறாங்க? என்னவா இருக்கும். ஒண்ணுமே புரியலையே! அதுவும் ராத்திரி 12 மணிக்கு வந்து கேட்கிற அளவுக்கு என்ன விசயம்? அறிவு எதுவும் செஞ்சிருக்கமாட்டான். வேற யாரப்பத்தியோ, எதப் பத்தியோ கேட்கிறதுக்கா இருக்கும். அப்படின்னா எதப் பத்தி? யாரப் பத்தி? ஒரு வேளை.... ஆமா அப்படித்தான் இருக்கணும். இந்த பாக்கி எதுன்னா செஞ்சிருப்பானோ? அவனப் பத்தி விசாரிக்கத்தான் அறிவ கேட்கிறாங்களா? இருக்கும். அதுதான் பாக்கியைப் பத்தி நம்மட்டயே துருவித் துருவிக் கேட்டாங்களே! அவன் எழுதின கடுதாசிய வேற எடுத்துக்கிட்டுப் போயிருக்காங்களே. அதப் போய் எதுக்கு எடுத்துக்கிட்டுப் போனாங்களோ? என்னமோ; பெரிய இரகசியம் இருக்கிற மாதிரி!" மெல்லிய புன்னகை ஒன்று ஓடியது அற்புதத்தின் முகத்தில்.

எதுவா இருந்தா என்ன... அறிவக்கேட்டா தெரிஞ்சிறப் போகுது. பெருசா பிள்ளையை ஒளிச்சு வைச்சிருக்கிற மாதிரி நடு ராத்திரி தேடிக்கிட்டு வந்துட்டாங்க. இந்தாங்கப்பா எங்க பிள்ளை. என்ன கேட்கணுமோ கேட்டுக்கோங்கன்னு நாளைக்குக் கொண்டு போய் அவுங்க முன்னாடி நிறுத்தினாத் தான் நிம்மதி. என்னமோ கொலைக் குத்தம் பண்ணிட்டா மாதிரியில்ல மாத்தி மாத்தி கேட்காரு அந்தாளு. பேரென்ன....ம்! அவர் முன்னாடியே கொண்டுபோய் அறிவ நிறுத்தி... நாங்க ஒண்ணும் எங்க பிள்ளையை ஒளிச்சு வைக்கல. வைக்கிற அளவுக்கு அவன் எந்தத் தப்பும் பண்ணலைன்னு கண்டிப்பாச் சொல்லணும். யோசித்துக் கொண்டேயிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. சென்னையும் வந்துவிட்டது.

இறங்கி பஸ் பிடித்து பெரியார் திடல் சென்றார். நேராக அச்சகத்திற்குச் சென்று அங்கு இருந்தவர்களிடம் "எப்பா அறிவு எங்கப்பா?" என்றார்.



8 வருட கொடுமையான காத்திருப்பு...
எல்லாம் முடிவுறும் நாள் வந்துவிட்டது.

(தவிப்புத் தொடரும்....)

## யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?

# பெண்களால் துன்பம்!

## —கதறுகிறார்கள் ஆண்கள்

தெற்காசியாவில் மட்டுமல்ல உலகெங்கும் பெண்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். அவர்களைப் பாதுக்கவென பல அமைப்புக்கள் இருக்கின்றன. ஐ.நா. முதற்கொண்டு பல்வேறு பொதுநல அமைப்புக்கள் பெண்கள் உரிமைகளைப் பாதுகாக்கப் போராடுகின்றன. ஆண்களால் பெண்கள் கொடுமைப்படுத்தப்படுகின்றனர் என்பது தான் பொதுவான குற்றச்சாட்டு. ஒரு பெண் கொடுமைப்படுத்தப்பட்டாள் என்று செய்திகள் வெளியானால் பெண் உரிமைக் குழுக்கள் உடனேபோர்க்கொடி தூக்கி விடுகின்றன. இதுவே ஆண்கள் கொடுமைக்கு உள்ளானால்கேட்க எந்த அமைப்புமே இல்லை.



இந்தியாவில் அண்மையில்பெண்கள் ஆணைக்குழுவுக்குக் கிடைத்த முறைப்பாடுகள் விசித்திரமாக அமைந்திருந்தன.

இந்த ஆணைக்குவுக்கு "ஆண்கள்கொடுமைப்படுத்துகிறார்கள்" என்ற முறைப்பாடு கிடைப்பதுதான்வழமை. ஆனால், இந்தமுறைப்பாடுகள் பெண்களால் ஆண்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்று கூறுகின்றன. பெண்களால் பாதிக்கப்பட்ட ஆண்கள் பலர் வேறு வழியின்றி பெண்கள் ஆணைக்குழுவிடம் தமது கஷ்டங்களைக் கொட்டித் தீர்த்திருக்கிறார்கள். ஒன்று இரண்டல்ல இப்படிப்பட்ட ஏராளமான முறைப்பாடுகள் ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ளன.

"இந்த முறைப்பாடுக் கடிதங்களைப் பார்த்து அனுதாபப்படுகின்றோம். ஆண்கள் கூறும் முறைப்பாடுகளைக் கேட்பதற்கும் தயாராக உள்ளோம். ஆனால், நாங்கள் பெண்களின் உரிமைகளுக்காவும், அவர்களின் சகஜ வாழ்வுக்காகவும் போராடும் அமைப்பு. ஆண்களுக்காக எப்படிப் போராட முடியும் என்று தெரியவில்லை. அவர்களைப் பார்க்கப் பாவமாகத்தான் இருக்கிறது" - என்கிறார் பெண்கள் ஆணைக்குழுவின் முக்கிய உறுப்பினரான ரஜோ மால்வியா.



இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்திலேயே பெண்களால் ஆண்கள் கொடுமைகளுக்கு ஆளாகிறார்கள். அங்குள்ள பெண்கள் ஆணைக்குழுவுக்குத்தான் இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

பெண்களால் தொல்லை, கணவன் மனைவிக்கு இடையில் உரிமை மறுப்பு, சொத்துரிமை மறுப்பு, சீதனம் (வரதட்சணை) கேட்டதாகப் பொய் முறைப்பாடு கொடுத்தல் என்று பல்வேறு வகையில் ஆண்கள் துன்பப்படுகின்றார்கள் என்கிறது இந்த அமைப்பு.

ஆணைக்குழுவுக்குக் கிடைத்த பெரும்பாலான முறைப்பாடுகள் இத்தகையவை தான். இது தவிர தன்னைவிடப் பணக்காரப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளும் ஆண்கள் அனுபவிக்கும் கொடுமைகள் வேறு இருக்கின்றன என்கிறார் ஆணைக்குழுவின் செயலாளர் ஷாயில் ஸ்ரீ வத்சலா.

ஆணைக்குழுக்களுக்குக் கிடைத்த முறைப்பாடுகளில் தாங்கள் எப்படிக் கொடுமைப்படுத்தப்பட்டோம் என்று ஆண்கள் விபரித்துள்ளார்கள்.

பிற்படுத்தப்பட்ட இனத்தவரான கோவிந்த் என்ற ஒருவர் மற்றொரு இனப் பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டார். அவர் தனது அனுபவத்தை இப்படிச் சொல்லி இருக்கிறார்.



"திருமணத்திற்குப் பின்னர் என்னை எனது குடும்பத்தினர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் என் மனைவியின் குடும்பத்தினர் ஏற்றுக்கொண்டனர். நாட்கள் செல்லச் செல்ல என் மனைவியின் குடும்பத்தினர் என்னைக் கொடுமைப்படுத்த ஆரம்பித்தனர். அவர்களின் வீட்டு வேலைகளைச் செய்து எனக்குச் சலித்துப் போய்விட்டது. என் மனைவி இவற்றைக் கண்டுகொள்வதே இல்லை. எனக்குக் குடும்ப வாழ்க்கை அலுத்துப் போய்விட்டது." - என்று தெரிவித்திருக்கிறார்.

பத்திரிகை நிருபர் ஒருவரும் பெண்களின் கொடுமைகளில் இருந்து தப்பவில்லை. ஹிந்தி நாளிதழ் ஒன்றின் நிருபர் நமேஷ் காதலித்துக் கலியாணம் செய்துகொண்டார். வீட்டுக்குத் தெரியாமல் ஓடிப்போய் தாலி கட்டிக்கொண்டதால் சில காலம் தலைமறைவாகவே வாழ்ந்தார். ஆனால் காதலியின் குடும்பத்தினர் அவர்களைக் கண்டுபிடித்து காதலியைப்

06 ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணனின் பாதச்சுவட்டிற்காக...

கணீர் கணீர்... என்ற ஆலய மணிச்சத்தம் அன்றும் வழமைபோலக் கேட்டது. ஆனால், அந்தச் சத்தத்தில் ஏதோ ஓர் கம்பீரம் இருப்பது போல மாலாவுக்குத் தோன்றியது. ''முருகா'' என்று உச்சரித்தவாறு சைக்கிளில் ஏறினாள்.

அன்றுதான் நல்லூர்க் கந்தனின் கொடியேற்றத் திருவிழா. வீதி எங்கும் பக்தர்கள் கூட்டம். மக்களும் இனிப்பைத்தேடிச் செல்லும் எறும்புகள் போல கோயிலை நோக்கி விரைந்தனர். மாலாவும் தனது ஒழுங்கையை விட்டு வீதியில் ஏறி சைக்கிளை சிறிது தூரம் ஓட்டியதும் அந்தச் சந்தி வந்தது. அதில் உள்ள இராணுவத்தினருக்கு மாலாவை நன்றாகத் தெரியும். அவள் அச்சந்தியால் செல்லும்போதெல்லாம் புரியாத மொழியில் கிண்டலடித்துச் சிரிப்பார்கள்.

இன்றுஅதிகாலைப்பொழுதென்றபடியாலும், நல்லூர்த்திருவிழா என்பதாலும் மக்களைச் சோதனையிடவில்லை. ஆனால், மக்களோ தமது வழமையான பழக்கத்தில் இறங்கிச் சைக்கிளை உருட்டிச் சென்றனர்.

மாலா வருடாவருடம் அதிகாலைப் பொழுதில் நல்லூரானுக்கு அடியழித்து வந்தாள். அவளுடைய அண்ணன் மோகனும் பிரதட்டை செய்வதற்காக அதிகாலையிலேயே போவான். ஆனால், அவன் தனது நண்பர்கள் வீட்டுக்குச்சென்று அவர்களையும் அழைத்துச் செல்வதால் மாலா அதிகாலை இருளில் தனியே போக வேண்டியிருந்தது. வீதியில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தமையால் பயமின்றிச் சென்று வருவாள்.

ஒவ்வொரு நாளும் காலையில் அடியழிப்பாள். பகலில் அல்லது மாலையில் ஏதும் விசேஷமான திருவிழா இருந்தால் மட்டும்



தனது தோழிகளுடன் செல்வாள். ஆனால், மோகனோ காலையும் மாலையும் தவறாது சென்று வருவான். மாலையில் அவனும் நண்பர்களும் கோயில் வீதியில் இருந்து பெண்களைக் கேலி செய்வார்கள். இப்படி இளைஞர் கூட்டம் தம்மை மறந்து பொழுதைக் கழிப்பது ஓர் நாகரீகமாக வளர்கின்றது.

மாலாவும் பலமுறை இவற்றைக் கண்டிருக்கிறாள். வீடு வந்து தன் அண்ணாவுக்கு எடுத்துச் சொன்னாலும் அவன் அதைக் கேட்பதில்லை. காலையில் பாவமன்னிப்புக் கேட்பது, மாலையில் மீண்டும் பாவங்களைத் தேடிக் கொள்வது, இவற்றால் என்ன பயன் என்று கேட்டால், ''எல்லாப் பெடியளும் தானே பம்பல் அடிக்கிறாங்கள்'' என்று கூறிச்சமாளிப்பான். இவற்றை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டே ஒவ்வொரு நாளும் அடியழிப்பாள்.

அன்றொரு நாள் மாலா வழமை போலவே கோயிலுக்குச் செல்லும் போது அந்தச் சந்தியில் நின்ற ஓர் இராணுவ வீரன் மறித்து 'ஐடின்டி தாங்க' என்றான். இவள் அடியழிக்கும் போது பேர்சைக் கொண்டு போவதில்லை. அதனால் ''ஐசி வீட்டில'' என்றாள்.

அவன் ஏதோ புரியாத மொழியில் பேசினான். மாலா பயந்து விட்டாள். மக்களும் இவற்றைக் கண்டு கொள்ளாமல் தத்தமது பாட்டில் சென்று கொண்டிருந்தார்கள். அப்போதுதான் அச்சந்தியை வந்தடைந்த ரவி விடயத்தை அறிந்து ''அடியழிக்கும் போது பேர்சைக் கையில் வைத்திருக்க முடியாது. அதனால் தான் கொண்டுவரவில்லை.'' என்று அவர்களது மொழியில் சொன்னாலும் இராணுவத்துக்கு அது சரியாகப் படவில்லை. மாலா வீட்ட போய் ஐசியை எடுத்து வருவதாகச் சொல்ல அவள் வரும் வரைக்கும் ரவியை அச்சந்தியில் காத்திருக்குமாறு பணித்தனர். சிறிது நேரத்தில் மாலா ஐசியுடன் வர இராணுவத்தினர் அவனைப்போக அனுமதித்தனர். ரவி முன்னே செல்ல மாலா அவனுக்குக் கிட்டவாகச் சென்று ''தாங்ஸ் அண்ணே'' என்று கூறி அவனையும் தாண்டிச் சென்றாள்.

தன்னை முருகன் தான் காப்பாற்றியிருக்கிறார் என்று ஆண்டவனுக்கு நன்றி சொல்லி அடியழித்துவிட்டு வீதியைச் சுற்றி வரும்போது ரவி மேலும் உருள முடியாமல் படுத்திருப்பதைக் கண்டாள். அவனுக்குப் பின்னால் பிரதட்டை செய்து கொண்டு வந்தவர்கள் இவனருகில் வந்ததும் அரோகராச் சொல்லிக்கத்தினர். அதற்கும் இவன் அசையாததால் இவனையும் தாண்டிச் சென்றனர்.

இவற்றை அவதானித்த மாலா ரவிக்கு அருகில் சென்று 'அண்ணே.. அண்ணே' என்று அசைத்துப்பார்த்தாள். அவன் அசையவில்லை. உடனே ஓடிச் சென்று தண்ணீர்ப் பந்தலில் தண்ணீர் எடுத்து வந்து தெளித்தாள். அப்போது அவன் கண்கள் மெதுவாகத் துடித்தன. மீண்டும் அவன் முகத்தை தண்ணீரால் தடவி விட்ட பின்னர் தான் ரவிக்கு தான் எங்கிருக்கிறேன் என்ற நினைப்பு வந்தது.

தனது களைப்பை உணர்ந்தவனாக ''நன்றி தங்கச்சி'' என்று சொல்லி எழும்ப முற்பட்ட போது, ''ஏன் அண்ணே எழும்புறீங்க தொடர்ந்து உருளுங்க'' என்றாள். ''இல்ல களைப்பா இருக்கு. நாளைக்குப் பார்ப்பம்'' என்றவனை ''நான் உருட்டுறன் அண்ணா; நீங்க மெதுவாக உருளுங்க'' என்று ரவியை உருளவைத்தாள்.

இவ்விடம் வரையும் எல்லோரும் சுகமாக வாழனும் என்று கடவுளிடம் கேட்டுக் கொண்டு உருண்டவனுக்கு இப்போ அவனது தங்கையின் ஞாபகம் வந்தது. ஒவ்வொரு முறையும் மாலாவின் முகத்தைப் பார்க்கும் பொழுதும் அவனுக்குதன் தங்கையின் முகம் தான் தெரிந்தது. அவளை நினைத்துக் கொண்டே உருண்டவனுக்கு கோயில் படி முட்டிய போது தான் சுய நினைவு வந்தது.

ரவி கோப்பி குடிப்பதற்காக தண்ணீர்ப் பந்தலுக்குச் செல்லும் போது வழிமறித்த மாலா ''ஏன் அண்ணே! இண்டைக்குத் தானா முதல் முறை? என்றாள்

''இல்லை... இராத்திரி சரியாச் சாப்பிடயில்ல அதனால் தான்'' என்று வாயில் வந்த பொய்களைக் கூறிரவி சமாளித்தான்.

''அப்ப எப்படி வீட்ட போகப் போறீங்க? வீடுகிட்டவா?'' என்று பரிவுடன் கேட்டாள். ''ஓ... ஓ... வீடு கிட்டத்தான். இதில ஒரு கோப்பி குடிச்சால் சரியாகிவிடும்'' என்று சமாளித்தாலும் அவன் கண்ணில் ஈரம் சுவறியது. மீண்டும் ''இஞ்சயே நிண்டு அன்னதானத்தில சாப்பிட்டுப் போங்க'' என்று மாலா கூறியதும் அவனால் அவ்விடத்தில் நிற்க முடியாமல் போய்விட்டது.

இதைச் சற்றும் எதிர்பாராத மாலா என்ன செய்வதென்று தெரியாமல் தன் மனதில் குற்ற உணர்வைச் சுமந்து கொண்டாள். ''கஷ்டப்பட்டவனுக்கு உதவி செய்தேன். என் நன்றிக்கடனைத்தானே தீர்த்தேன். அதில் என்ன தப்பு? முருகா நீ தான் துணை'' என்று நல்லூரானிடம் ஒப்படைத்தாள்.

இவ்வாறே திருவிழா நாட்கள் பல கடந்தாலும் மாலா ஒவ்வொரு நாளும் ரவியைக் காணுவாள். அவனுடன் கதைக்கவேண்டும் என்று நெருங்கினாலும், சிரிக்க முற்பட்டாலும் அவன் வேறுபக்கம் திரும்பி விடுவான். இப்படியான செயற்பாடுகளால் மாலாவுக்கு அவன் மீதான பற்றுக் குறைவதற்கு மாறாக அதிகரித்தது. எவர் துயரங்களையும் துருவி ஆராயும் மாலாவுக்கு தன் மனதில் குடிகொண்டிருந்தவற்றுக்கு ஓர் தீர்வு காண முடியவில்லை.

வழமையாக அடியழிக்கும் போதே ரவியைச் சந்திக்கும் மாலா இன்று அவனைக்காணாது தவித்தாள். அடியழித்து முடியும் வரை ரவியைக் காணவில்லையே என்ற ஏக்கமே மனதில் இருந்ததே ஒழிய இன்று அவள் கடவுளை நினைக்கவில்லை. அவளுடைய முகத்தில் ஏமாற்றத்தின் அறிகுறிகள் தோன்றின. சுற்றும் முற்றும் பார்த்தாள். அவன் இல்லை; நாளை பார்க்கலாம் என்று நடக்க, பின் வீதியில் நல்லூரான் சுவருடன் சாய்ந்து கொண்டிருந்தான் ரவி.

மாலா அவனை நோக்கி நடக்க, அவளைக் காணாதவன் போல ரவி மறுபக்கம் திரும்பியிருந்தான். கிட்டச் சென்று ''அண்ணே! என்ன இஞ்சவந்திருக்கிறீங்க? என்று கேட்க, அப்போது தான் அவளைக் கண்டவன்போல ''ஆ... அது சும்மா களைப்பா இருந்திச்சு இதில குந்திட்டன்'' என்றான். ''இண்டைக்கும் சாப்பிடேல்லயா?'' என்று மாலா பகிடிபண்ண, ''சாப்பிடாட்டி என்ன சாப்பாடா தரப்போறீங்க?'' என்றான் ரவி.

''சாப்பாடு தரலாம் தான், ஆனா வீட்ட...'' என்று இழுக்க ''ஏன் நான் வீட்ட வரக்கூடாதா?'' என்று அவன் கேட்டது மாலாவின் மனதில் ஓர் சந்தோஷத்தை உண்டு பண்ணியது.

அவள் மேலும் கதைக்க முடியாமல் வெட்கப்பட்டுக் கொண்டு நிற்க ''நாங்க என்ன லவ்வேர்சா? அண்ணன் தங்கை தானே!'' என்று அவன் சொன்னதும், ''ஏன் லவ்வேர்ஸா இருக்கக் கூடாதா?'' என்று கேட்க நினைத்தவள் கேட்காமலே விட்டு விட்டு அமைதியாக மனதுக்குள் சிரித்துக் கொண்டு நின்றாள்.

மீண்டும் ரவிதான் சொன்னான், ''இன்டைக்கு மூன்று றவுண்ட் உருண்டிட்டன். அதுதான் களைப்பா இருக்கு.'' ''விசேட திருவிழாக்களுக்கு மூன்று றவுண்டா?'' இது மாலாவின் கேள்வி. ''இல்ல நாளைக்கு மட்டும் தான் வருவன்; அதுக்காக மிச்ச நாளுக்கும் சேர்த்து'' என்று அவன் கூறி வேட்டி மண்ணைத் தட்டிக்கொண்டு எழுந்தான். மாலா அசையாமல் நின்றாள். அவள் மனதில் நாளைக்கு மட்டும்தான் வருவன் என்ற வார்த்தை எதிரொலித்துக் கொண்டிருந்தது.

''வாங்கபோவம்'' என்று அவன் சொன்னதும் திடீரென நிலைகுலைந்து ''ஏன் நாளைக்குப் பிறகு வரமாட்டீங்க?'' என்றாள். ''நிறைய வேலையிருக்கு'' என்று ரவி பொய் சொல்ல ''பிறகு உங்கள எப்படிச் சந்திக்கிறது?'' என்று உரிமையுடன் கேட்பது போல அவள் கேட்டாள். ''அதையெல்லாம் பிறகு சொல்லுறன்'' என்று கதையை முறித்துக்கொண்டு போய் விட்டான் அவன்.

இரவு படுக்கையிலும் ''ரவி இவ்வளவு நாளும் வந்தவன், கடைசி நாளுக்கு மட்டும் ஏன் வர முடியாமல் இருக்கிறது?'' அதற்கான காரணத்தை ஆராயும் தன் வழமையான தொழிலில் அவள் மனம் இறங்கியது. இருந்த போதிலும் நாளை தன் ஆசையைச் சொல்வதா? அல்லது அவனைப்பற்றி ஆராய்வதா? என்ற மனத்தின் வினாக்களுக்கு எந்த விடையும் கிடைக்காமலே தூங்கினாள்.

மறுநாள் நேரத்துடனே மாலா கோவிலுக்குச் சென்றுவிட்டாள். அடியழிப்பதை ஓர் கடமைபோலச் செய்துவிட்டு ரவியைத் தேடி அலைந்தாள். பின்பு நேற்று ரவி அமர்ந்திருந்த அதே இடத்தில் போய் அமர்ந்த போது, மோகனுடைய நண்பர்கள் ரயில் போல் உருண்டு கொண்டு போனார்கள். அவற்றைப் பார்த்துவிட்டு முகத்தைக் கைக்குள் புதைத்துக்கொண்டு இருந்தவளுக்கு ''ஹலோ தங்கச்சி'' என்ற ரவியில் குரல் கேட்டது. அவள் அப்படியே இருந்தாள். மீண்டும் அழைத்துப்பார்த்தான் அசுமாத்தம் எதுவுமில்லை. மாலா தன் மீது கோபமாக இருக்கிறாள் என்பதை உணர்ந்தான்.

அவளுக்கு அருகில் அமரும் நோக்கில் சால்வையைக் கழற்றி உதறிய போது அவனது இடுப்பில் பாதுகாப்பாக செருகப்பட்டிருந்த சைனைட் குப்பி அவள் அருகில் விழுந்தது. மெதுவாக நிமிந்து அதையும், ரவியையும் மாறிமாறிப் பார்த்தாள். ரவிக்கோ என்ன செய்வதென்று தெரியவில்லை. ஆனாலும், அப்படியே பார்த்துக் கொண்டிருக்கவும் முடியாது.

உடனே அதன் அருகில் அமர்ந்து அதனை எடுத்து மீண்டும் இடுப்பினுள் செருகிக் கொண்டான். மாலா அவனது முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனால், ரவியால் அப்படியிருக்க முடியவில்லை. குற்ற உணர்வு அவனைத் தாக்கியது.

அவர்களிடையே நிலவிய மௌனத்தை அவன் தான் கலைத்தான். ''இப்போ விளங்குதா நான் யாரெண்டு? எனக்கு உன்ர பெயரில ஓர் தங்கை இருந்தாள். அவள் ஷெல் பட்டு இறந்த பிறகுதான் நான் இதைக்கட்டத்துவங்கினன், இதை எல்லாம் மனசுக்குள்ளேயே வைச்சுக் கொண்டுதான் இருக்க நினைத்தேன். ஆனா, இப்ப சொல்ல வேண்டி வந்திட்டிது. என்ர மாலா செத்த பிறகு இந்த முறைதான் பிரதட்டை பண்ணச் சந்தர்ப்பம் கிடைச்சுது. உனக்கொண்டு தெரியுமா மாலா! நான் முதன்முதலா பிரதட்டை பண்ணேக்க முதல் நாள் மயங்கிக் கிடந்த அதே இடத்தில ஏலாம படுத்திட்டன். என்ர பெற்றோரும் இதோட காணும் எழும்பி வா என்றனர். ஆனா, மாலா தான் மீதித்தூரம் முழுவதும் உருட்டினவள். அன்றிலிருந்து ஒவ்வொரு முறையும் தங்கச்சியுடன் வந்து பிரதட்டை செய்வேன். இம்முறை அவள் இல்லையே எண்டு நினைக்கேக்க தான் நீ வந்தாய். என்ர தங்கச்சியே உண்மையா வந்தது போல நினைச்சன்'' என்று வானத்தைப் பார்த்துச்சொல்லிக்கொண்டிருந்தவனுக்கு, மாலா தன் முழங்காலைக்கட்டிக் கொண்டு அழுதது எதுவும் தெரியவில்லை. தன்னை சுதாகரித்துக் கொண்டு குனிந்த போது தான் அதை அறிந்தான்.

''மாலா அழாத..... மாலா நிமிந்திரு... வாழ்க்கையில பழகிறதும், பிரியிறதும் நியதி தானே'' என்று மாலாவை நிமிர்த்தி இருத்திவிட்டு திடீரென எழுந்து கச்சான் கடைக்கு ஓடினான். அவன் அப்படியே போகப் போகிறான் என்று நினைத்த மாலாவிடம் கச்சான் பையைக் கொடுத்துவிட்டு ''என்ர தங்கச்சிய கோயிலுக்கு கூட்டிக் கொண்டுவந்தா, அப்பாட்ட ஐந்து ரூபா வாங்கி அவளுக்கு கச்சான் வாங்கிக் கொடுப்பன். இப்ப நீ இதை வாங்கிறாயா?'' என்று சொல்லிக் கொடுத்து விட்டுதன் பாதையில் நடந்தான்.

அவனது ஒவ்வொரு பதாச்சுவட்டையும் உற்று நோக்கிய மாலா என் வாழ் நாள் முழுவதும் இந்த அண்ணனின் பாதச் சுவட்டுக்காகவே அடியழிப்பேன் என்று மனதுக்குள் சத்தியம் செய்து கொண்டாள்.

தி.நடனசபேசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# பணத்துக்குள் புதையும் உயிர்கள்

திரைகடலோடியும் திரவியம் தேடு என்று முன்னோர்கூறிப் போய்விட்டார்கள். முன்பெல்லாம் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் தொழில் செய்த நம்மவர்கள் இன்று உலகம் பூராவும் பரந்து போய்க்கிடக்கிறார்கள்.

இக்கரையை விட அக்கரை மேலும் பச்சையாக இருக்கும் என்ற கனவுகளை வளர்த்துக்கொண்டு சென்றவர்களுக்கு, இந்தக் கரையை விட மகா மோசமான பல



அனுபவங்களும் கிடைத்திருக்கின்றன. என்றாலும் வெளிநாட்டு மோகம் என்பது யாரையும் விட்டபாடாக இல்லை.

இந்த அக்கரைப் பச்சை எம்மவர்களுக்கு மட்டும் தான் என்றில்லை. குறிப்பாக தெற்காசிய நாட்டவர்களான இந்தியர்கள், பங்களாதேஷ் நாட்டவர்கள், பிலிப்பைன்ஸ் நாட்டவர்கள், பாகிஸ்தானியர் போன்றவர்களுக்கும் அக்கரைப்பச்சைமயக்கம் உண்டு.

அதிலும் மத்திய கிழக்கு நாடுகளையே இவர்கள் அதிகம் மொய்க்கிறார்கள். சம்பளம் குறைவாக இருந்தாலும், தம் சொந்த மண்ணில் கிடப்பதை விட பல மடங்கு ஊதியம் கிடைக்கிறது என்கின்ற காரணத்தால், தமக்கு அநியாயச் சம்பளம் கிடைக்கின்றது என்பதை இவர்கள் பொருட்படுத்துவதே இல்லை.

எண்ணெய் வள நாடுகளான மத்திய கிழக்கு நாடுகளுக்கு அதிகளவிலான தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள். அரசு நேரடியாக இவர்களைப் பணிக்கு அமர்த்துவதில்லை. இவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டுகள் மூலமே பணிகள் பூர்த்தியாக்கப்படுகின்றன. அரசு தாராளமாக இவர்களுக்குப் பணம் கொடுத்தாலும், இந்த ஏஜெண்டுகளின் நியமனத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் நன்றாகவே ஏமாற்றப்படுவதுண்டு. இவர்கள் நியாயமான சம்பளத்தைப் பெறுவதில்லை. சம்பளக் கொடுப்பனவும் இழுபடுவதுமுண்டு.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மத்திய கிழக்கில் உள்ள அரபு நாடுகளில், எண்ணெய் வளம் மிக்க ஒரு பணக்கார அரபு நாடாகத் திகழ்கிறது. இதன் தலைமை நகரமான துபாய் புகழ்பெற்ற நகரமாகத் திகழ்கிறது.




இங்குள்ள விமான நிலையத்திலுள்ள சுங்கத் தீர்வையற்ற வியாபார நிலையம் எண்ணுக் கணக்கற்ற பயணிகளைத் தினமும் கவர்ந்து இழுத்து வருகிறது.

இந்த விமான நிலையத்தை விரிவாக்கும் பணி இப்பொழுது மும்முரமாக இடம் பெற்றுவருகின்றது. இங்கே தான் அசம்பாவிதம் இடம்பெற்றிருக்கிறது.

நிர்மாணப் பணி நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில், தடுப்புச்சுவரொன்று சரிந்து வீழ்ந்ததில் ஐவர் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். மேலும் 12பேர் காயங்களுடன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த விபத்தில் இறந்தவர்கள், காயப்பட்டவர்கள் எல்லோருமே தெற்காசிய நாட்டவர்கள் என்று அறியப்படுகின்றது. 4.1 மில்லியன் டொலர் தொகையை அள்ளி வீசி துரித கதியில் இடம்பெற்றுக் கொண்டிருந்த இந்தப் பணியில், அநியாயமாக உயிர்ப்பலிகள் இடம்பெற்றிருக்கின்றன.

குடும்பத்தில் உள்ள ஏழ்மை நிலையால், பணம் சம்பாதித்துக் குடும்பத்தை நிமிர்த்த வரும் ஏழை வர்க்கத்தினர் தான் அதிகமாக இங்கு படையெடுத்து வருகிறார்கள். சில அநியாயங்கள் நடந்தாலும், தட்டிக்கேட்டு, தமது வேலையை இழக்க இவர்கள் தயாராக இல்லை. இவ்வாறு பத்துத் தொழிலாளிகள் தமது வேலையை விட்டு நின்றுவிட்டால், அவர்கள் இடத்தை நிரப்ப நாற்பது பேர் வரிசையில் தயாராக இருப்பதுண்டு.

இந்தத் தொழிலாளர்களின் மரணங்கள் குறித்து உடனடி விசாரணைகள் மேற்கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப் போவதாக விமானத்துறை அமைச்சு உறுதியளித்திருக்கிறது. இந்த அமைச்சுக்குப் பொறுப்பாக இருப்பவர் வேறு யாருமல்ல. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆளுநருக்கு இவர் மாமன்முறை என்கிறார்கள். எனவே, இவர் பேச்சு எடுபடும் என்பதும், சில பெரிய தலைகள் உருளப் போவதும் நிச்சயம். இந்த ஒப்பந்த நிறுவனங்களை இந்த நாட்டிலுள்ள பெரிய தலைகள் தான் நடத்துகின்றன என்பது இன்னொரு குறிப்பிடத்தக்க விடயம்.

இந்த விமான நிலைய விரிவாக்கப் பணியை மூன்று தனியார் நிறுவனங்கள் பொறுப்பேற்று நடத்துகின்றன என்று கூறப்படுகிறது. தொழிலாளிகளின் பாதுகாப்பு மிக முக்கியமானது என்று கூறும் அமைச்சர், உடனடி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். இந்த நிறுவனத்துக்குச் சொந்தமானவர்கள் பெரிய இடத்துப் பிரஜைகள் என்பதால் இவர்கள் பெயர்களைப் பத்திரிகைகள் வெளியிடுவதில்லை. தமக்கு எதற்கு வீண் வம்பு என்று இருந்துவிடுகின்றன. தொழில் அமைச்சு இந்த விடயத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கப் போவதாகக் கூறியிருக்கிறது. துபாய் நகருக்கு அவப் பெயர் வருவதை நாம்பார்த்துக்கொண்டிருக்க தயாராக இல்லை என்கிறது அமைச்சு.

2006ஆம் ஆண்டில் பணி பூர்த்தியடைந்து விட வேண்டும் என்ற திட்டத்துடனேயே பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. பிரெஞ்சு நிறுவனம் ஒன்றின் வடிவமைப்பிலேயே இந்த நிர்மாணப்பணி நடந்துகொண்டிருக்கிறது. பணி முடிவடைந்ததும் ஒரு கிலோ மீற்றர் நீளமான சிறகுகளுடன் ஓர் இராட்சத விமானம் தரித்து நிற்பது போல கட்டடம் அமைந்திருக்குமாம். அநியாயங்கள் அவ்வப்போது தண்டிக்கப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால், பணபலம் என்ற ஒன்று வரும்போது, நியாயங்கள் கட்டிப்போடப்பட்டு விடுவதை நாம் எப்படித்தான் தடுக்க முடியும்? வெறும் பார்வையாளர்களாக கையைக் கட்டிக்கொண்டு பார்த்தபடி இருக்க வேண்டியதுதான்.




வாரிவன நடேஸ்வரர் சிவன் கோவிலில் சுவாமிக்கு நிழல் கொடுக்கும் திருவிழாக்குடை போல, டயலொக் GSM தமது பரந்த தொலைத்தொடர்பு வலையமைப்பால் உங்களுக்கு சிறந்த சேவையை வழங்கும்.

இப்போது யாழ்ப்பாணம், பருத்தித்துறை, பலாலி, சாவகச்சேரி, கோப்பாய், மானிப்பாய் ஆகிய இடங்களுக்கு டயலொக் GSM வலையமைப்பு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

டயலொக் GSM

எதிர்காலம் இன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 வயது பாலியல் விவகாரம் குடும்ப வாழ்வை பாதிக்குமா?

**கேள்வி:— ஆறு மாதத்திற்கு முன்னர் ஒரு மரக்கிளை ஒன்று என் தலையில் வீழ்ந்தது. வெளிக்காயங்கள் எதுவுமில்லை. ஆனால், அன்றிலிருந்து தலைவலி உண்டு. தலை வலி அதிகமாகும் போது தலைச்சுற்றும், வயிற்றுப்பிரட்டலும் ஏற்படுகின்றன. கண்ணுக்குள்ளும் வலி ஏற்படுகின்றது. வாசிப்பதோ, எவரோடும் பேசுவதோ எரிச்சலை ஊட்டுகின்றது. வைத்திய ஆலோ சனை தரவும்.**

பதில்:—தலையில் அடிபடுவதால் ஏற்படும் விபத்துக்களால் நூற்றுக்கு தொண்ணூறு வீதமானோருக்கு உயிருக்கு ஆபத்தான நிலைமைகள் ஏற்படுவதில்லை. ஒரு பத்து வீதமான இத்தகைய விபத்துக்கள் மூளையின் வெளிப்பகுதியிலுள்ள இரத்தக் குழாய்களை சிதைத்துவிடுவதால் இரத்தம் வெளியேறி மண்டை ஓட்டுக்கும், மூளைக்கும் இடையில் உறைந்து கட்டியாகிவிடுகிறது. இந்தக்கட்டி காலப்போக்கில் பெருத்து மூளையின் பகுதிகளுக்கு அழுத்தம் கொடுக்கிறது. இதனை SUB DURAL HAEMORHAGE என்பர்.

இதனை சத்திரசிகிச்சை செய்து உடனடியாக அகற்ற வேண்டும். இல்லையென்றால் இந்த இரத்தக் கட்டிகள் கொடுக்கும் அழுத்தத்தினால் மனிதனின் விசேட இயக்கங்களான சுவாசம், இருதய துடிப்பு போன்றவற்றின் மூளையில் உள்ள விசேட மையங்கள் (VITAL CENTERS) செயலிழந்து உயிராபத்து நேரிடலாம். அதேபோல சிலவேளைகளில் மூளையினுள் உள்ள இரத்தக்குழாய்கள் சிதைந்து ஏற்படும் SUB ARACHNOID HAEMORRHAGE எனப்படும் இரத்தப் பெருக்கினால் ஒரு சில மணிநேரத்தில் உயிராபத்து ஏற்பட வாய்ப்புண்டு.

முன்னர் சொல்லப்பட்ட SUB DURAL HAEMORRHAGE சிறிதாக இருக்கும் சில வேளைகளில் எதுவித நோய்க்குறிகளையும் காட்டாது. ஆனால், அவை உறைந்து கட்டியான பின்னர் மெல்ல மெல்ல நீர்த் தன்மையை உறிஞ்சி எடுத்து பெருக்க ஆரம்பிக்கும் போது தலைவலி, வாந்தி, திடீர் மயக்கம், கால், கை, வலிப்பு என்பன ஏற்படலாம். இவை ஓரிரு வாரங்களிலோ இல்லை சில மாதங்கள் கழித்தோ ஏற்படவாய்ப்புண்டு.

எனவே, இந்தக் குணங்கள் உங்களுக்கு ஏற்பட்டிருப்பதால் தகுந்த நரம்பு சிகிச்சை நிபுணரிடம் (NEUROLOGIST) ஆலோசனை பெறவும். எக்ஸ்ரே படம் மற்றும் C.T SCAN என்கின்ற விசேட பரிசோதனைகளில் உங்கள் நோய்க்கு மரக்கிளை விழுந்ததா காரணம் என்பதைக் கண்டறியலாம்.

அதே சமயம் மரக்கிளை தலையில் விழுந்ததால் CEREBRAL IRRITATION ஏற்படலாம். இது ஒரு பயங்கரமான நோயல்ல. மரக்கிளை தலையில் தாக்கியதால் மூளை அதிர்ச்சி அடைவதால் இது ஏற்படுகிறது. இந்த நோயும் உங்களுக்குத் தற்போது உள்ள குணங்குறிகளைத் தரக்கூடியது. இதற்குச் சாதாரண அமைதிதரும் SEDATIVE மாத்திரைகள் குணம் பெற உதவும். எந்தச் சிகிச்சைபெற முன்னரும் விசேட நரம்பியல் நிபுணரின் ஆலோசனை அவசியம்.

**கேள்வி: பெண் வயது 19. எனது 10 ஆவது வயதில் நான் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதாக தற்பொழுது தான் புரிகிறது. இதனால் நான் கன்னித்தன்மை இழந்திருப்பேனா? நான் திருமணம் செய்தால் எனக்கு நடந்த விஷயம் கணவனுக்குத் தெரிய வருமா? உண்மையறிந்ததிலிருந்து எனது மனம் பாடாய்ப்படுத்துகிறது. ஆலோசனை கேட்கிறேன்?**

பதில்: அறியாப்பருவத்தில் இப்படி பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்ட சிறுவர், சிறுமிகள் பற்றி இப்பொழுது தான் பல



செய்திகள் வெளிவருகின்றன. என்ன நடக்கின்றது என்பது புரியாமலே பலாத்காரத்திற்கு ஆளான இவர்கள், உங்களைப் போல் வயதும், அறிவும் வந்த பின்னர் புரிந்துகொள்கின்றார்கள்.

இன்று பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய (AWARESS) பாடசாலை மட்டத்தில். ஊடகங்கள் மூலமாக பிரசாரப்படுத்தப்படுவதால் உங்களுக்கு சிறுவயதில் ஏற்பட்ட சம்பவம் போன்று இனிமேலும் சிறுபராயத்தினருக்கு ஏற்படும் வாய்ப்புகள் குறைவாகிவிடும்.

இனி உங்கள் பிரச்சினைக்கு வருவோம். கன்னித்தன்மை என்பது கன்னிச்சவ்வு சிதையாமல் இருக்கும் நிலை என்பது மிக மிகப்பழைய விதி. இன்று பெண்கள் ஆண்களைப்போல் சரிசமமாக நீச்சல், தடகள விளையாட்டுகள், கிரிக்கெட், உதை பந்து என்று சகல விளையாட்டுத் துறைகளிலும் போட்டிபோடும் போது கன்னிச்சவ்வு சிதையும் சந்தர்ப்பங்கள் அதிகம்.

மேலும் இன்றைய ஆண்களும் இதனை அறிவர்.

முன்னைய காலத்தைப்போல் முதலிரவு முடிந்ததும் படுக்கைவிரிப்பில் சிந்திய இரத்தச் சொட்டுக்களைக் கொண்டு பெண்ணின் கன்னித்தன்மையை கணக்கிடும் பெரியவர்களும் இன்று விசாலமனத்தினராய் இந்த தேவையற்ற பரிசோதனைகளைக் கணக்கெடுப்பதில்லை.

எனவே, நீங்களாகவே உங்கள் கணவரிடம் நடந்ததை சொன்னால் ஒழிய வரப்போகும் கணவர் உங்கள் கன்னித்தன்மையைச் சந்தேகிக்கப்போவதில்லை.

அடுத்தது வரப்போகும் கணவரிடம் அறியாப்பருவத்தில் புரியாமல் உங்கள் சக்திக்கு அப்பால் நடந்த ஒரு விஷயத்தை சொல்வதால் நன்மையை விட தீமையே அதிகம் ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே, அந்த சம்பவத்தை ஒரு கெட்ட கனவாக நினைத்து மறந்துவிடுங்கள். இப்படி மறைக்கப்படவேண்டியதும், மறக்கப்படவேண்டியதுமான விஷயத்தை திரும்ப திரும்ப மனதில் போட்டு அசைமீட்டுக் கொண்டிருந்தீர்களானால் அது நிச்சயம் உங்கள் திருமணவாழ்க்கையைப் பாதிக்கச் செய்யும்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு – 14

ஒவ்வொரு தடவையும், கணவனோடு உறவுகொள்ளும் சமயத்தில் இந்த வேண்டாத நிகழ்ச்சி நினைவுக்குவருவதால் உங்கள் பால் உறுப்பு திடீரென தடைப்பட்டு, சுரப்புகள் நின்று வலியோடு கூடிய உறவு ஏற்படலாம். இதனை DYSPAR என்பார்கள்.

இது இப்படியே தொடர்ந்தால் பாலுறவில் வெறுப்பேற்பட்டு FRIGIDITY என்ற மனோ நிலை ஏற்படும். இதனால் குடும்ப வாழ்வு சிதறும். இதற்கு வைத்தியம் செ[illegible] மருத்துவரிடம் கணவர் அழைத்துச்சென்றால் முதலில் மருத்துவர் உங்களிடம் கேட்கும் கேள்வி சிறுவயதில் நீங்கள் விரும்பாமல் ஏதாவது பாலுறவு ஏற்பட்டதா? என்பதே.

எனவே நடந்தவற்றை மறந்து புதிய புதுமைப் பெண்ணாக வாழக் கற்றுக் கொள்ளுங்கள். உடலில் ஏற்பட்ட காயத்தை விட கன்னிச்சவ்வு சிதைவைவிட உங்கள் மனநிலையில் ஏற்பட்ட காயம் மாறாமல் இருப்பதனால் தான் பிரச்சினை. எனவே, நீங்கள் தூய்மையானவர். கெட்டுப்போகவில்லை என்று தினமும் கூறிவாருங்கள். புதுத்தெம்பை அடைவீர்கள்.

இந்தியா – பாகிஸ்தான் பிரிந்தபோது ஏற்பட்ட பிரச்சினையில் பல இந்துப் பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள். அப்பொழுது மகாத்மா காந்தி ஒரு அறைகூவல் விடுத்தார். ''இந்தப் பெண்கள் மனதால் கெடாதவர்கள். சூழ்நிலையால் கற்பிழந்தவர்களாக இருந்தாலும் மனதால் கன்னிப்பெண்கள். இவர்களை நமது ஆண்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்றார். அவரது ஆணையை ஏற்று ஆயிரக்கணக்கான பெண்களுக்கு வாழ்க்கை கொடுத்தார்கள் அன்றைய இந்திய இளைஞர்கள். எனவே, மனதால் கெடாதவரை கற்பு என்றும் கறைபடாது.

# இது ஆஸ்திரேலிய அழகு

படத்தில் நீங்கள் பார்க்கும் பெண்மணி ஆஸ்திரேலியாவின் சார்பில் மிஸ் யூனிவர்ஸ் பட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஜெனிபர் ஹாக்கின்ஸ். இவர் மிஸ் யூனிவர்ஸ் போட்டியில் கலந்து கொள்ளும் முன்பாகவே இன்னொரு முக்கிய பணியும் இவருக்கு வந்துவிட்டது.



ஆஸ்திரேலியா நாட்டில் மட்டும் சின்னதும் பெரியதுமாக 300க்கும் மேற்பட்ட கடற்கரைகள் உள்ளன. இங்கே நீந்திக் குளிக்கவும் சர்பிங் விளையாடவும் வாரவிடுமுறை நாட்களில் லட்சக் கணக்கில் மக்கள் கூடுவதுண்டு. இப்படி வருகிறவர்கள் சிலரை, சென்னை மெரீனா கடற்கரை அலை அடித்துக் கொண்டு போய் காவு வாங்குவது போல் ஆஸ்திரேலியாவிலும் கடல் அலைகள் மனித உயிர்களை அவ்வப்போது கபளீகரம் செய்வதுண்டு.

இதை தடுப்பதற்காக 33ஆயிரம் உறுப்பினர்களைக்கொண்ட ஒரு பெரிய சேவைக் குழுவை ஆஸ்திரேலிய அரசாங்கம் நியமித்துள்ளது. அவர்களில் ஒருவர் தான் ஜெனிபர் ஹாக்கின்ஸ். இந்தக் குழு அமைக்கப்பட்டு 2 வாரங்கள் தான் ஆகின்றன. அதற்குள் 9 ஆயிரம் பேரின் உயிர்களை இக்குழு காப்பாற்றியுள்ளது. தவிர 25 பேருக்கு முதலுதவி செய்து அனுப்பியிருக்கின்றனர். எல்லாம் இந்த அழகுப்புயல் வந்த வேளையோ, என்னவோ?

# பெண்களால் துன்பம்......

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பிரித்துக் கொண்டு சென்றுவிட்டனர். அவருக்கு வேறு கட்டாயத் திருமணமும் செய்துகொடுத்து விட்டனர். தன்னையும் தனது காதலியையும் சேர்த்து வைக்குமாறு அவர் ஆணைக் குழுவினரிடம் கெஞ்சிக் கொண்டிருக்கிறார். இது குறித்து நீதிமன்றத்தில் வழக்கும் நடந்துவருகின்றது.

மத்தியப் பிரதேசத்தில் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள ஆண்களிடம் இருந்து ஆணைக்குழுவுக்கு ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இந்தப் பழங்குடியினரின் வழக்கப்படி பெண்கள் தங்கள் திருமணத்தைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ளலாம். விவாகரத்துச் செய்து கொள்ளவும் மறுமணம் செய்துகொள்ளவும் பெண்கள் எளிதில் தீர்மாணிக்கும் உரிமையும் இருக்கிறது.

இவர்களின் திருமண முறையில் சீதனத்துக்குப் பதிலாக ஒரு ஆண் திருமணம் செய்யவேண்டுமானால் பெண்ணுக்கு பணம் கொடுக்கவேண்டும். பொருளாதார ரீதியிலும் பெண்கள் சுதந்திரமாக இருக்கிறார்கள். இந்த நிலையில் பழங்குடியின ஆண்கள் பலர் பெண்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

அதில் கட்டுப்பாடின்றி பெண்கள் பலருடன் பாலியல் உறவு வைத்துக்கொள்வது, திருமணத்திற்காக அதிகப் பணம் கேட்பது, குழந்தைகளைப் பராமரிக்க ஆண்களை நிர்ப்பந்திப்பது என்று ஏராளமானவற்றைப் பட்டியலிட்டுள்ளனர்.

இப்படி நிறைய முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்தாலும், இவற்றுக்கு நடவடிக்கை எடுக்க அதிகாரம் ஏதுமில்லை என்று பெண்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மனித உரிமைகள் குழுக்கள் மூலம் இவற்றுக்குத் தீர்வு காணமுடியுமா என்பது பற்றியும் அந்த அமைப்பு ஆராய்ந்து வருகின்றது.

ஆண் ஆதிக்க மனப்பான்மையில் வளர்ந்த ஆண்களுக்கு இப்படிப்பட்ட சின்னச்சின்ன விடயங்கள் எல்லாம் கொடுமைகளாகத் தெரிகின்றன. உண்மையில் இவை பிரச்சினைக்குரிய விவகாரங்களே அல்ல என்று வாதாடும் பெண் உரிமையாளர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

யார் எதைச் சொன்னாலும் செய்தாலும் பெண்களிடம் இருந்து எங்களைக் காப்பாற்றுங்கள் என்று கதறுகிறார்கள் மத்தியப் பிரதேச ஆண்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## போட்டிக்குழு பிரமுகர் போலியான பிரதியா?

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் அங்குரார்ப்பணக்கூட்டத்தில் இடம் பெற்ற ஒரு சம்பவம் மரநாயகனின் கூட்டத்தில் பெரும் கலகலப்பையும் சங்கடத்தையும் ஏற்படுத்திவிட்டதாம்.

ஹைகொமாண்டின் ஆலோசனைப்படி அம்மையாருக்கு ஓலை அனுப்பிவிட்டு, பதிலுக்காக காத்துக் கொண்டிருந்தாராம் மரநாயகன்.

ஆனால், மாநாட்டு மண்டபத்தில் தோன்றிய ஒருமனிதர் "எங்கள் தலைவர் கொழும்புக்கு வெளியே இருப்பதால் தலைவரின் சார்பில் இங்கு கலந்து கொள்கிறேன்" என்று ஒருபோடு போட்டார்.

இவரைக் கண்டதும் சபையிலும் ஒரு கலகலப்பு. 'இந்தமனிதர் மரநாயகனின் அதிருப்தியாளர் அல்லவா? இவர் எப்படித் தலைவரின் சார்பில் இங்கு பங்கு கொள்ள முடியும்?' என்று கிசுகிசுத்தனர்.

வந்தவரும் சும்மா இருக்கவில்லை. 'எந்த ஒரு சமாதானப் பேச்சிலும் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்து கொள்ள வேண்டும். அதுதான் முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு' என்றும் கூறிவிட்டார்.

கெட்டிக்காரன் புழுகு எட்டுநாளில் என்பார்கள். ஆனால், இந்த மனிதன் பேசிய சூடு ஆறுவதற்கு முன் கட்சியின் மறுப்பு வந்துவிட்டதாம். கட்சிக்கோ அல்லது கட்சித் தலைவருக்கோ தெரியாமலும், அனுமதி பெறாமலும் தன்னிச்சையாகக் கலந்து கொண்ட அவர் கட்சியின் பிரதிநிதி அல்ல என்றும் மறுப்பு வெளிவந்து விட்டது.

ஆனால், இதில் ஒரு புதுமை என்னவென்றால், கட்சிக் கோட்பாட்டுக்கு மாறாக நடந்தனர் எனப் பல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, கட்சியில் இருந்தும் வெளியேற்றப்பட்டு அலைந்தனர்.

ஆனால், கட்சியின் கொள்கைகளுக்கு தலைகீழாக கட்சியின் கோட்பாடுகளை உதாசீனப்படுத்திய நபருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மாறாக ஏதோ சதி செய்யப்பட்டுள்ளது. சில சதிகாரர்களின் வலைக்குள் சிக்கிவிட்டார் பிரதித்தலைவர் என்று தலைமை சக்கைக்கட்டு கட்டுகிறது.

அப்படியானால் பிரதி என்று கூறிக்கொண்டு ஜனாதிபதியின் முன் நின்ற நபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் துணிவு தலைமைக்கு இல்லையா? அல்லது தலைமைத்துவத்தின் ஏதாவது இரகசியங்கள் பிரதியானவரிடம் சிக்கவிட்டனவா? என்று ஏற்கனவே தலைமையால் பாதிக்கப்பட்ட கூட்டாளிகள் கேள்வி எழுப்புகின்றனர். இதுவும் நியாயமான கேள்விதான்.

## உள்வீட்டு விடயத்தை அம்பலப்படுத்தலாமா?

அண்மையில் தனியார் ஊடகம் ஒன்றில் அடித்த மின்னல் வடபுலக்கூட்டில் சிலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாம்.

காரணம் என்னதெரியுமா? அந்த மலையக முத்தருடன் மேடையில் மோதிக்கொண்ட போது பட்டும்படாமல் தமது கூட்டுக்குள் உள்ள ஒருவரையும் சீண்டிவிட்டாராம்.

அப்படி யார் சீண்டியது? என்னதான் அப்படிக் கூறிவிட்டார்? என்கிறீர்களா?

மின்னல் மேடையில் தோன்றிய பிரேமானவர், முத்தர் கூறிய எல்லா விடயங்களையும் அப்படியே ஒப்புக்கொண்டது போலவும், வேந்தனன் கூறியது தப்புஎன்பது போலவும்தப்புத்தாளம்போட்டுவிட்டாராம்.

இதைச்சாட்டாக வைத்துக்கொண்ட மலை முத்தரின் கூட்டத்தார் பிரேமையானவரின் வார்த்தைகளை அப்படியே போகும் இடங்களில் எல்லாம் ஒப்பித்து வருகின்றார்களாம்.

இது பிரேமையானவருக்கு தர்மசங்கடத்தையும் , வேந்தனாருக்கு தலையிடியையும் கொடுத்துவிட்டதாம்.

பிள்ளையார் பிடிக்க குரங்காய்ப் போன கதையாகிவிட்டதாம்

## அட்டகாசம் பண்ணினால் அரை மந்திரி முஷ்டியை முறுக்கினால் முழுமந்திரி

எந்த நேரத்திலும் அதியுயர் மன்றத்தில் எல்லோரிடமும் அடிக்கடி மொத்துவாங்குவதும் முஷ்டியை முறுக்கிக்கொண்டு காடைத்தனம் பண்ணுவதும் அமைச்சரவைக்கு ஒரு சிறப்புஅம்சம் என்று கிண்டல் அடித்துக்கொண்டே வந்தார் பச்சை வயலின் பூமிக்கு அதிபதியாக இருந்து ஆண்ட பல் டாக்டர்.

"அப்படியான அதிர்ஷ்டம் யாருக்கு அடித்து இருக்கு?" என்று புரியாமல் கேட்டோம்.

"என்ன சார்! இதுகூடத் தெரியாமல் இருக்கிறீங்க. இந்த அம்மாவோட ஆட்சியில நீலக் கட்சியில் இருப்பவர்கள் எல்லோருமே முழுமந்திரியாகவும் அரைமந்திரியாகவும் மாறிவிட்டனர்.

பல்டி அடித்த பைலாவுக்கும் மந்திரிப் பதவி. முஷ்டியை முறுக்கிக்கொண்டு அடிதடியில் இருக்கும் மேகத்தில் விண் எனத் தெறிக்கும் சில்வாவும் அரைமந்திரியாகிவிட்டார்."

"என்ன ஐயா சொல்லுறீங்க? அந்த ஆளுக்குத் தன் தொகுதியில் சீட்டும் இல்ல. ஆளுங்களோட ஓட்டும் இல்ல. கடைசியாக கட்டிய பொண்டாட்டி விட்டுக்கொடுத்ததினால் தானே இந்த சபைக்கே வந்தார்."

"உங்களுக்கு ஒருவிடயம் தெரியுமா? இந்த மனிதனாலே சபையிலும் ,வீட்டிலும் குழப்பம்.எங்கயாவது கூட்டங்களுக் குப் போனால் அங்கேயும் குழப்பம். இதைப் பொறுக்க முடியாத கட்சிக்காரர்களும் அம்மையாரிடம் போட்டுக்கொடுத்து விட்டார்களாம்.

சபையில் கடந்த அமர்வின் போது எதிர்க்கட்சிக்காரர் ஒருவர் இவரைப் பார்த்து 'குரைப்பதற்காகவே உம்மை இங்கு கொண்டுவந்து கட்டிப்போட்டு இருக்காங்க' என்று அப்பட்டமாகவே கூறிவிட்டார்.

ஆனால், நடந்தது என்ன தெரியுமா? இந்த மேக விண்ணர் அம்மாவின் செல்லப்பிள்ளை.அம்மா இருப்பதால் தானே இப்படித் துள்ளிக்குதிக்கின்றார். பொறுப்புக்களைக்கொடுத்தால் அடங்கிவிடுவார் என அரைமந்திரியாக்கிவிட்டாராம். நாயின் வாலை நிமிர்த்த முடியுமா? என்று பார்ப்போம்" எனக் கூறிவிட்டு நடையைக்கட்டி விட்டார் பல் டாக்டர்.


**மணமகள் தேவை**

தனியார் துறை / Goverment DEPT / Bank இல் உத்தியோகம் பார்க்கும் மணமகன் மாருக்கும், வெளிநாடுகளில் PR உடன் வசிக்கும் வரன்களுக்கு Colombo / மலைநாடு / வடகிழக்கைச் சேர்ந்த RC / இந்து மணமகள்மார் தேவை.

மஞ்சு திருமண சேவை.
NO. 9. NELSON PLACE, COLOMBO - 06.
E.Mail: manju 1990 @yahoo.com.
Tel: 0112 - 361813.

**பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPY)**

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை விணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம்.ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம்(PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**

செப்டெம்பர் 22 - 27 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

**வவுனியாவில்...**

ஒக்டோபர் 09 - 10 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

**யாழ்ப்பாணத்தில்...**

ஒக்டோபர் 12 - 17
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளுங்கள்

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

உ
சிவமயம்
**ஓம் சங்கராய பரணம்**





தமிழ் உலக மக்களுக்கு இன்றும், என்றும் எனது பரிபூரண துர்க்கையின் ஆசீர்வாதங்கள்.
தெய்வத்தால் ஆகாதது ஒன்றும் இல்லை, உங்கள் குறைகள் என்ன?
குடும்பப் பிணக்கா, பிரிந்தவர் ஒன்று சேர வேண்டுமா? உங்கள் பிள்ளைகள் நல்வாழ்வு பெற வேண்டுமா? இன்னும் உங்கள் குறை நிறைகளுக்கு.

வெளிநாட்டவருக்கு விஷேட சலுகை உண்டு
இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை.

**பேராசிரியர். டாக்டர். பி.கே. சாமி.**
இல. 62, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு – 13.
T.Phone : 2342463, 2342464, 2344832, 2431137, 2449110.
Mobile: 0777 588405, 0777 388860
Fax: 0094112344831

**UNIVERSITY OF MADRAS**
**சென்னை பல்கலைக்கழகம்**
Estd. 1857

சென்னை பல்கலைக்கழகத்தின் மூன்றாண்டு தொலைதூர பட்டப்படிப்புக்கள் இலங்கையில் !

**3 Year Degree Programme UNDERGRADUATE Level**

| | |
|---|---|
| B.Com | - Bachelor of Commerce |
| B.B.A | - Bachelor of Business Administration |
| B.B.M | - Bachelor of Bank Management |
| B.C.A | - Bachelor of Computer Application |
| B.Sc | - Mathematics |
| B.Sc | - Psychology |
| B.A | - Public Administration |
| B.A | - Economics |
| B.A | - English Literature |
| B.A | - Tamil Literature |
| B.Music | |

**Eligibility :**

**OPEN UNIVERSITY STREAM**
G.C.E (O/L) with a pass in English & Age above 18

**REGULAR STREAM**
G.C.E (O/L) with a pass in English
G.C.E (A/L) 3 passes
(Arts, Commerce, Maths & Bio-Science)

**Admission Closing Date : 31-10-2004**

விபரங்களுக்கு :
ASIAN BUSINESS COLLEGE
Study Centre
Institute of Distance Education
UNIVERSITY OF MADRAS

200, George R. De Silva Mawatha,
Colombo-13.
Tel : 4616549 / 4613225

Information & Spot Admission Centre :
Wellawatta - ✆ : 4512410
Jaffna. ✆ : 021-2225677

**INSTITUTE OF BANKERS OF SRILANKA**

MARCH 2005 பரீட்சைகளுக்கான தமிழ் மொழி (Tamil Medium) தபால் மூலமான

**Distance Learning Programme**

வங்கி ஊழியர்கள் (Bankers), வங்கி சாரா ஊழியர்கள் (Non-Bankers) மற்றும் ஏனையோரும் விண்ணப்பிக்கலாம்.

கல்வித் தகைமைகள் :
: G.C.E. A/L (Certificate of Banking) (CBF)

மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்க.
(சுய விலாசமிடப்பட்ட கடித உறையுடன்)

**HARVERD COLLEGE OF BUSINESS**
P.O. BOX: 680, COLOMBO.
☎: 071-4803880, 0777-317


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

ஒக்டோபர் 17 – 23, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com

# இந்தியாவின் நோக்கம்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையேயான பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று தமது நான்கு நாள் இலங்கை விஜயத்தின்போது சுவிஸ் வெளிவிவகார அமைச்சர் மிசெலின் செல்மரே கோரிக்கை விடுத்துள்ளார்.

பேச்சுவார்த்தையை ஆரம்பிக்காவிட்டால் யுத்தநிறுத்தம் முறியும் ஆபத்து ஏற்படலாம் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அதேசமயம் கடந்த வாரம் இந்தியாவுக்கு விஜயம் செய்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சரும், இலங்கை சமாதான முயற்சிக்கு அனுசரணைப்பணி வழங்கும் நோர்வேக் குழுவின் உயர்மட்டப் பிரதிநிதியுமான விடார் ஹெல்கிஸனும் இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து கவலை வெளியிட்டுள்ளார்.

''இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நின்று போய் சுமார் 16 மாதகாலம் கடந்த நிலையில் இலங்கையின் சமாதான முயற்சிகளின் இன்றைய யதார்த்த நிலை மிகவும் கவலைதருவதாக இருக்கிறது'' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடார் ஹெல்கிஸன் தனது இந்திய விஜயத்தின்போது இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர்ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேச்சு நடத்தி உள்ளார்.

கடந்த வாரம் இந்தியாவுக்கு விஜயம் செய்த ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் கே. என். திக்ஷித், பிரதமர் மன்மோகன்சிங் உட்பட அனைத்துத் தலைவர்களுடனும்பேச்சு நடத்தினார்.

இலங்கையின் சமாதானமுயற்சியில் தற்போதைய நிலை, அதனை முறியவிடாமல் முன்னெடுப்பதில் எதிர்கொள்ளவேண்டிய சவால்கள் குறித்து இந்த சந்திப்புக்களின்போது பிரதானமாக ஆராயப்பட்டதாகத் தெரிகிறது.

புதுடில்லியில் விடார் ஹெல்கிஸன் – ரணில் சந்திப்பு தற்செயலானதா அல்லது ஏற்கனவே திட்டமிடப்பட்டதா என்பது தெரியவரவில்லை. ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தால் ரணிலின் இந்திய விஜயம் ஏதோ ஒரு வகையில் முக்கியமானதாக இருக்கலாம் என்று நம்பமுடியும்.

2002 ஆம் ஆண்டு செப்டெம்பர்மாதம் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள்ஆரம்பித்த நாளிலிருந்து, சமாதானப்பேச்சின் முன்னேற்றங்கள் குறித்து இலங்கை அரசும், நோர்வேத் தரப்பும் இந்தியாவுக்குத் தெரியப்படுத்தி வருகின்றன.

நோர்வே சமாதான அனுசரணையாளர்கள் அடிக்கடி இந்தியா சென்று வருகின்றனர். அதேபோன்று இலங்கை அரசியல் தலைவர்களும் இந்தியா சென்று இந்தியத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

ஆனால், இந்தச் சந்திப்புக்கள் தற்பொழுது இருந்துவரும் முட்டுக்கட்டை நிலையைத் தீர்ப்பதற்கு உதவி இருக்கின்றனவா என்பதே இன்று எழும் முக்கிய கேள்வி ஆகும்.

2002 பெப்ரவரி 24ஆம் திகதி அமுலுக்கு வந்தயுத்த நிறுத்த ஒப்பந்தம் எந்த நேரமும் முறிந்துபோகும் நிலையில் அமுலில் இருந்து வருகிறது. தற்போதைய நிலைமை நீடித்தால் யுத்த நிறுத்தம் முறிவடைந்து போகலாம் என்று புலிகள் அடிக்கடி எச்சரித்துவருகின்றனர். கடந்த ஆண்டு ஏப்ரலுக்குப் பின்னர் சமாதானப் பேச்சுக்கள் இன்னும்நடைபெறவில்லை.

இந்தநிலையில் முட்டுக்கட்டை நிலையை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் யோசனை எதையாவது இந்தியா இதுவரை தெரிவிக்கவில்லை; தெரிவிக்கக்கூடிய நிலையிலும் இல்லை. இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா இதய சுத்தியுடன் இல்லை என்பதையே இது காட்டுகிறது.

முதலில் தனது நலனையே இந்தியா சிந்திக்கிறது. இலங்கை இனப்பிரச்சினைத் தீர்விலும் தனது நலனைப் பாதிக்காத தீர்வையே அது விரும்புகிறது.

# மறுக்கிறது சிங்களம்

இவ்வளவு பேரழிவுகள்,போரழிவுகள் ஆகியவற்றுக்குப் பின்பும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் எண்ணம் தென்னிலங்கையில் ஏற்பட மாட்டாது. கடந்த வாரம் கண்டியில் இடம்பெற்ற சம்பவம் இதனை உணர்த்துகிறது.

தற்போதைய அரசியல்நிலை மற்றும் விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை ஆகியவை குறித்து மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளுடன் பேசுவதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் கண்டி சென்றிருந்தனர்.

இவர்களைச் சந்திப்பதற்கு அஸ்கிரிய பீடாதிபதி மறுத்துவிட்டார். மல்வத்தை பீடாதிபதி மட்டும் இணங்கினார்.

எம்.பிக்களான இரா.சம்பந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவநாதன், கிஷோர்விநோதலிங்கம், சிவாஜிலிங்கம், கனகசபை பத்மநாதன், தம்பிப்பிள்ளை கனகசபை ஆகியோர் கூட்டமைப்புக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

மல்வத்தை மகாநாயக்கரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திக்கப்போகிறார்கள் என்ற தகவல் வெளிவந்தபோது, ஏதாவது நல்ல காரியத்துக்குத்தான் என்று பலரும் நம்பினார்கள்! 'சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க ஒத்துழையுங்கள்' என்று மகாநாயக்கர் வேண்டுகோள் விடுப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், எதுவுமே அப்படி நடைபெறவில்லை. வெறும்ஏமாற்றம்தான்.

மல்வத்தைப் பீடத்துக்குள் சென்று பீடாதிபதி வண திப்பட்டுவாவே சித்தார்த்த ஸ்ரீ சுமங்கள தேரரைச் சந்தித்து பேசிக் கொண்டிருந்த போதே வெளியே எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

ஜாதிக ஹெல உறுமயவின் பிக்குகளும் ஜே.வி.பியின் நாட்டுப் பற்றாளர் இயக்க உறுப்பினர்களுமே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மல்வத்தை வளாகத்தில் இருந்து தமிழ் எம்.பிக்கள் வெளியேற முடியாமல் வீதியில் படுத்து மறியலிலும் ஈடுபட்டனர்.

இத்தனைக்கும் மல்வத்தை மகாநாயக்கரும், எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போன்று இந்த சந்திப்பின்போது பழைய சம்பவங்களைக் கிளறியே பேசினார். அது மட்டும் அல்ல, ஜனாதிபதியினால் அமைக்கப்பட்டு தற்பொழுது பிசுபிசுத்துப்போய் உள்ள தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலில் இணைந்து செயலாற்றும்படி. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு ஆலோசனை வழங்கி இருக்கிறார். இவற்றைக் கேட்கத்தான் தமிழ் எம்.பிக்கள் கண்டி செல்ல வேண்டுமா?

தேசிய ஆலோசனைக்கவுன்ஸில்யோசனையைப் புலிகள் ஏற்கனவே நிராகரித்துவிட்டனர். சமாதான முயற்சிகளை இழுத்தடிக்கும்



நோக்கம் கொண்டது என்று கூறி ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த்தேசியக் கூட்டணி உட்பட பெரும்பாலான எதிர்க்கட்சிகள் நிராகரித்து விட்டன.

சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசுக்குள் குடுமிப்பிடியும், முரண்பாடும் நிகழ்கின்றன. இதனைத் தீர்த்து வைக்கமுடியாத நிலையில், ஜனாதிபதித் தேர்தல் வரை காலத்தை இழுத்தடிக்கும் நோக்கம் கொண்டதே தேசிய ஆலோசனைக் கவுன்ஸில்.

அத்துடன் ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட சர்வ கட்சி மாநாட்டை ஒத்தது இது.

சர்வ கட்சி மாநாட்டினால் எந்த ஒரு பயன் தரும் விளைவும் ஏற்படவில்லை.

இவற்றை எல்லாம் நன்கு உணர்ந்து– மத்திய கிழக்குப்பிரச்சினைத் தீர்வின் பாணியில்– புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் நேரடிச்சமாதானப் பேச்சுக்களை நோர்வே ஆரம்பித்திருந்தது.

மத்திய கிழக்குப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் அனைத்து மத்திய கிழக்கு நாடுகளும் நடத்திய வட்ட மேசை மாநாடு தோல்வி அடைந்த நிலையிலேயே அரபாத் தலைமையிலான பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்தையும் இஸ்ரேலையும் பேசவைத்து ஒஸ்லோ ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு நோர்வே வழி கோலியது. தற்பொழுது ஜனாதிபதி தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் என்ற நிலைக்குச் செல்வது இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியை பின்னுக்குத் தள்ளும் நடவடிக்கை ஆகும். இது வெற்றி அளிக்கப்போவதில்லை. தமிழ் மக்கள் முழு உரிமைகளுடன் வாழ்வதற்கு சிங்கள தேசம் இணங்கும் நிலைமை இல்லை.

# புலிகள் – முஸ்லிம் தலைவர்கள் சந்திப்பு

## காலத்தின் கட்டாயத் தேவை

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேச்சு நடத்துவதன் மூலமே முஸ்லிம்களின் உரிமைகள், அபிலாஷைகள் மற்றும் பாதுகாப்பு போன்றவற்றை உறுதிப்படுத்த முடியுமெனவும்,அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் மீண்டும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.



பிரபா

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்,தேசிய ஐக்கிய முன்னணி( நுஆ) ஆகிய இரு கட்சிகளும் இந்த நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றன. புலிகளுடன்பேச்சு நடத்தப்பட்டால் மாத்திரமே முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமே தவிர வேறு எந்த சக்திகளுடனும் பேசுவதால் பயனில்லை என இந்த இரு கட்சிகளும் நம்புகின்றன.

''சிங்களப் பேரினவாதத் தலைவர்களை இனியும் நம்பிப் பயனில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதன் மூலமே முஸ்லிம் சமூகத்தின் அனைத்து வகையான உரிமைகளையும் பெற்றுக்கொள்ள முடியும். அதற்கான முயற்சிகளிலேயே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இப்போது ஈடுபட்டு வருகிறது'' என அதன் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி அறிவித்துள்ளார்.

''சிங்களத் தலைமைகள் முஸ்லிம் சமூகத்தைத் தொடர்ந்தும் ஏமாற்றியே வருகின்றன. அவர்களுடன் உறவு வைத்துக்கொள்வதால் முஸ்லிம் சமூகத்துக்கு எவ்விதமான பயனும் கிடைக்கப்போவதில்லை. முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேசுவதன் மூலமே நியாயமான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.'' எனவும் மு.கா. செயலாளர் ஹஸனலி மேலும் கூறியுள்ளார்.

### பிரபாவுடன் நேரடிப் பேச்சு

''வடக்கு – கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும் என்றால், தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியான தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் மாத்திரம் நேரடியாகப் பேச்சு நடத்தப்பட வேண்டும். அதற்கு ஏதாவது முஸ்லிம் கட்சி ஒன்று முன்வர வேண்டும்'' என நுஆ செயலாளர் நாயகமும், ஊடகத்துறை பிரதி அமைச்சருமான எம்.எச்.சேகு இஸ்ஸதீன், கடந்த சனிக்கிழமை கொழும்பு ரன்முத்து ஹோட்டலில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரைநிகழ்த்துகையில் தெரிவித்துள்ளார்.

''தமிழீழ விடுதலைப் புலிகளை விடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களுடன் பேசுவதால், பயன் ஏதும் கிடைக்கப் போவதில்லை'' எனவும் அவர் கூறியுள்ளார்.

முஸ்லிம்களின் அங்கீகாரம் பெற்ற இந்த இரு முஸ்லிம் கட்சிகளும்,விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதன் மூலமே முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என உணர்ந்திருக்கின்றன.

எனினும் அதனை முஸ்லிம் தரப்பு எவ்வாறு சாதிக்கப்போகின்றது என்பதிலேயே பெரும் சந்தேகம் எழுகின்றது. ஏனெனில், தமிழீழ விடுதலைப் புலிகளுடன், அதுவும் தமிழ்த் தேசத்தின் தலைவர் பிரபாகரனுடன் நேடியாகப் பேச்சு நடத்துவதற்குக் கிடைத்த வாய்ப்பை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோட்டை விட்டதை முஸ்லிம் சமூகம் இன்னும் மறந்து விடவில்லை.

2002 ஏப்ரல் 13 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரனை,ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழு ஒன்று வன்னிக்குச் சென்று சந்தித்து – பேச்சுவார்த்தைகளை நடத்தியபோதிலும், அது முஸ்லிம் மக்களுக்குத் திருப்தியைத் தரவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை,அது நன்கு பயன்படுத்திக்கொள்ளத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டு மேலோங்கியிருந்தது.

### மு.கா.வின் தனிப்போக்கு

விடுதலைப்புலிகளிடமிருந்து அழைப்பு கிடைப்பதற்கு சில வாரங்களுக்கு முன்னதாக அமைக்கப்பட்ட ' அனைத்து முஸ்லிம் எம்.பிக்கள் ஒன்றியம், மேற்கொண்ட தீர்மானங்களை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் புறக்கணித்து விட்டே மு.கா. உறுப்பினர்களை மட்டும் அழைத்துக் கொண்டு வன்னி சென்றார் என்ற குற்றச்சாட்டும் அப்போது எழுந்தது. எம்.எச்.முஹ[illegible]ளஸி, ரவூப் ஹக்கீம் ஆகிய மூவரினதும் கூட்டுத் தலைமைத்துவத்துடன் நிறுவப்பட்ட 'அனைத்து முஸ்லிம் எம்.பிக்கள் ஒன்றியம்' இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதான முயற்சிகளில் முஸ்லிம் சமூக விடயத்தைக் கையாளும் என ஏகோபித்து எடுக்கப்பட்ட தீர்மானத்தை ரவூப் ஹக்கீம் மீறினார் என்பதே அக் குற்றச்சாட்டு.

சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்கள் மற்றும் நோர்வே உட்பட்ட வெளிநாட்டுத் தூதுவர்களை முஸ்லிம்



ஹக்கீம்

தலைவர்கள் மற்றும் அமைச்சர்கள் தனித்தனியே சந்தித்து – முரண்பட்ட கருத்துக்களை முன் வைக்காமல், முஸ்லிம் எம்.பிக்கள் ஒன்றியத்தினூடாக முஸ்லிம் சமூகத்தின் ஏகோபித்த நிலைப்பாட்டையே முன்வைப்பர் என முஸ்லிம் தலைவர்கள் கூடி எடுத்த முடிவை, கட்சி அரசியலை முன்னிலைப்படுத்தி மு.கா.தலைவர் ஹக்கீம் மீறிவிட்டார் என பலத்த கண்டனமும் எழுந்திருந்தது. அது ஒருபுறமிருக்க, தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரைச் சந்தித்த மு.கா தூதுக்குழு, முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை முறையாக எடுத்துச் சொல்லி– அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கவில்லை என்கின்ற விமர்சனமும் அப்போது காணப்பட்டது.

### பிரபா- ஹக்கீம் ஒப்பந்தம்

அதை விட புலிகளுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முஸ்லிம்காங்கிரஸ் பேணிக்கொள்வதிலும் பல்வேறு சிக்கல்கள் எழுந்திருந்தன.

(18 ஆம் பக்கம் பார்க்க)

அஸ்லம் எஸ்.மௌலானா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிசல் காணும் தி.மு.க – ம.தி.மு.க உறவு

தி.மு.க.விலிருந்து வைகோ பிரிந்து சென்ற நாளிலிருந்து கருணாநிதி, வைகோ உறவு கசந்தது கசந்ததுதான். எனினும், அவ்வப்போது இருவரும் இணைந்து கொண்டாடிவந்துள்ளனர்.

பொடா சட்டத்தில் வைகோ சிறையிடப் பட்டபோது அண்ணன் கருணாநிதி – தம்பி வைகோ பாசப்பிணைப்பு மீண்டும் உருவானது. பி.ஜே.பி. தலைமையிலான கூட்டணியிலிருந்து வெளியேற தி.மு.க. காரணங்களைத் தேடிக்கொண்டிருந்த போதுதான் சிறையில் வாடிய வைகோ தி.மு.க. வின் கண்ணில் தட்டுப்பட்டார்.

'வைகோவை விடுவியுங்கள். இன்றேல் நாங்கள் பி.ஜே.பி. கூட்டணியை விட்டு வெளியேறுவோம்' என்று தி.மு.க. துள்ளிக் குதித்தது. தன்னை விடுவிக்க உதவாததற்காக வைகோ பி.ஜே.பி. அரசிலிருந்து வெளியேற முடிவு எடுக்கவில்லை. தி.மு.க. அந்தக் காரணத்தைக்காட்டி பி.ஜே.பி. உடனான உறவை முறித்தது. வேறு வழியின்றி வைகோவும் பி.ஜே.பி. அணியிலிருந்து வெளியேறி காங்கிரஸ் அணிக்கு வந்தார். இப்




போது காங்கிரஸ் தலைமையிலான அரசுக்கு தி.மு.க., வைகோ இருவருமே நம்பகமான கூட்டாளிகள்.

இப்படியிருக்க பழையபடி தி.மு.க. – ம.தி.மு.க. உறவு கசக்கத் தொடங்கியிருப்பதாகத் தெரிகிறது. வைகோ நடத்திய நடையாத்திரைக்கு தி.மு.க.வின் சன் டிவி போதிய முக்கியத்துவம் தரவில்லை என்பதை உணர்ந்த வைகோ வேறு ஒரு டிவியின் உதவியை நாடி நடைபயணத்தின் செய்திகளை முக்கியப்படுத்தி வெளியிடச் செய்தார். இது தி.மு.க.வை நெருடியுள்ளது. நடைபயண முடிவில் நடந்த கூட்டத்துக்கும் தி.மு.க.வினர் பெரிதாக அழைக்கப்படவில்லை.

இதற்கிடையில் திருமங்கலம் நகராட்சித் தேர்தலில் ம.தி.மு.க வேட்பாளர் தோல்வி அடைந்தது வேறு ம.தி.மு.க.வினருக்கு தி.மு.க .மீதான சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது. இருகட்சிகளின் முக்கியஸ்தர்களும் ஒருவரை ஒருவர் மறைமுகமாகத் தாக்கிப் பேசுவதும் நடந்துவருகிறது. நிலைமை சரியில்லை என்பதை உணர்ந்து வைகோ கருணாநிதியை நேரில் சந்தித்துப் பேசியுள்ளார். எனினும் ,அந்த விவரங்களைக் கூட இருகட்சிகளும் பெரிதாக வெளியிடவில்லை என்பதிலிருந்து போகிறபோக்கு சரியாக இல்லை என்பது தெரிந்தது.

லோக்சபாவில் முன்னர் எம்.பியாக இருந்த வைகோ பின்பு தான் போட்டியிடாது விட்டதிலிருந்தே தமிழகத்தில் வைகோ கூடுதல் அக்கறை காட்டத் தொடங்கிவிட்டார் என தி.மு.க சந்தேகப்பட்டது.

வைகோவின் நடைபயணமும் அதையே உணர்த்தியது. இது தி.மு.க.வுக்கும் நல்ல சேதியல்ல. ஏனெனில், கருணாநிதிக்கு வயதாகிக்கொண்டுபோகிறது. அவர் திடீரென இறந்தால் ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க.வா அல்லது வைகோவின் ம.தி.மு.க.வா என்ற ஒரு கேள்விவரும்.

என்னதான் கருணாநிதி தி.மு.க. தொண்டர்களின் உயிர் என்றாலும், கருணாநிதி இல்லாததருணத்தில் ஸ்டாலின் வைகோவை எதிர்த்துநிற்க தி.மு.க தொண்டர்கள் உதவுவார்களா என்பது கேள்வியே. அதிலும் பொடாவில் சிறைசென்றபின் வைகோவின் செல்வாக்கு பெரிதும் உயர்ந்துள்ள நிலையில் கருணாநிதி இறந்தால் ஸ்டாலினால் தாக்குப்பிடிக்க முடியாது போகலாம் என்ற அச்சம் கருணாநிதி தரப்பிடம் இருக்கவே செய்கிறது.

தி.மு.க. தரப்பின் கவலைகள் இவ்வாறிருக்க, வைகோவுக்கு உள்ள பிரச்சினைகள் வேறுவிதமாக உள்ளன. தமிழகத்தில் தி.மு.க., அ.தி.மு.க. தவிர்த்து காங்கிரஸ், பா.ஜ.க., பா.ம.க., ம.தி.மு.க ஆகிய நான்கு சிறிய கட்சிகள் உள்ளன. இவற்றில் காங்கிரஸ், பாரதியஜனதா இரண்டும் தேசியக்கட்சிகள். இவைகளில் இருந்துதான் பிரதமர் வருகிறார் என்பதால் இவர்கள் தி.மு.க.வுடனோ, அ.தி.மு.காவுடனோ கூட்டுச்சேர்வார்கள். பா.ம.க. அடிக்கடி அணிமாறி, அணிமாறி வெற்றிபெறும் அணியில் சேர்ந்துவிடும். ம.தி.மு.க.வுக்கு மட்டும் பெரியதொரு சிக்கல் உண்டு. அதுதான் அ.தி.மு.க. உடன் இணையவே முடியாத நிலை. சரித்திரத்தில் ஒரே ஒருமுறை மட்டும் ம.தி.மு.க. ஜெயலலிதாவுடன் தேர்தல் கூட்டணிவைத்தது. 1998 இல் மட்டுமே அவ்வாறுநடந்தது. மற்றப்படி ஜெயலலிதாவுக்கு வைகோவுடன் இணையும் எண்ணமே இல்லை.


1998 இல் கூட வைகோவை இணைத்துக் கொண்டதற்கு காரணம் ஜெயலலிதா 1996 தேர்தலில் தனது சொந்தத் தொகுதியிலும் தோற்று, தி.மு.க. அரசுவந்தபின் போடப்பட்ட வழக்குகளில் சிக்கி திக்குமுக்காடிக்கொண்டிருந்ததே. இந்தச்சிக்கல்களில் இருந்துமீள 1998 தேர்தலில் பலமான கூட்டணி வைத்து தி.மு.க.வை தோற்கடிப்பது ஜெயலலிதாவுக்கு முக்கியமாக இருந்தது.

இதனால் ஜெயலலிதா வைகோவையும் தனது அணியில் இணைத்துக் கொண்டார். அதன் பிறகு நடந்தமூன்று தேர்தல்களில் வைகோ ஜெயலலிதாவை எதிர்த்தே போட்டியிட்டுள்ளார். ஆக பா.ம.க.வைப்போலன்றி வேண்டியபோது எல்லாம் அணிமாறி அ.தி.மு.க. பக்கம் செல்வது வைகோவுக்கு இயலாத காரியம். அதுவும் பொடா சட்டத்தில் வைகோவை சிறையிட்டு வாட்டிய ஜெயலலிதாவிடம் அடைக்கலம் தேடமுடியாது. இதனால் வைகோ விரும்பியோ, விரும்பாமலோ தி.மு.க.வின் நிழலிலேயே தஞ்சமடைய வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. குறைந்த பட்சம் சொநதக்காலில் ம.தி.மு.க. நிற்கும் வரையாவது தி.மு.க.வின் உதவி வைகோவுக்கு அவசியமே. இதனால், ஒரேயடியாக தி.மு.க.வை உதறிவிடும் நிலையில் வைகோ இல்லை.

2001 சட்டசபைத் தேர்தல் சமயத்தில் முதல்வர் கருணாநிதி தனது அணியில் இருந்த வைகோவுக்குச் சரியான முறையில் தொகுதிகளை ஒதுக்க மறுத்தார். இதனால் வைகோ தி.மு.க அணியிலும் இல்லாமல் அ.தி.மு.க அணியிலும் இல்லாமல் தனித்துப் போட்டியிட்டார். இதனால் சட்டசபைக்கு ஒரு ஆசனத்தைக்கூட வெல்ல முடியவில்லை அவரால். லோக்சபாவில் 1998 முதல் இன்றுவரை 4 எம்.பிக்களைக் கொண்டிருக்கும் ம.தி.மு.க.வுக்கு சட்டசபையில் ஒரு எம்.எல்.ஏ கூடக்கிடையாது. காரணம் தனித்துப் போட்டியிட்டதே. இதனை வைகோவும் நன்கு உணர்ந்துள்ளார். கட்சியினரும் இதனை உணர்ந்துள்ளனர். எனவே, இப்போதைக்கு தி.மு.க. அணியிலிருந்து வெளியேற விரும்பமாட்டார். எனினும் உறவு விரிசல் காண்கிறது என்பதுமட்டும் உண்மை.

இதற்கிடையில் வைகோ மீது பொடா வழக்குகள் போடப்பட்டது சரியல்ல என பொடா மறு ஆய்வுக்குழு கூறியதையடுத்து தமிழக அரசு வழக்குகளை வாபஸ் பெறச் சம்மதித்தது. எனினும், பொடா நீதிமன்றம் அதனை ஏற்கமறுத்து வழக்குகளைத் தொடர உத்தரவிட்டது. இப்போது பொடா நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆட்சேபித்து சென்னை உயர்நீதிமன்றில் வைகோ தரப்பு வழக்குத் தொடர்ந்தது. உயர்நீதிமன்றமும் பொடா நீதிமன்றின் உத்தரவு சரிதான் என்று சொல்லிவிட்டது.

இதனை எதிர்த்து உச்சநீதிமன்றில் வைகோ போட்டவழக்கில் வைகோ மீதான வழக்கை பொடா நீதிமன்றம் தொடரக்




கூடாது என உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை பிறப்பித்துள்ளது.

வைகோ பொடா வழக்கில் இருந்து முற்றாக விடுபடும் நிகழ்வு அவருக்கு முக்கியமானது. குறிப்பாகத் தமிழகத்தில் கட்சியைப் பலப்படுத்த இந்த விடுதலை இன்றியமையாதது.

**-எஸ். சுரேந்திரஜித்-**

# சிங்கத்தின் பல்லைப் பிடுங்க

காலம் என்பது யாருக்காகவும் காத்திருப்பதில்லை. காத்திருக்காத இந்தக் காலத்தோடு மாற்றங்களும் மெல்ல ஒட்டிக்கொள்வதுண்டு. காலத்தின் அவசியம் கருதி பல மாற்றங்கள் வந்து சேர்ந்து விடுகின்றன. இவை தாமாக வருகின்றன என்று சொல்வதை விட பல மாற்றங்கள் தேவை கருதி, புகுத்தப்படுகின்றன என்று சொல்வதே சாலப் பொருத்தமாக இருக்கும்.

பத்தாம் பசலிகளாக இருக்க யாருமே விரும்புவதில்லை. நாகரிக உலகம் நவீனமாகிக் கொண்டு வரும்போது நல்ல பல மாற்றங்கள் வந்து சேர்வது காலத்தின் கட்டாயம் என்றாகி விடுகின்றது.

எனினும், எல்லா மாற்றங்களுமே அவசியம் கருதித்தான் வந்து சேர்கின்றன என்று சொல்லவும் முடியாது. சில வேண்டப்படாத மாற்றங்கள் வந்து சேர்ந்து சமுதாயத்தைச் சீரழிப்பதும் உண்டு. நாகரிக உலகில் நம்மைப்பெரிதும் பாதிக்கும் மாற்றங்களாக இவை அமைகின்றன.

உலகமெங்கும் இடம்பெறும் தகராறுகளைத் தீர்க்க ஓர் அமைப்பு அவசியம் என்று பலர் நினைத்ததில் 1945ஆம் ஆண்டு உதயமானதுதான் இந்த ஐக்கிய நாடுகள் சபை. இந்த அமைப்பின் ஒரு முன்னோடி போல் சர்வதேச சங்கம் என்ற பெயரில் ஓர் அமைப்பு 1914 – 18 உலக யுத்தத்தின் பின் தொடங்கி வைக்கப்பட்டது. உலக யுத்தங்களைத் தடுக்கும் நோக்கிலேயே இந்த அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் 21 வருடங்களில் உலகம் மோதலுக்குத் தயாராகிய போது 1938 இல் இந்த அமைப்பு செயலிழந்தது.

இரண்டாம் உலக மகாயுத்த காலத்துக்குப் பின்னர் அமைக்கப்பட்ட ஐ.நா. சபை முன்னைய அமைப்பான சர்வதேச சங்கத்தின் பல கொள்கைகளை தனது கொள்கைகளாகஆக்கிக் கொண்டது. ஏறத்தாழ அதனுடைய இன்னொரு வடிவமாக இது செயற்பட ஆரம்பித்தது.

1944 இல் அமெரிக்கா, சீனா, பிரிட்டன், சோவியத் ஒன்றியம் ஆகிய நான்கு நாடுகளும் வாஷிங்டனில் சந்தித்துக் கொண்டன. ஓர் உலக அமைப்பை நிறுவுவதற்கான ஏற்பாடுகளை எழுத்து வடிவில் இந்த நான்கு நாடுகளும்கொண்டு வந்தன.

அடுத்த ஆண்டு, அதாவது 1945 ஆம் ஆண்டு 50 உலக நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்றுகூடினார்கள். எழுத்து வடிவில் இருந்த



அமைப்பிற்கு உயிர் கொடுத்தார்கள்.

பிறந்தது அங்கே ஐ.நா.சபை. அன்று திகதி ஒக்டோபர் 24. இப்படித்தான் இந்த ஐக்கிய நாடுகள் சபை உதயமாயிற்று. இன்று 191 நாடுகளை அங்கத்தவர்களாகக் கொண்டு இந்த அமைப்பு இராட்சத விருட்சமாக நெடுத்து நிமிர்ந்து நிற்கின்றது. நாட்டுக்குள் நாடாக இருக்கும் குட்டி நாடான வத்திக்கானும் சீனாவிடம் இருந்து தன்னைப் பிய்த்து உதறிக் கொண்டுதனி நாடாக இருக்கும் தாய்வானும் இதுவரையில் அங்கத்தவர்கள் அல்லாத நாடுகளாக இருக்கின்றன. பிடிவாதமாக ஒதுங்கிக் கொண்டிருந்த சுவிட்ஸர்லாந்து, அண்மையில்தான் அங்கத்துவ நாடாக இணைந்து கொண்டது.

ஐ.நா.சபையின் கதை இப்படியிருக்க, இதனுடைய பாதுகாப்புக் கவுன்ஸிலின் நிரந்தர அங்கத்தவர்கள் பட்டியல் நீள்வதற்கான சலசலப்புகள் ஆரம்பித்திருப்பதுதான் இன்றைய பிரதான செய்தியாக இருக்கின்றது.

இன்று வரையில் ஐந்து நாடுகள் இதன் பாதுகாப்பு கவுன்ஸிலில் நிரந்தர அங்கத்துவ நாடுகளாக இருந்து வருகின்றன. தமது வீட்டோ அதிகாரத்தை உபயோகிக்க இந்த 5 நாடுகளால் மட்டுமே முடியும். ஏதாவது ஒரு பிரேரணையை வீட்டோ அதிகாரம் மூலம் தடுத்து நிறுத்திவிட முடியும். இந்த 5 நாடுகளில் மூன்று ஒன்றாக இணைந்து கொண்டு தமது வீட்டோ அதிகாரங்களை உபயோகித்தால், ஐ.நா.சபை எடுக்கும் எந்தத் தீர்மானமும் நடைமுறைப்படுத்தப்பட முடியாத நிலை வந்து சேர்ந்துவிடும். அமெரிக்கா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய 5 நாடுகளுமே வீட்டோ அதிகாரத்தை உபயோகிக்கக் கூடியவை.

ஐ.நா. சபையின் முக்கிய பிரிவுகளில் ஒன்றான பாதுகாப்புக் கவுன்ஸிலில் ஏற்கனவே உள்ள 5 நிரந்தர அங்கத்தவர்கள் தொகையை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை இப்பொழுது முன்வைக்கப்பட்டுள்ளது. 21 ஆம் நூற்றாண்டுகளின் தேவைகளைப் பிரதிபலிப்பதாக இது அமைய வேண்டும் என்ற காரணத்தைக்காட்டி இந்த நிரந்தர அங்கத்துவ நாடுகள் தொகையை அதிகரிக்க விண்ணப்பங்கள் ஐ.நா.சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

பிரேசில், ஜேர்மனி, ஜப்பான், இந்தியா ஆகிய நான்கு நாடுகளுமே இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளன. ஆபிரிக்க நாடொன்றுக்கும் இப்படியொரு அங்கத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் இந்த நாடுகளினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

பிரேசில் நாட்டின் ஜனாதிபதி, ஜேர்மன் நாட்டு வெளி அமைச்சர், இந்தியப் பிரதமர், ஜப்பானிய பிரதமர் ஆகிய நால்வரும் நியூயோர்க் நகரில் சந்தித்து கலந்துரையாடி இப்படியொரு முடிவுக்கு வந்துள்ளார்கள்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர், இந்த அமைப்பின் அங்கத்துவ நாடுகள் தொகை அதிகரித்து விட்டது. எனவே, நிரந்தர அங்கத்தவர்கள் தொகையையும் நிரந்தரமற்ற அங்கத்தவர்கள் தொகையையும் அதிகரிக்க வேண்டியது அவசியமாகின்றது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் இருந்தும், அபிவிருத்தியடைந்து கொண்டு வரும் நாடுகளில் இருந்தும் நிரந்தர, நிரந்தரமற்ற அங்கத்தவர்கள் தெரிவாக வேண்டும் என்று இவர்கள் அறிக்கை விடுத்திருக்கின்றார்கள்.

இந்த வீட்டோ அதிகாரம் என்பது அவசியந்தானா என்று நீண்ட காலமாகவே விவாதங்கள் கிளப்பப்பட்ட வண்ணமாக இருக்கின்றன. இந்த ஐந்து நாடுகளில் சீனா தவிர்ந்த நான்கு நாடுகளும் தம் இஸ்டத்திற்கு வீட்டோ அதிகாரத்தை உபயோகித்து, நந்தி போல பல விடயங்கள் நடைபெறாமல் குறுக்கே நின்று விடுகின்றன.

இந்த அமைப்பு ஸ்தாபிக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்று வரை அமெரிக்கா 76 தடவைகள் வீட்டோ அதிகாரத்தை உபயோகித்து இருக்கிறது. இதில் 36 தடவைகள் தனது நேச நாடான இஸ்ரேலைக் காப்பற்றவே அமெரிக்காவினால் வீட்டோ உபயோகிக்கப்பட்டு இருக்கிறது. ரஷ்யா 120 தடவைகள் வீட்டோ அதிகாரத்தைப் பிரயோகித்து இருக்கிறது. சோவியத் ஒன்றியம் உடைந்து ரஷ்யா ஆகிய பிறகு இரண்டு தடவைகள் மாத்திரமே ரஷ்யா வீட்டோவை நாடியுள்ளது. பிரிட்டன் 32 தடவைகளும், பிரான்ஸ் 18 தடவைகளும் வீட்டோ பக்கம் கவனத்தைத் திருப்பியுள்ளன.


அனேகமான தடவைகள் அமெரிக்க பிரேரணைகளுக்குப் பலமூட்டவே பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளும் வீட்டோவைப் பிரயோகித்து உள்ளன. சீனா இன்று வரையில் 5 தடவைகள் மாத்திரமே வீட்டோவை உபயோகித்து இருக்கின்றது.

பாதுகாப்புக் கவுன்ஸிலில் உள்ள நிரந்தர உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை ஐந்துக்கும் அதிகமாக அதிகரிப்பது மூலம் அமெரிக்கா என்ற சிங்கத்தின் பல்லைப் பிடுங்கி விடலாம் என்று பெரும்பாலான வளர்முக நாடுகள் கருதுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விறுவிறுப்பான போட்டி
# வெல்வது யார்?



இன்னும் இரண்டு வாரங்கள்தான் இருக்கின்றன அமெரிக்க அதிபர் தேர்தலுக்கு. ஜோர்ஜ் வில்லியம் புஷ்ஷுக்கும் ஜோன் கெரிக்கும் இடையே மிக மிகக் கடும் போட்டி நிலவுகிறது. குடியரசுக் கட்சி சார்பில் இரண்டாவது முறையும் போட்டியிடுகிறார் புஷ். ஜனநாயகக் கட்சி சார்பில் கெரி நிற்கிறார். யார்வெல்வார்கள்என்பதைஆருடம்சொல்ல முடியாத நிலை. இருவருக்கும் இடையில் மயிரிழை இடைவெளி கூட இல்லை என்னும் அளவுக்கு வலுவான போட்டி.

4 வருடங்களுக்கு ஒரு தடவை சொல்லி வைத்த மாதிரி அமெரிக்க அதிபர் தேர்தல் நடக்கிறது. நம் நாடுகள் போலெல்லாம் இல்லை. அங்கே வைத்த திகதியில்தான் தேர்தல். நவம்பர் 2 நிர்ணயிக்கப்பட்ட திகதி. ஜனாதிபதியே நினைத்தாலும் அதனை மாற்ற முடியாது.

தேர்தலையொட்டி கடந்த பல மாதங்களாக பல கட்டப் பிரசாரங்கள் நடந்தன. இப்போது மிகப் பரபரப்பான கட்டம். பிரசாரம் சூடு பறக்கின்றது.

தேர்தல் பற்றி இலங்கைப் பத்திரிகைகள் தவறாக ஏதும் எழுதி விடக்கூடாதே என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுக்குக் கவலை. கடந்த ஒரு மாதத்திற்குள் இரு தடவைகள் பத்திரிகையாளர்களுக்கு தேர்தல் விளக்கக் கருத்தரங்களை நடத்தி விட்டார்கள். அமெரிக்க தேர்தல் சூட்டின் வெக்கை இங்கேயும் அடிக்கிறது.


செப்ரெம்பர்-11 பயங்கரவாதத் தாக்குதல், ஈராக் போர் என்று உலகை உலுப்பிய விவகாரங்களுக்குப் பின்னர் நடக்கும் முதல் அதிபர் தேர்தல் இது. வழமையை விட ஆர்வம் அதிகமாக இருக்கிறது. பயங்கரவாதத்துக்கு எதிராக புஷ் எடுத்த நடவடிக்கைகளுக்கு அமெரிக்க மக்கள் தீர்ப்புச் சொல்லப்போகும் நாள். இதனால் உலகமும் ஆர்வத்துடன் அவதானித்துக் கொண்டிருக்கிறது.


குழந்தையுடன் புஷ்

புஷ்ஷும் கெரியும் சுழன்றடித்துப் பிரசாரம் செய்கிறார்கள். சைக்கிள் ஓடுவது, குழந்தைகளைக் கொஞ்சுவது, வயோதிபர்களுடன் குலாவுவது என்ற என்ன செய்ய முடியுமோ அத்தனை வித்தைகளும் செய்கிறார்கள்.

இவர்கள் தவிர மூன்றாவதாகவும் ஒருவர் இந்த அதிபர் தேர்தலில் போட்டியிடுகிறார். ரால்வ் நாடர் என்பது அவர் பெயர். சுயேச்சையாக நிற்கின்றார். அவருக்குப் பெரிதாகச் செல்வாக்கு இல்லை. 2 சதவீதமானவர்கள்கூட அவரை ஆதரிக்கவில்லை என்கின்றன கணிப்புக்கள். ஆனால் கெரி, புஷ்ஷுக்குச் சளைக்காமல் அவரும் தேர்தலில் நிற்கிறார்.

தேர்தல் நெருங்க நெருங்க புஷ்ஷுக்குத்தான் தலைவலி அதிகரிக்கிறது. ஆரம்பத்தில் அவரது செல்வாக்கு கெரியை விடச் சற்று அதிகம் இருந்தது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் வரை 5 புள்ளிகளால் அவர் முன்னிலையில் இருந்தார். இப்போது நிலைமை அப்படியில்லை. மிகக் குறுகிய காலத்துக்குள் புஷ் செல்வாக்கு சரிந்துள்ளது.



வாக்களிக்க வற்புறுத்தும் பிரசாரத்தில் மங்கை

அமெரிக்கத் தேர்தலில் முக்கியமான விடயம் வேட்பாளர்களின் நேரடி விவாதம். தங்களை ஆளப் போவது யார்? அவர்களில் எவர் திறமையானவர், ஆளுமையானவர் என்பதை அமெரிக்க மக்கள் சரியாகத் தீர்மானிக்க உதவுகிறது இந்த நேரடி விவாதம்.

புஷ்ஷுக்கும் கெரிக்கும் இடையே மூன்று நேரடி விவாதங்கள் நடந்தன. முதல் விவாதத்தில் கெரி அதிக வித்தியாசத்தில் வென்றார். இரு வாரங்களுக்கு முன்வரை அவருக்கும் புஷ்ஷுக்கும் இடையில் இருந்த வெளி குறைந்தது. செப்ரெம்பர் 30ஆம் இந்த முதல் விவாதம் நடந்தது.

ஒக்ரோபர் 8 ஆம் திகதி இரண்டாவது விவாதம் நடந்தது. முதலில் விட்ட குறையைச் சரிக்கட்டிக் கொண்டு முன்னேறினார் புஷ். என்றாலும் 2 வீதத்தால் கெரிதான் முன்னிலை பெற்றார் என்கின்றன ஊடகங்கள்.

முதல் இரண்டு நேரடி விவாதங்களிலேயே புஷ்ஷை முந்தி விட்டார் கெரி. இதனால் குடியரசுக் கட்சித் தரப்பு ஆடிப் போய் இருக்கிறது.

ஈராக், பயங்கரவாதத்துக்க எதிரான போர், பாதுகாப்பு, ஓரினச் சேர்க்கை, கருக்கலைப்பு, கல்வி, சுற்றுச்சூழல், சுகாதாரம், வரி, வேலை வாய்ப்பு, துப்பாக்கிக்கட்டுப்பாடு ஆகிய விடயங்கள் இந்த முறைத் தேர்தலில் முக்கிய விவகாரங்களாக அலசப்படுகின்றன.

இவற்றில் பயங்கரவாதத்துக்கு எதிரான போரும் ஈராக் விடயமும் புஷ்ஷுக்குக் காலை வாருகின்றன. நேரடி விவாதத்தில் புஷ்ஷின் வெளிவிவகாரக் கொள்கைகளையும் ஈராக் மீது போர் தொடுக்க அவர் எடுத்த முடிவையும் கெரி ஒரு பிடி பிடித்தார்.

ஈராக்கில் தினம் தினம் அமெரிக்கப் படையினர் இழப்புக்களைச் சந்திக்கின்றனர். அமெரிக்கர்கள் மனதை நெருடும் விவகாரம் இது. புஷ்ஷுக்கு எதிராக கெரியின் வாதம் அமெரிக்கர்களைச் சிந்திக்க வைக்கின்றன.

தான் ஆட்சிக்கு வந்தால் அமெரிக்கப் படைகளை திரும்பப் பெறுவேன் என்று உறுதியளித்திருக்கிறார் கெரி. ஈராக் விவகாரத்தில் நீதி பிழைத்து விட்டது என்பது அவர் வாதம். நான்கு வருடங்களில் படைகளைத் திரும்பப் பெற்றுவிட்டு, அதற்குப் பதிலாக அமெரிக்கா தலைமையில் நேட்டோப் படைகளை ஈரக்கில் நிறுத்தப் போகிறாராம்.

ஈராக்குக்குப் படைகளை அனுப்ப தற்போது நேட்டோ மறுத்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரை புஷ் கையாளும் விதத்தையும் கெரி பயங்கரமாகச் சாடுகின்றார்.

ஆனால் பயங்கரவாதத்துக்க எதிராக புஷ் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகள் அமெரிக்க மக்கள் மனங்களில் அவருக்கு நிரந்தர இடத்தைக் கொடுத்துள்ளன. கெரியின் வாதங்களால் இதனைத் தகர்க்க முடியுமா என்பது கேள்விக் குறியே.

ஈராக் போர், பொருளாதார வளர்ச்சி என்பவற்றில் புஷ்ஷின் செல்வாக்கில் விழும் கீறல்கள். அவர் பொறுப்பேற்ற பின் பொருளாதாரம் அவ்வளவு நன்றாக இல்லை என்று பெரும்பாலான அமெரிக்கர்கள் கருதுகின்றனர். அதற்காக அவரை ஒட்டுமொத்தமாக நிராகரிக்கவும் அமெரிக்க மக்கள் தயாராக இல்லை. புஷ்தான் உறுதியான தலைவர் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

நிர்வாகம், வரி ஆகியவற்றில் கெரியை நம்புவதற்கு அமெரிக்க மக்கள் தயாராக இல்லை. அவருடைய பலவீனம் இவை. இவற்றை வைத்தே அவரை வீழ்த்த புஷ் தரப்பு திட்டங்களைத் தீட்டுகின்றது.

புஷ்ஷுக்கு எதிராக ஈராக் விவகாரத்தைத்தான் கெரி பிரதான ஆயுதமாக்கிக் கொண்டுள்ளார்.

ஓரினச் சேர்க்கை மற்றும் கருக்கலைப்பு போன்ற பரபரப்பான விடயங்களிலும் இருவரும் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனர். புஷ் இவற்றைக் கடுமையாக எதிர்க்கிறார். கெரி மென்போக்கைக் கடைப்பிடிக்கிறார். ஏனைய விவகாரங்கள் எல்லாம் இவற்றுக்குப் பின்னர்தான்.

சுகாதாரத்துறையில் காப்புறுதி முக்கிய பிரச்சினையாகக் கிளம்பியுள்ளது. மத்திய தர வர்க்கத்தினை அதிகம் பாதிக்கும் விடயம் இது. இதனைக் கையாள கெரி வசீகரமான திட்டங்களைக் கைவசம் வைத்திருக்கிறார்.


சைக்கிள் சவாரி செய்யும் வேட்பாளர் கெரி

பாதுகாப்புக்கு அதிக தொகை செலவிடுவதில் புஷ் குறியாக இருக்கிறார். ஏவுகணைப் பாதுகாப்பு திட்டத்தை செயற்படுத்துவதில் அவர் முனைப்புடன் உள்ளார். இந்தத் திட்டத்தை முற்றாக நிராகரிக்கிறார் கெரி. [illegible]ருக்கு அதிகரித்த சம்பளம், படைகளை மேலும் நவீனமாக்குவது, புதிய படைத் தளபாடங்களைப் பெறுவது என்று கவர்ச்சியான திட்டங்களையும் முன்வைக்கிறார்.

இருந்தாலும் புஷ், கெரி இருவருக்கும் செல்வாக்கு சரிசமமாகவே இருக்கிறது. மிகக் கடுமையான போட்டியான இதனை அமெரிக்கப் பத்திரிகைகள் நெக் அன்ட் நெக் (neck and neck) போட்டி என வர்ணிக்கின்றன.

2000 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் புஷ் மயிரிழையில்தான் வெற்றி பெற்றார். எதிர்த்துப் போட்டியிட்ட ஜனாயகக் கட்சி வேட்பாளர் அல்கோரை விட 8 புள்ளிகள் மட்டுமே அவர் அதிகம் பெற்றார். கிளின்ரன் அதிபராக இருந்த காலத்தில் துணை அதிபராக இருந்தவர் அல்கோர்.

இப்போது மீண்டும் மிகக் கடுமையான போட்டி. யார் வெல்வார்கள் என்பதை நிர்ணயிக்கவே முடியாத நிலைமை. இன்னும் இரு வாரங்களில் நடக்க இருக்கும் பிரசாரங்களின் பின்னர் மக்கள் எப்படி மாறுவார்கள் என்று சொல்ல முடியாது.

அடிக்கடி கெரி, புஷ்ஷின் வெற்றி வாய்ப்பு சதவீதம் ஏறி இறங்கியபடியே இருக்கின்றது. ஒவ்வொரு தடவையும் ஒருவர் மாறி ஒருவர் முன்னணிக்கு வருகின்றார்.

அமெரிக்க வாக்காளர்களில் 7 சதவீதமானோர் யாருக்கு வாக்களிப்பது என்று இன்னமும் முடிவு செய்யவில்லை. இறுதி நேரத்தில் இவர்களின் முடிவுகளும் வெற்றி வாய்ப்பில் செல்வாக்குச் செலுத்தும். முடிவு செய்யாதவர்களிலும் 35 வீதமானவர்கள் மட்டுமே சிலவேளைகளில் தாங்கள் புஷ்ஷுக்கு வாக்களிக்கலாம் என்றுள்ளனர். 50 வீதமானோர் புஷ்ஷுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

நெருக்கமான போட்டி நிலவினாலும் இறுதியில் புஷ்தான் வெல்வார் என்று சில கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. நவம்பர் 3ஆம் திகதிக்குப் பின்னர் முடிவு தெரிந்துவிடும்.

– அர்ச்சனா –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பித்தன் பதில்கள்

எஸ். அட்ஷயா— மல்லாவி.

**கேள்வி:-** *டியர் பித்தா! மோதல் காதலில் முடியுமாமே? எனக்குப் பயமாக உள்ளது. அண்மையில் அறுபது வயது ஐயா ஒருவருடன் மோதிவிட்டேன்.*



**பதில்:—** அடடா... இந்த மோதல் காதலிலே கொண்டுபோய்விடாது. உம்மை மறியலிலே கொண்டுபோய்விடப்போகிறது. அறுபது வயது ஐயாவை மோதியிருக்கிறீரே!உமது மோதல் தாங்காது பொசுக்கென்று அவருக்கு ஏதாவது ஆகிவிட்டால்... அக்கம் பக்கம் கொஞ்சம் ஆழமாகப் பார்த்து நடமாடும் அட்ஷயா.

ஜீ.விஜி-புளியங்குளம்.

**கேள்வி:-** *அன்புள்ள பித்தனுக்கு!நான் எனது நண்பனுடன் கதைத்தால் அவன் போன பின்னர் எனது அம்மா எனது காதில் பிடிக்கிறா. ஏன் பித்தா?*

**பதில்:—** யோவ்— எனது அம்மா வந்து உமது காதைப்பிடித்தாவா? அல்லது உமது அம்மா வந்து எனது காதைப்பிடித்தாவா? உமது அம்மா தானே உமது காதைப் பிடித்தா... ஏன் என்று அவரிடமே கேட்க வேண்டியது தானே! எனக்கு ஏன் ஐயா கடிதம் எழுதிப்போட்டு தொல்லை பண்ணுகிறீர். உமது நண்பன் ஒரு தறுதலையாக, ஊருக்கு உதவாததாக, உருப்படாததாக,மொள்ளமாரியாக,கேப்பமாரியாக, முடிச்சவுக்கியாக இருக்கலாம். அவருடன் சேர்ந்து நீரும் கெட்டுக் குட்டிச்சுவராகிவிடுவீர் என்ற அச்சத்தினால் காதைப்பிடித்திருக்கலாம். எதற்கும் உமது அம்மாவிடமே இதுபற்றி நீர் கேட்டுத்தெரிந்து கொள்ளும்.

ஹொர்நேலியா ஷாமினி— கல்லடி.

**கேள்வி:-** *டியர் பித்தா!எனது சகோதரி கூறுகிறாள். வீட்டிலே வேலை வெட்டி இல்லாதவர்கள் தான் பித்தனுக்குக் கேள்வி அனுப்புகிறார்கள் என்று. எனக்குக் கோபம் வந்துவிட்டது.அவளின் வாயை அடைக்க ஏதாவது பதில் கூறுங்களேன் பிளீஸ்.*

**பதில்:—** அன்பான ஹொர்நேலியா ஷாமினியின் சகோதரியே! உமக்கு என்ன பெயர்? ஹொர்நேலியா காமினியா அல்லது பாமினியா... ஏதோ ஒரு பெயருக்கு வணக்கம். பித்தனாகிய அடியேன் தங்களுக்கு எழுதிக்கொள்வது யாதெனில்... தற்போதைய இயந்திரத்தனமான இந்த வாழ்க்கையில் கொஞ்சம் ரிலாக்ஸ் தேவை. அதற்காக நீங்கள் ரி.வி பார்ப்பதில்லையா? ரேடியோ கேட்பதில்லையா? புத்தகம் வாசிப்பதில்லையா? அயல் வீட்டுப் பெண்களுடன் சேர்ந்து அரட்டை அடிப்பதில்லையா? அதே போல் தான் இதுவும் சிலர் தங்கள் பொழுதுபோக்குக்காக எனக்குக் கேள்விகளை அனுப்புகிறார்கள். அதற்கு நான் அளிக்கும் பதிலைப்பார்த்து சந்தோஷப்படுகிறார்கள். உமக்கு அது பிடிக்கவில்லையா? போம். போய் நாள் முழுக்கத் தேங்காய் துருவும். அல்லது வெங்காயம் உரியும். நாள் முழுக்க வேலை வேலை என்று வேலை செய்யும். யார் உம்மைத் தடுத்தது. அதை விட்டுவிட்டு ஏதோ நான் கஷ்டப்பட்டு, கவலைப்பட்டு,திண்டாடி, தெருப் பொறுக்கி கொஞ்ச வாசகர்களைச் சேர்த்து வைத்திருக்கிறேன். நீர் வந்து அதையெல்லாம் கெடுத்துவிடுவீர் போலிருக்கிறது. ''நன்மை செய்யப் பிறந்த நீர் நன்மை செய்யா விட்டாலும் தீமையாவது செய்யாதிரும்''.

இப்படிக்கு
பித்தன்.

இந்தக் கடிதத்தை உமது சகோதரியிடம் சேர்ப்பித்துவிடும் ஹாமிலி.

கி.சுதா—அம்பாள் குளம்.

**கேள்வி:-** *நண்பா பித்தா! மற்றவர்களைத் திருத்த வேண்டிய மூத்தவர்கள் பிழை விடும்போது அதை இளையவர்கள் கண்டிக்கக் கூடாதா?*

**பதில்:—** எந்த மடையன் சொன்னது? கண்டிக்கலாம்— கண்டிக்கணும். கண்டித்தே ஆகணும்.

ரி.ஆர்—உடையார்கட்டு.

**கேள்வி:-** *பித்துமாமா! நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். ஆனால், எனது காதலைச் சொல்லப் பயமாக உள்ளது. இதற்கு ஒரு நல்ல வழி சொல்லுங்களேன்.*

**பதில்:—** உமது ஆள் இரண்டு கைகளிலும் அர்ச்சனைத் தட்டைத் தூக்கிக் கொண்டு காலிலே செருப்புப் போடாமல் கோவிலுக்கு வந்து கொண்டிருக்கும்போது போய் உமது காதலைச்சொல்லும். அர்ச்சனைத் தட்டைக் கையை விட்டு விட்டு உமக்கு அடிக்க மாட்டார். காலிலே செருப்பும் இல்லைத் தானே... பாதுகாப்பு அதிகம். ஆனால் ஒன்று. அருகே அண்ணன், தம்பி வராத நேரமாகப் பார்த்துக் கதையும்.

வி.ரஞ்சி—வட்டகச்சி.

**கேள்வி:-** *பித்தா, பெண்களுக்குப் பலவீனம் அழுகை. ஆண்களுக்குப் பலவீனம் பெண்கள் தான் என்கிறார்களே! இது உண்மை தானா?*

**பதில்:—** இல்லை. பெண்களின் அழுகை தான் ஆண்களின் பலவீனம் என்கிறேன் நான்.

எல்.ஹரி—உடப்பு.

**கேள்வி:-** *பித்தா ஒரு மனிதனுக்கு எத்தனை தடவைகள் காதல் வரும்?*

**பதில்:—** 1முதல் 10000000000... வரை.

ம.லேகா— முள்ளியவளை.

**கேள்வி:-** *பித்தா, உங்களது வீட்டில் கிழமையில் நீங்கள் எத்தனைநாட்கள் சமைப்பீர்கள்?*

**பதில்:—** ஏழு நாட்கள்.

**கேள்வி:-** *பித்தா,பெண்களுக்கு சம உரிமை வேண்டும் என்கிறார்களே. ஆனால், தபால்காரனாக ஏன் பெண்களைப் போடுவதில்லை?*



**பதில்:—** வெளிநாடுகளிலே POST WOMEN இருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் எமது நாட்டில் மட்டும் தான் இல்லை... எமது நாட்டுப் பெண்கள் அடுத்தவர் வீட்டு ரகசியங்களை அறியும் ஆர்வம் கூடியவர்கள்.எனவே,மற்றவர்களுக்கு வரும் கடிதங்களை உடைத்து வாசித்துவிடுவார்கள் என்ற அச்சத்தினால் தான் இங்கே அவர்களைத் தபால்காரிகளாக தெரிவு செய்வதில்லை போலும்.

நயனை— பொ. தர்ஷன்.

**கேள்வி:-** *காதலில் தோல்வியுற்று ஏமாற்றம் அடைபவர்களில் அதிகமானவர்கள் ஆண்களா... பெண்களா?*

**பதில்:—** ஆண்கள் என்பது தான் எனது கணிப்பு. ஏன் என்றால் ஒரே நேரத்தில் 10 பெண்களுக்குப்பின்னால் அலைந்து திரிபவர்கள் ஆண்கள் தான். ஆனால், இறுதியில் எல்லோரும் ஏமாற்றிய பின் ஒருவரை மட்டும் நிரந்தர காதலியாக்கிக் கொள்வார்கள். அந்தக்கணக்கில் பார்க்கும்போது ஒரு ஆணை ஒன்பது பெண்கள் ஏமாற்றுகிறார்கள் என்று வைத்துக் கொண்டால் அதிகம் பாதிக்கப்படுவோர் ஆண்கள் தானே?

ஆனால்,பெண்கள் விடயம் அப்படி அல்லவே?ஒருவரையே காதலிப்பார்கள். அந்த ஒருவராலேயே ஏமாற்றப்படுவார்கள்.

நி.திவ்வியதீசன்—ஆனைக்கோட்டை.

**கேள்வி:-** *அன்புடன் பித்துவுக்கு! 65வயதிலும் மனைவியில் கணவன் சந்தேகம் கொண்டு அடியும், உதையும் கொடுக்கிறானே! என்ன செய்யலாம்?*



**பதில்:—** 65 வயதிலா... அந்த வயதில் சந்தேகப்படும்படியாக என்னத்தைத் தான் செய்ய முடியும்? எல்லாம் ஆடி அடங்கி... தொளதொளத்து... கொலுகொலுத்துப் போயிருக்குமே! இந்த வயதிலும் சந்தேகமா... யப்பா... இன்னா உலகமப்பா இது... இதற்கு அனுதாபப்படலாமே ஒழிய, வேறெதுவும் செய்ய முடியாது.

சி.குகானந்த்— விஸ்வமடு.

**கேள்வி:-** *ஹாய் பித்தா! வாய் பேசத் தெரிந்தவர்கள் மனதுக்குப் பிடித்தவர்களைக் காதலித்துத் திருமணம் செய்கிறார்கள். ஆனால், வாய் பேச முடியாதவர்களின் நிலை என்ன பித்தா?*

**பதில்:—** வாய் பேசாதவர்கள் என்பதற்காக எல்லோரும் பிரமச்சாரிகளாகவா இருக்கிறார்கள்? அவர்களுக்கும் ஒரு சைகைப் பாஷையுண்டு. அவைகளைக் கொண்டு காதல் செய்கிறார்கள். சந்தோஷமாக வாழத்தான் செய்கிறார்கள். அதிலும் வாய் பேசக் கூடியவர்களின் குடும்ப வாழ்க்கையை விட இவர்களின் குடும்ப வாழ்க்கை சந்தோஷமாகத்தான் அமையும். ஏனென்றால் குடும்பச் சண்டை வந்தால் எதிர்த்துக் கதைப்பது— வாக்குவாதம் செய்வது எல்லாம் இருக்கவே இருக்காது தானே...!

வி.தீபா—வட்டக்கச்சி

**கேள்வி:-** *பித்தா, ஆண்கள் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தபோதிலும்- பொதுவாகப் பெண்களைக் கண்டவுடன் வழிந்து போகும் தன்மை காணப்படுகிறதே! ஏன் பித்தா?*

**பதில்:—** ஏற்கனவே நான் எழுதியது போல் அது வேறொன்றுமில்லை.இந்த ஹோமோன்கள் என்ற இழவுகள் செய்யும் வேலை தான் அது.

தி.துர்க்காஜினி— ஜெயந்திநகர்.

**கேள்வி:-** *அன்புப் பித்துக்குட்டிக்கு! எனது கணவர் வெளிநாடு செல்வதற்கு ஆசைப்பட்டுக்கொண்டு துடியாய்த் துடிக்கிறார். எங்களுக்கோ அவர் வெளிநாடு செல்வது விருப்பமே இல்லை. ஏன் அவர் இப்படி ஆசைப்படுகிறார்?*

**பதில்:—** வீட்டிலே உமது தொல்லை அதிகம் போலிருக்கிறது. அதனால் தான் அவர் வெளிநாடு போகத் துடிக்கிறார். வெளிநாட்டுக்குப் போய் உடம்பைக் கொஞ்சம் தேற்றிக்கொண்டு வருவோம் என்று நினைக்கிறார் போலும்.

## பித்தனின் கேள்வி

கேள்வி:—காதலித்துவிட்டுப்பின் திருமணத்தின் போது சீதனம் கேட்கும் ஆடவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?

## வாசகர்கள் பதில்கள்

சிவாஜிபாலு— மாத்தளை

காதல் தெருவில் திருமணச்சந்தை நடத்தி பெண்களைப் பேரம்பேசும் இந்தப் பேடிகளிடம் முதலீடு செய்து வியாபாரம் (குடும்பம்)நடத்த இன்று எத்தனையோ பெண்களும்,பெற்றோரும் காத்திருக்கும் நிலையில் இந்த பணப்பிசாசுகளை எந்த மந்திரவாதிகளாலும் ஒழித்துவிட முடியாது.

சி.அருண்— கிரான்

காதலிக்கும்போது அவளைத்தன் ஊதியத்தால் காப்பாற்றலாமென்று நினைத்தவனுக்குத் திருமணம் என்று வந்ததும் அவள் குடும்பத்தைச் சீதனமின்றி நடத்த முடியாதென்பது புரிந்திருக்கலாம் அல்லவா பித்தா?

திண்டுவளந்தான்— நல்லூரர்.

சீதனம் தரும் பெண்களைப் பார்த்துக் காதலிக்கத் தெரியாதவர்கள்.

தர்ஷனா— வவுனியா

ஒரு பெண்ணைத் தன் வாழ்நாள் முழுவதும் வாழ வைக்க முடியும் என்ற தன்னம்பிக்கை இல்லாதவர்கள்.சுருக்கமாகச் சொன்னால் கோழைகள்.

சுதா— கொழும்பு.

அவர்கள் எல்லோரும் அம்மாப் பிள்ளைகள்!

கஜா கனகரட்ணேஸ்வரன்—வவுனியா.

**கேள்வி:-** *பித்தன் சாருக்கு வணக்கம்! தனது காதலியிடமே வேறு பெண்கள் தன்னைக் காதலிக்கிறார்கள்- அவர்கள் உன்னை விட மிகவும் அழகானவர்கள் என்று கூறும் காதலனைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

**பதில்:—** அண்டப்புளுகன்,ஆகாசப்புளுகன்,வெடிமன்னன், வெத்து வேட்டுப் பயல் என்று தான் சொல்ல வேண்டும். வேறு பெண்ணுங்க— அதிலும் மிகவும் அழகான பொண்ணுங்க இவரைக் காதலிக்குதாம். ஆனால், இவர் அதுகளை எல்லாம் விட்டுப்போட்டு வந்து இந்த அழகில்லாத பெண்ணைத்தான் லவ் பண்ணுறாராம். நாங்கள் இதையெல்லாம் நம்பணுமாம். போங்கடா டுபுக்குங்களா... பொய் சொல்லுறதெண்டா ஒரு அளவு கணக்கு வேணாம். சும்மா போட்டுத்தள்ளுறாங்கப்பா...

ம.சுதர்சினி— வற்றாப்பளை.

**கேள்வி:-** *பித்தா! மூட நம்பிக்கையில் வாழ்வோரைத் திருத்த ஏதாவது வழி சொல்லுங்களேன்?*

**பதில்:—** SORRY இன்றைக்கு அட்டமி, நாளைக்கு நவமி. ஏனவே, இந்த நாட்களில் நாங்கள் சொல்லும் புத்திமதி எதனையும் அவர்கள் கேட்க மாட்டார்கள். எனவே ஒரு நாளைக்கு நல்ல நேரம் பார்த்து — பூனை குறுக்கால போகாத வேளையில் புத்திமதி சொல்லிப் பார்ப்போம்.

துஷாந்தினி—அடம்பன்

**கேள்வி:-** *அண்மையகாலத்தில் விலைவாசி இப்படி ஏறுகிறதே.... உமது அபிப்பிராயம் என்ன?*

**பதில்:—** ஆம்..... முன்னர் சட்டைப்பையிலே காசைக் கொண்டுபோய் உரப்பையிலே சாமான்கள் வாங்கி வந்தோம். இப்போ உரப்பையிலே காசைக் கொண்டுபோய் சட்டைப்பையிலே சாமான்கள் வாங்கி வருகிறோம்.




செந்தூரன், மருதனார்மடம்.

**கேள்வி:-** *உழைப்பு - பிழைப்பின்றி ஊரைசுற்றிக் கொண்டிருக்கும் எனக்கு பிழைக்க ஒரு வழி சொல்லும் பித்தா?*

**பதில்:—** பிழைப்பதற்கு ஒரே வழி களைப்பின்றி உழைக்க வேண்டும்.எந்தத் தொழிலானாலும் பழிப்பின்றி — முழிப்புடன் செயல்பட்டால் திளைப்பது உறுதி.

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:—

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான — குறும்பான — யதார்த்தமான — பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை ஒக்டோபர் 24ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.



கேள்வி:—பித்தா! மாண்புமிகு ஜனாதிபதியிடம் நீர் கேட்க விரும்பும் கேள்வி என்ன?



பதில்:— ஜனாதிபதி அவர்களே, எமது நாட்டின் சுபீட்சம் உங்கள் பதவி விலகலிலா?

இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே. நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85,ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு— 14.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரமுகியில் ரஜினிக்கு ஜோடியாக சிம்ரன்


-சிம்ரன்-

ரஜனி படம் வெளியாகிறது என்றாலே அவரது ரசிகர்களுக்கும், விநியோகஸ்தர்களுக்கும் தீபாவளிபோல்தான்.

அத்தகைய பெரிய நடிகனான ரஜனி 2 வருட இடைவெளிக்குப் பின் அடுத்த படத்தை பற்றிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார். சிவாஜி புரொடெக்ஷனல் தயாரிக்கும் இந்தப் படத்திற்கு ''சந்திரமுகி'' என்று பெயரிடப்பட்டதும், படத்தை இயக்குவது பி.வாசு என்பதும் பழைய செய்திகள். புதிய தகவல் என்னவென்றால் படத்தில் இரண்டு கதாநாயகிகள். அதில் ஒருவர் சிம்ரன்.

ரஜனி சந்திரமுகி படத்தை அறிவித்ததும், மோகன்லால் நடித்த மணிச்சித்ரதாழ் என்ற மலையாளப் படத்தைத் தழுவித்தான் சந்திரமுகியின் கதை அமைக்கப்பட்டிருப்பதாக சினிவட்டாரத்தில் பேசப்பட்டது.இப்போது கதை அதுவல்ல என்கிறார் இயக்குநர் பி.வாசு.

அவர் கூறியதாவது:—

சந்திரமுகி மணிச்சித்ரதாழ் படத்தின் மறுபதிப்பு அல்ல. அந்தப் படம் ஒரு பேயையும், பேய் ஓட்டுபவரையும் பற்றிய கதை. சந்திரமுகியின் கதை வேறு. இந்தப் படத்தில் பேய் கிடையாது, ரஜனி பேய் ஓட்டுபவரும் அல்ல.

சந்திரமுகி படம் முழுக்க, முழுக்க என்னுடைய கதை. வதந்தி பரப்புபவர்களைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. நம் வேலையை நாம் செய்வோம் என்று ரஜனியே சொல்லிவிட்டார்.

என்னிடம் ஒரு ரசிகர், தலைவர் படத்துக்குப் போய் சந்திரமுகி என்று ஒரு பெண்ணின் பெயரைத் தலைப்பாக வைத்து இருக்கிறீர்களே என்று கேட்டார். இது போன்ற கேள்விகளுக்கு என்னுடைய பதில் எம்.ஜி.ஆர் புகழின் உச்சத்தில் இருந்தபோதுதான் மகாதேவி என்ற படத்தில் நடித்தார். அதுமட்டுமல்ல அவருடைய சொந்தப்படத்துக்கு அடிமைப்பெண் என்றுதான் பெயர் சூட்டினார்.

சந்திரமுகியில் 2 கதாநாயகிகள் இருக்கிறார்கள். அதில் ஒரு கதாநாயகியாக நடிக்க சிம்ரனை ஒப்பந்தம் செய்துள்ளோம். இன்னொரு கதாநாயகியை தேடி வருகிறோம். பெரும்பாலும் அது மும்பையைச் சேர்ந்த புதுமுகமாக இருக்கலாம் என்று கூறினார். கதாநாயகிகள் இருவரில் ஒருவர் அமைதியானவராம். மற்றொருவர் அல்ட்ரா மாடர்னாம்.

இதில் சிம்ரன் எந்தப் பாத்திரத்தில் நடிக்கிறார் என்று இன்னும் முடிவாகவில்லை. கடந்த சில வாரங்களுக்கு முன்பு மதுரை வந்த சிம்ரன், ரஜனியிடம் ஜோடி சேர்ந்து நடிக்க ஆர்வமாக உள்ளேன் என்று கூறினார். இந்நிலையில் அவருக்கு இந்த அதிஷ்டம் அடித்துள்ளது.

முன்னதாக சிம்ரன் கர்ப்பமாக இருக்கிறார் என்று கூறப்பட்டது. ஆனால், சிம்ரன் ஒரு குளிர்பான கம்பெனி விளம்பரத்துக்கு 5 வருட ஒப்பந்தம் போட்டுள்ளார். அது முடியும் வரை கர்ப்பமாக முடியாது. இப்போது சிம்ரன் ரஜனி படத்தை ஒத்துக் கொண்டுள்ளார். படம் நவம்பர் முதல் வாரத்தில் தொடங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



# ராகுலுடன் 32 கவர்ச்சி நடிகைகள்

பிளஸ் – 2 வரை கிராமத்திலே படித்தவன் அந்த மாணவன். பட்டப்படிப்புக்காக பக்கத்து நகரில் உள்ள கல்லூரியில் சேருகிறான். அதுவரை அவன் நகரையே கண்டதில்லை. நகர வாசம் அவனுக்குப் புதியது. ஆண்களுக்கு சமமாக பெண்கள் பழகுவது புதுமையாகத் தெரிகிறது. ஆண்களும், பெண்களும் சிரித்துப் பேசி செல்வதைப் பார்த்து அதிசயித்து நிற்கிறான்.

பணக்கார மணவர்கள் அப்பாவி இளைஞனை வேடிக்கைப் பொருளாக்கி வேடிக்கை பார்க்கிறார்கள்.தங்களது கேர்ள் பிரண்ட் உதவியோடு கிராமத்து இளைஞனை சீண்டிப்பார்க்கின்றார்கள். தன்னைச் சுற்றி நடக்கும் சூழ்ச்சி தெரியாத அந்த கிராமத்து இளைஞன், முதலில் கூச்சம் காரணமாக விலகி விலகிப்போகிறான். நாளாக நாளாக கிராமத்து இளைஞனுக்கு சக மாணவிகள் தன்னோடு விளையாடுவது பழகிப் போய் விடுகிறது. அதுவே அவன் வாழ்க்கையில் விபரீதமாகி அவன் ஒரு பெண் பித்தனாக மாறி விடுகிறான். ஒரு பெண்ணோடு ஏற்பட்ட பழக்கம் பல பெண்கள் என்றாகி அவன் வாழ்க்கையே சீர்கெடுகிறது.

கிராமத்து இளைஞனாக ராகுல் கதாநாயகனாகவும், கதாநாயகியாக ப்ரிசாத்தும், ஹேம லதா, பபிதா, ப்ரிதா, ஸ்வீட்டி, பிரேமலதா என 32 கவர்ச்சி நடிகைகள் இந்தப் படத்தில் அறிமுகமாகிறார்கள்.


-நக்மா-

# சின்னத்திரையில் பெரிய நடிகைகள்

சின்னத் திரைக்கு எதிராக சினிமாக்காரர்கள் ஒரு பக்கம் போர்க்கொடி தூக்கிக்கொண்டிருந்தாலும், சின்னத்திரை வட்டாரம் நாளுக்குநாள் அசுர வளர்ச்சியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கு இன்னொரு உதாரணம் இந்தச் செய்தி.

ஏற்கனவே ராதிகா, குஷ்பு, கௌதமி, ரோஜா, மதுபாலா என சினிமாவில் கொடிகட்டிப் பறக்கும் நடிகைகள் அத்தனைப்பேரும் சின்னத்திரைக்கு வந்து சேர்ந்துவிட்டார்கள். சமீபத்தில் ஒரு மைக்கேரா தொடரில் மெட்டாலிக் குரலுக்குச் சொந்தக்காரியான வசுந்தராதாஸும் வந்து கலக்கியிருக்கிறார். அடுத்த வரவு – சீதா பார்த்திபன், கல்யாணத்துக்குப் பின் நடிப்பதில்லை என்று முடிவெடுத்திருந்தவரை ஒரு தொடர் மூலம் நடிக்க அழைத்து வந்திருக்கிறார் இயக்குநர் ஜி.எம்.குமார்.

இதற்காக இவருக்கு பேசப்பட்டிருக்கும் சம்பளம் நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம்! சினிமாவில் நடிக்கும் போது கூட சீதா இவ்வளவு பெரிய சம்பளம் வாங்கியதில்லை. தவிர.. மொத்தமாக பத்துலட்சம் முற்பணம் கொடுத்திருக்கிறார்கள். பின்னர் தேவைப்படும்போது, அதாவது ஐந்து நாள் படப்பிடிப்பு நடத்த வேண்டும் என்றால் அதற்கான சம்பளத்தை முன் கூட்டியே கொடுத்து விடவேண்டும் என்ற ஒப்பந்தத்தோடு நடிக்க வந்திருக்கிறார்.

இந்த வரிசையில் நக்மாவும் நடிக்கப்போகிறார் என்பதுதான் புதிய தகவல் 'மருமகள்' தொடர் தயாரிக்கும் ஸ்டார் விஜய் நிறுவனம் இன்னொரு தொடரை தயாரிக்கப்போகிறார்கள். அதில் நக்மாதான் கதாநாயகி. நாள் ஒன்றுக்கு ஒன்றரை லட்சம் சம்பளம் கொடுப்பதாகச் சொல்லி சம்மதிக்க வைத்திருக்கிறார்கள்!

இவ்வாறு போனால் சின்னத்திரையை யாராலும் அசைக்க முடியாது என்பது மட்டும் நிச்சயம்!


-விஜய்-

# விஜய் – அஜித் லடாய்!

கில்லி பட வெற்றிக்குப்பின்னர் மதுர படமும் வெளிவந்து வெற்றி நடைபோடுவதால் விஜய் மிகவும் சந்தோஷமாகக் காணப்படுகிறார். தமது சந்தோஷத்தை பகிர்ந்து கொள்வதற்காக நிருபர்களைச் சந்தித்தார் விஜய். அப்போது அவரை நோக்கிப் பாய்ந்த சரமாரியான கேள்விக்கணைகளில் சில....

''மதுர படத்தில் பல காட்சிகள், பாட்ஷா,சாமி போன்ற படங்களை நினைவுபடுத்தியதே!''

''ஆமாம். அதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால், அவ்வாறான கதைகளில் நான் நடிக்கவில்லை. அது எனக்குப்புதிது. என் ரசிகர்கள் விரும்புவார்கள்'' என்றார்.

''அஜித்துக்கும், உங்களுக்கும் என்ன பிரச்சினை?''

''எங்களுக்குள் எந்தப்பிரச்சினையும் இல்லை. இடையிலே இருக்கிறவர்கள் தான் எமக்குள் சண்டையை மூட்டி வளர்க்கிறார்கள். அவர்களின் முயற்சி பலிக்காது.''

''உங்களது அடுத்த படம் பற்றி...?''

''திருப்பாச்சி படத்தில் சாதாரண நடுத்தரக் குடும்பத்து மகனாக நடிக்கிறேன். இந்தப் படம் பொங்கலுக்கு வெளிவரும்.''

''அடுத்த படம் தாணு தயாரிப்பில் வெளிவருகிறது. படத்துக்கு இன்னும் பெயர் வைக்கவில்லை. இயக்குநர் யாரென்பதும் இன்னும் முடிவாகவில்லை. இந்தப்படத்தை எனது ரசிகர்கள் தமிழ்ப்புத்தாண்டுக்கு எதிர்பார்க்கலாம்.''

''நீங்கள் சமீப காலத்தில் நடித்து வெளிவந்த படங்கள் எல்லாம் ஊர் பெயர்களிலேயே அமைந்துள்ளதே? ஏதாவது நம்பிக்கையா?''

இக் கேள்விக்கு மௌனமாக சிரிப்பையே பதிலாக்கினார் விஜய்.

''வித்தியாசமான பாத்திரங்கள், விருது பற்றியெல்லாம் எண்ணுவதில்லையா?''

''அந்த ரிஸ்க் எல்லாம் நான் எடுக்க மாட்டேன். அப்படி எடுத்தால் கூட அது எனது சொந்தப்படமாகத்தான் இருக்கும்''என்று முடித்துக்கொண்டார்.

# விவேக்கின் கிண்டல்

விவேக் நடித்த ஒரு படத்தில் சென்சார் போர்ட் அதிகாரியான ராஜுவை கிண்டல் செய்திருக்கிறார். நான் நினைத்திருந்தால் விவேக் இல்லாமல் செய்திருப்பேன் என்று கோபப்பட்டிருக்கிறார் ராஜு!


-ஷெரீன்-

# ஷெரீனின்...

எனக்குப்பிடித்த பானம்: Fresh [...] soda (Salt)

என்னைக் கவர்ந்தது ரீ.வி நிகழ்[...] கார்ட்டூன்ஸ்

எனக்குப் பிடித்த [...]தகம்: sid[...] cheldon [...]ன் புத்தகம்

எனக்குப் பிடித்த உடை: Tracks [...] loose shirts

என்னைக் கவர்ந்த கலர்: Pink & W[...]

எனக்குப்பிடித்த லொக்கேஷ[...] மூணாறு

அண்மையில் என்னைக் கவ[...] படம்: தேவதாஸ்

என்னைக் களைப்படையச் செய்[...] ஜிம்னாஷியம்

பாசமழையில் நனைவது: [...] அம்மாவின் அன்பில்

என் பிறந்த நாள்: மே 5 ஆம் திக[...]

எனது ஈ.மெயில் விலாசம்: disha124@hotmail.co[...]

# கண்ணம்மா ஆகிவிட்டார் மீனா

கலைஞரின் கண்ணம்மா படத்தில் சேது அபிதாதான் நாயகியாக ஒப்பந்தம் செய்யப்பட்டார். ஆனால், 'உள்ளக்கடத்தல்' படப் பிரச்சினையால் அவர் மீது தயாரிப்பாளர் சங்கம் தடை போட்டிருக்கிறது.

இந்த நிலையில் கலைஞரின் படத்தில் நடிப்பது என்னுடைய வாழ்க்கையில் கிடைத்த மிகப் பெரிய பெருமை. தயவு செய்து இதில் பிரச்சினை பண்ணாதீர்கள் என அபிதா கேட்டுக் கொண்டார்.

செய்த தவறை ஒப்புக் கொண்டு அதற்குப் பரிகாரமும் தேடியதால் ஜோதிகா மீதான தடையை தயாரிப்பாளர் சங்கம் நீக்கியது. ஆனால், 'உள்ளக்கடத்தல்' பிரச்சினையில் நஷ்ட ஈட்டை அபிதா தரவில்லை. அதனால், தயாரிப்பாளர் சங்கம் தடைநீக்க மறுத்தது.

இதையடுத்து அபிதாவை நீக்கிவிட்டு மீனாவை ஒப்பந்தம் செய்துள்ளார்கள் கண்ணம்மா படத்தில்.

சந்திரமுகி படத்தில் நடிக்க ஆசைப்பட்ட மீனா இப்போது கண்ணம்மா படத்தில் நடிக்கிறார். இப் படத்துக்கு நீண்ட இடைவெளியின் பின் கருணாநிதி திரைக்கதை வசனம் அமைக்கிறார்.



# எம். குமரன் சன் ஒஃப் மகாலட்சுமி விமர்சனம்

அழகிய அம்மா – ஆக்ரோஷ மகன் இடையே நெகிழவைக்கும் பாசப்பிணைப்பு, பின்னணியில் இரண்டாவது மனைவியுடன் தனியாக வாழும் கணவன். திடீரென்று அம்மா இறந்து விட, அம்மா ஆசைப்படி அப்பாவுடன் சேரும் மகன் என்ன வானான் என்பது கதை.

அம்மா நதியாவுடன், மகன் ''ஜெயம்'' ரவி அடிக்கும் ஜாலிக்கூத்துகள் முதல் பாதியில்; அப்பா பிரகாஷ்ராஜு[...]டன் மோதல் போக்குடன் சிடுசிடுப்பாக இரண்டாவது பாதி என்று ரவி வெளுத்து வாங்கியிருக்கிறார்.

''ஜெயம்'' படத்திற்கு அடுத்து மிக நீண்ட இடை[...] வேளைக்குப் பிறகு ரவியின் இரண்டாவது படம் என்றாலும் நடிப்பதற்கு முயற்சி எடுத்திருப்பதும், [...] மெருகு கூடியிருப்பதும் கவனத்திற்குரியது. ''முதல் படத்தில் பார்த்த அப்பாவி ரவியா இது?'' என ஆச்சரியப்படுமளவிற்கு ஆக்ஷனில் அது[...]களம் பிண்ணுகிறார்.

இப்போதைய ஆக்ஷன் ஹீரோக்கள் பலரின் [...] வயிற்றில் அநியாயத்துக்கு புளி கரைத்[...]திருக்கிறார்.

''ஜெயம்'' ரவி அக்காவாக... மன்னிக்க[...]வும், அம்மாவாக.. வரும் நதியா இன்னும் இளமைப் பொலிவோடு இருப்பது ஆச்சர்[...]யம் தருகிறது. கதாநாயகனின் அம்மா[...]வாக, அவரைக் கற்பனை செய்ய முடியவில்லை. அக்கா போன்ற உணர்வே ஏற்படுவதால், அம்மா – மகன் சென்டிமென்ட் காட்சிகள் மனதோடு ஒட்டாமல் போகிறது.

ஜோடியாக வரும் அஸின், மிக இயல்பான நடிப்பு , அளவான அழகு. பாத்திரத்திற்குரிய சரியான தேர்வு. தந்தையாக வரும் பிரகாஷ்ராஜ் வழக்கம்போல தனது பாணியில் நிறைவாகச் செய்திருக்கிறார். சில இடங்களில் அதிகளவாக நடிப்புத் தென்பட்டாலும் ரசிக்க முடிகிறது. ஆனால், அவரை ''கிக் பாக்ஸிங்'' சாம்பியன் என்னும் போதுதான் நெருடுகிறது. சித்தி ஐஸ்வர்யா, தங்கை தீபு என்று எல்லோரும் சரியான அளவில் நடித்திருந்தாலும், விவேக்கின் நகைச்சுவை பெரிய அளவில் உறுத்தல்.


'எம். குமரன்' -ஜெயம் ரவி, அஸின்-

கதைக்கும், காமெடிக்கும் சம்பந்தமில்லாமல் தனி வழியில் விவேக் பயணிப்பது இதிலும் தொடர்கிறது. இரட்டை அர்த்த வசனங்கள், ஆபாச நகைச்சுவை என்று விவேக்கின் ''புரட்சிப் பயணம்'' கண்டிக்கத்தக்கது. வெண்ணிற ஆடை மூர்த்தி – விவேக் கூட்டணி நகைச்சுவை – ஆபாசக் குப்பை.

இருந்த போதும் திடீர்த் திருப்பங்கள், குத்து – வெட்டு என்றில்லாமல் மிகச் சாதாரணமான கதையை ஜெட்வேகத்தில் பரபரப்பாகக் கொண்டு போயிருக்கிறார் இயக்குனர் ராஜா!

இப்படி படம் வராததுதான் ப்ளஸ்ஸும், மைனஸும்!

இடைவேளை வரை ஜாலியான, சாதாரண கதை. அதற்குப் பிறகு குடும்பத்திற்காக, தங்கைக்காக போராடும் கதாநாயகன் என்று பழைய எம்.ஜி.ஆர், பாணியை நவீனமயமாக்கியிருக்கின்றனர். இடைச் செருகலான ''கிக் பாக்ஸிங்'' சமாச்சாரம் ஹாலிவுட் ஸ்டார் வான்டாமேயின் ''கிக் பாக்ஸர்'', சமீபத்தில் தமிழில் வெளியான ''ஜெய்ராம்'' படங்களில் மனதைப் பின்னோக்கிச் செலுத்துகிறது.

இருந்தாலும் சமீபகால ''ஆக்ஷன்'' படங்களுக்கு சற்றும் சம்பந்தமில்லாமல் இருப்பதால் ''பாஸ்மார்க்'' வாங்குகிறது. இசை அமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவாவின் இசை காதுகளுக்கு எரிச்சல்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



'சத்ரபதி'
-சரத்குமார், நிகிதா-

# சரத்தின் ஐயா

கவிதாலயா தயாரிக்கும் 'ஐயா' படத்தில் நாயகன் சரத்குமாருடன் முக்கிய வேடத்தில் நெப்போலியன் நடிக்கிறார். ''புதுநெல்லு நாத்து'', ''மனு நீதி'', ''விருமாண்டி'' படங்களுக்கு பிறகு மீண்டும் இந்தப் படத்தில் நெப்போலியன் – ''வயதான வேடத்தில்'' நடிக்கிறார்.

இப் படம் ரஜனிக்காகத் தயாரிக்கப்பட்டது என சினிமா வட்டாரங்கள் பேசிக் கொள்கின்றன.

படத்தில் நெப்போலியன் மகளாக கேரள அழகி நயனதாரா நடிக்கிறார். மகன் சரத்குமார் இவரைத்தான் காதலித்து கரம் பிடிக்கிறாராம்.

விரைவில் வெளிவர இருக்கும் ''ரிமோட்'' படத்தைத் தொடர்ந்து ''தூயவன்'' படத்திலும் நடிக்கும் நெப்போலியன், ''ஐயா'' தனக்கு ரொம்பவும் நல்ல பெயர் வாங்கித் தரும் என்று நம்புகிறாராம். ''அரசியல் பொது நிகழ்ச்சிகள், கம்ப்யூட்டர் பிஸினஸ், இவற்றுக்கு நடுவே சினிமாவிலுள்ள நல்ல வேடங்களில் தொடர்ந்து நடித்துக் கொண்டுதான் இருப்பேன் என்கிறார் நெப்போலியன்.

# சினி டிப்ஸ்

தெலுங்கு இயக்குநர் ஒருவரை திடீர் திருமணம் செய்து கொண்ட ரம்மியமான நடிகை நான்கு மாதம் கர்ப்பமாக இருக்கிறார். பிரசவத்திற்காக ஆஸ்திரேலியாவில் உள்ள தனது தங்கை வீட்டிற்குச் செல்லத் திட்டமிட்டு இருக்கிறார்.

* * * * *

கேரளவரவான அஷின் இரண்டு புதிய படங்களில் ஒப்பந்தமாகி இருந்தார். ஒரு படத்தில் ஒரே நாள் மட்டும் நடித்தார். இன்னொரு படத்தில் ஆறு நாட்கள் நடித்தார். இரு படங்களும் இப்போது கைவிடப்பட்ட நிலையில் பாவம் அஷின்.

* * * * *

சூப்பர்ஸ்டார் புதிதாக நடிக்கப் போகும் படத்தை வாங்கி விநியோகிக்கப் போட்டி போடுகிறார்கள். யாரைப் பிடித்தால் படம் வாங்கலாம் என்று நாலா பக்கமும் ஓடித் திரிகிறார்கள். படப்பிடிப்புத் தொடங்குவதற்கு முன்பே இத்தனை எதிர்பார்ப்பா என ஒரு பட அதிபர் வாயைப் பிளக்கிறார்.

* * * * *

ஒரு மோசமான வழக்கில் மாட்டிய, சின்னத்திரையில் வில்லி நடிகை எனப் பெயர் பெற்ற பூனைக் கண் நடிகை, சங்கரன் கோவில் என்ற பெயரைக் கேட்டால் பதட்டம் அடைகிறார். என்னவோ ஒரு மர்மம் அதில் அடங்கியிருப்பதாக விடயம் தெரிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

# கவலையில் சொர்ணமால்யா



'வசூல்ராஜா M.B.B.S.'
-ரகஸ்யா-

இளமை புதுமை நிகழ்ச்சியின் மூலம் புன்னகை மன்னியாக அறியப்பட்ட சொர்ணமால்யா இப்போது சோகத்தில் மூழ்கியிருக்கிறார். சோகத்திற்கு சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சினைகள் மட்டும் காரணமல்ல. எந்த சினிமா உலகை நம்பி மணவாழ்க்கை முறிந்தாலும் பரவாயில்லை என்று நினைத்திருந்தாரோ அதே சினிமா உலகம் தன்னைக் கைவிட்டது தான்.

# புதுமை – புரட்சி – பிரமாண்டம். அதுதான் அனுமான்!

மனித வாழ்க்கைக்கு உணவும் நீரும் மிக முக்கியம். உணவு உற்பத்திக்குத் தேவையான தண்ணீரைத் தேக்கி வைக்க பெரிய பெரிய அணைக்கட்டுக்கள் தேவை. இந்தத் தேவையை உணர்ந்து பிரகாஷ்ராஜ் காவிரிப் பாசனப் பகுதியில் மிகப் பெரிய ஒரு அணைகட்டத் திட்டமிட்டு, அதற்கான வேலைகளைச் செய்து வந்தார்.

இதனால் தங்கள் சுயநலம் பாதிக்கப்படும் என்று கருதிய பிள்ளை என்பவர் பிரகாஷ்ராஜின் முயற்சியை முறியடிப்பதுடன், அவரை ஒழித்துக் கட்டவும் சதி வலையை பின்னினார். அது யாரும் எதிர்பாராத விபரீத விளைவுகளை உண்டாக்கியது.

இப்படியொரு கதையமைப்பைக் கொண்ட படத்தை ''அனுமான்'' என்ற பெயரில் ஸ்ரீராகவேந்திரா மூவி இன்டர்நேஷனல் என்ற படக் கம்பெனியின் சார்பில் வி.ஸ்ரீகல்யாண்பாபு தயாரித்து வருகிறார். இதில் அர்ஜுன் இதுவரை ஏற்று நடித்திராத புதுமையான வேடத்தில் நடிக்கிறார்.

இவருடன் பிரகாஷ்ராஜ், ரம்யாகிருஷ்ணன், காதல் அழிவதில்லை, காதல் கிசுகிசு போன்ற படங்களின் கதாநாயகி சார்மி, நித்தின், ஸ்ரீவாஸ், ராஜலெட்சுமி மற்றும் பலர் நடிக்கின்றனர்.

மிகப் பிரம்மாண்டத் தயாரிப்பான ''அனுமான்'' படத்தின் கதை, திரைக்கதையை எழுதி கிருஷ்ணவம்சி இயக்க, வசனத்தை சீனிவாச மூர்த்தி எழுதியுள்ளார்.

இந்தப் படத்தில் வரும் கிராப்ஃபிக்ஸ் காட்சிகள் இதுவரை இந்தியப் பட வரலாற்றில் இல்லாத ஒன்றாகும். அதேபோல் பிரம்மாண்டத்திற்கும் வெளிநாட்டில் படமாக்கப்பட்ட குளுகுளு காட்சிகளுக்கும் பஞ்சமேயில்லை.

# காதல் வலையில் பிரசாந்த்

இத்தனை காலமாக எலிஜிபிள் பேச்சலர் லேபிளுடன் சுற்றிக்கொண்டிருந்த பிரசாந்த் சத்தமே போடாமல் ஒரு பெண்ணைக் காதலித்து வந்தார்.

அந்த காதல் நாயகியை இப்போது வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொள்ளவும் போகிறார். பிரசாந்தின் மனம் கவர்ந்த பெண் ஏற்காட்டைச் சேர்ந்தவர். பெயர் ராஜ ராஜஸ்வரி.

திருமணம்வரை பொறுத்திருப்போம்.

# விவகாரமான ஆளு குத்து ரம்யா!

படிப்பது கீதை, இடிப்பது பெருமாள் கோயில் என்ற பழமொழி குத்து படத்தின் மூலம் அறிமுகமாகிய நாயகி ரம்யாவுக்குக் கச்சிதமாகப் பொருந்தும்.

தமிழ்படங்களில் நடிப்பதிலும் பணம் சேர்ப்பதிலும் ஆர்வம் காட்டிவரும் ரம்யா, அதே நேரத்தில் தமிழ்ப் படங்களுக்குக் குழிபறித்துவரும் கர்நாடக திரையுலகினருக்கும் சார்பாக ஜால்ரா போடுகிறார்.

# சிரிச்சி சிரிச்சி வந்தா சீனா தானா டோய்...

இந்தப் பாடலுக்கு இத்துனூண்டு உடையில் ரகஸ்யா போட்ட அனல் ஆட்டத்துக்கு தியேட்டர்களில் விசில் பறக்கிறது. எல்லாத் தமிழ் தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் முதலாம் இடத்தைப் பிடித்த பாடல் இதுதான்.

விடுவார்களா நம்மவர்கள்? ரகஸ்யாவை நோக்கி படையெடுக்கும் தயாரிப்பாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கணிசமான அளவு ஏறிக்கொண்டிருக்கிறது.

சரத்குமார் நடித்த கம்பீரம் படத்திற்கு தான் முதலில் ரகஸ்யாவை மும்பையில் இருந்து கூட்டி வந்தார்கள். ஆனால் படம் பேசப்படாததால் ரகஸ்யாவும் கண்டு கொள்ளப்படவில்லை. திரும்பி மும்பைக்கே போன ரகஸ்யா தனது துணை நடிகை வாழ்க்கையைத் தொடர ஆரம்பித்தார்.

வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்சில் சீனா தானா டோய் மூலம் ரகஸ்யாவை மீண்டும் களத்தில் இறக்கிவிட்டார் இயக்குனர் சரண்.

பாடல் எக்குத்தப்பான ஹிட் ஆகிவிட இப்போது ரகஸ்யா மிகவும் பிஸி.

மும்பை துணை நடிகையாக திரையுலகை அறிந்த ரகஸ்யாவுக்கு சீனா தானா பாடலுக்கு ஆடத்தரப்பட்ட சம்பளம் 2 லட்சம். பாட்டுக்கு இவர் போட்ட துள்ளல் ஆட்டம், அந்தப் பாடலில் இவர் வீணை வாசித்த அழகு (டான்ஸ் மாஸ்டர் தினேஷ் உபயத்தில்.) கோடம் பாக்கத்தை கிடுகிடுக்க வைத்துவிட்டன.

மும்தாஜ் நடனம் இல்லாமல் படத்தை வெளியிட மாட்டோம் என ஒரு காலத்தில் அடம் பிடித்த விநியோகஸ்தர்கள் இப்போது ரகஸ்யாவின் குத்தாட்டம் ஒன்றையும் சேர்த்துத்தருமாறு கோரிக்கை வைக்க ஆரம்பித்துவிட்டனர்.

இதனால் ஜெயம் ரவி நடித்த எம்.குமரன் சன் ஆப் மகாலட்சுமி படத்தின் படப்பிடிப்பு எல்லாம் முடிந்த பிறகு, ரகஸ்யாவை 3 லட்சம் ரூபாய் கொடுத்து கூட்டி வந்து ஒரு நடனம் ஆடவைத்து படத்தில் சேர்த்து சுடச்சுட நல்ல விலைக்கு விற்றுள்ளார்கள்.

இப்படி பல படங்களில் இருந்தும் 'சிறுக்கி சிறுக்கி மக சீனா தானா' போன்று நடனம் ஆடச் சொல்லி ரகஸ்யாவுக்கு நச்சரிப்புக்கள்.

தனுஷ் நடிக்கும் 'தேவதையைக் கண்டேன்' படத்தில் வழக்கமான தனுஷ் ஆட்டத்துக்கும் ரகஸ்யாவை ஒப்பந்தம் செய்துள்ளார்கள்.

இவரின் வரவால் மும்தாஸ், கும்தாஸ் போன்ற கவர்ச்சி நடிகைகள் கலங்கிப் போயுள்ளனர்.



'அந்நியன்'
-சதா-

# சதா கொடுத்த ஷாக்! பதற்றத்தில் அந்நியன்!



'அந்நியன்'
-விக்ரம்-

தமிழ் ரசிகர்கள் என்ன பாவம் செய்தார்களோ தமிழில் நடிக்கும் சில நடிகைகள் ஆரம்பத்தில் போர்த்திக் கொண்டு நடிப்பார்கள். ஆனால், தெலுங்குப் பக்கம் என்று மற்ற மொழிப்படங்களில் நடிக்கும் போது மட்டும் காஸ்ட்யூமா? அப்படின்னா என்ன? என்பார்கள்.

அந்தப் பட்டியலில் வருகிறார் நடிகை சதா. இவர் கன்னடத்தில் நடித்த மோனலிசா என்ற படத்தில் ஒரே ஆபாசம்தானாம். அஞ்சரைக்குள்ள வண்டி என்ற பலான படம் மாதிரி என்கிறார்கள் படம் பார்த்தவர்கள்.

சதாவின் குளியல் காட்சியில் இருந்து கற்பழிப்பு காட்சி வரை ஒரே தாராள மயம் தானாம். இப்போது மீண்டும் தமிழக்கு கொண்டுவரும் முயற்சியில் இருக்கிறார்கள். இதனால் போயிருப்பது சதா மட்டுமல்ல.... சதாவை வைத்து படம் எடுத்துக் கொண்டிருக்கும் ஷங்கரும் தான்.

அந்நியன் படத்தில் ஐயராத்து பெண்ணாக நடித்திருக்கும் சதாவின் இமேஜை குழி தோண்டி புதைத்துவிடுமோ என மோனலிசாவை நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார் அந்நியன் பட இயக்குநர் ஷங்கர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

### எழுத்தறிவித்தவனை ஏற்றிப்புகழ்ந்திடுவோம்

ஆசிரியப் பணியெனும்
அரும்பெரும்பணியை
ஆற்றிய ஆசிரிய
பெருந்தகைக்கு
விழாவெடுத்துப் போற்றி
அவர்புகழ்பாட
புண்ணியமாய்
அமைந்துவிட்ட ஆசிரிய
தினமதனில் போற்றிடுவோம்
அவன் சேவையை!
எண்ணையும் எழுத்தையும்
எமக்கூட்டி
ஏற்றம் புரிய வந்த
எழுத்து அறிவித்த
எம் ஆசானை ஏற்றி
புகழ்ந்திடுவோம்.
கல்விச் செல்வமதை
கனியமுதாக்கி
பள்ளிச்சாலையிலே ஊட்டி
விட்ட நல்ல மனிதன் அவன்
ஆசிரியனாம்– அவனை
நன்றி கூறித் தொழுதிடுவோம்.
அவையத்து முந்தியிருக்கச்
செய்த தந்தையும் இவன்
தந்தை என்னொற்றான் கொல்
எனும் மகனையும்
எழுத்து அறிவித்து
ஏற்றம் புரிந்த ஆசிரியனை
போற்றிப் புகழ்ந்திடுவோம்
அவன் பணியை.
ஆசிரிய தினமதில்
நன்றி கூறி
ஆசிரிய திலகங்களை
தொழுது நிற்க
அரும்பணிச் சேவையை
கௌரவிக்க
அமைந்த தினமதுவே
ஆசிரியர் தினம்.

*சாந்தையூர்*
*சக்திவேல்.*

### கறுப்புப் பணம்

பாதி வயிறு நிரம்ப
பானைத் தண்ணீர் குடித்து
படுக்கவொரு பாயும்
இருக்கவொரு குந்தியுமாக
குடிசையில் குந்தியிருந்தவன்
கூலிவேலை செய்து
கொஞ்ச நஞ்சப்
பணஞ் சேர்த்துப்
பட்டணம் படிக்கச் சென்று
பாய்ந்த மறுமாதம்...
மாடிவீடும் மாருதிக்காரும்
கிராமத்து வாடை கண்டன
கஞ்சி குடித்தவன்
பஞ்சுமெத்தையில்
படுத்துருண்டு
பல்லக்கில் பவனிவந்தான்!
பல மாதம் படர...
பார்க்காத நாளொன்று அவன்
பகடையைப் பந்தாடியது
காய்ந்த மரத்திலொரு
கருவண்டுபோல்
காக்கிகள் கனத்தன
கிராமம் அலசி
சீல் வைத்தார்கள் சீர்கேட்டு
சீர் சினத்திகளை
கண்ட அத்தனையும்
கானல் கருவூலமோ?

*சி.அருண்*
*கிரான்.*

### முகவரியற்று!

தினந்தோறும் தேடினேன்
தூரத்து நிலவானாய்
தித்திக்கும் நினைவுகள்
தூங்கின ஊமையாய்!
திடீரெனப் பூமியில்
தூவிடும் மழைத்துளியாய்
கிடைத்தது உன் மடல்
முகவரியற்றாவது.

*என்.நிலவன்*
*உடையார்கட்டு வடக்கு.*

வாழ்க்கை
இன்பத்திற்கும்
துன்பத்திற்கும்
இடைப்பட்ட தத்துவம்

பூமி
எல்லோர்க்கும்
பொதுவென்ற
வாடகைவாழ்வகம்

உறவுகள்
காலமாற்றத்தில்
வந்து போகும்
குழப்பமான விம்பங்கள்

தாடி
காதல் நிலவு
மறைந்து போக
ஆக்கிரமித்துக்கொள்ளும்
அமாவாசை

கனவு
விழிப்பில் மறையும்
வினோத விம்பங்கள்

நிலவு
வானத்து
வசியப்பெண்

*கு.தவசீலன்*
*விசுவமடு.*

### வீரைவாயா?

உன் சுவாசக்காற்றை
பத்திரப்படுத்தியதாலேயே
இன்னும் என்னால்
உயிர் வாழ முடிகின்றது.
அது தீர்ந்து போவதற்குள்
விரைவாயா என்னிடம்

*என்.உதயபவான்*
*உடையார்கட்டு வடக்கு*

*பெண்*
ஆண்களை ஆட்கொள்ளும்
ஆபாச நோய்.

இறப்பு
உடல் இயந்திரத்திற்கு
உயிர் மின்சாரம்
கொடுத்த ஓய்வு.

*எம்.ஜே.அஜ்ஹத்,*
*சீனக்குடா.*

### நீ எதையாவது எழுது!

கம்பனும் கண்ணதாசனும் போல்
கவிவரிகளால்
காதல் வேட்கையை
என்னால் ஏற்படுத்தமுடியாது
உனக்கு!
மேத்தாவும் வைரமுத்துவும் போல்
புதுக்கவிதைப்பாணியில்
காதல் வலை பின்னும்
கற்பனை வரிகளை
என்னால் கோர்க்க
முடியவில்லை!
இருந்தாலும்
எனது கண்ணுக்கு – நீ
ஐம்பொன்னால்
வார்த்தெடுத்த சிலை!
வண்ணத்தமிழ் அழகி – நான்
பார்த்த பெண்களிலே – நீ
பத்தரை மாற்றுத் தங்கம் – தமிழ்
பண்பாட்டில் சைவப்பற்றில்
இறை பக்தியில்
பழுத்தகனி!
கவரிமானொத்த வாழ்க்கையில்
கண்போன்ற தாய் மண்ணை
கட்டிக்காப்பதில்
பெண்ணினத்திலே – நீ
பேரொளி!
அன்பானவளே நான்
அனுப்பும் இக்கவி மடலுக்கு
என்ன பதில் எழுதுவாயோ?
சொன்னால் நீ
நம்ப மாட்டாய்?
உன்னால் தான் எனக்கு
கவி எழுதும்
கலை வந்ததடி!
எதையும் தாங்கும் இதயம்
என்னிடம் இருப்பதால்
நீ எதையாவது எழுது!

*கவிக்குயிலன்*
*சேனையூர் 06.*

### உறங்காத விழிகள்!

வேய்ந்த விழிகளுடன்
என்னுள்ளேயே என்னைப்
பார்க்கின்றேன்
விசித்திர நினைவுகள்
இன்னும் என் நினைவினில்
தொட்டுத் துளைக்கிறது.
உறக்கமென்று ஒன்றென்னை
உரசுகிறது.
இமை மூட முடியவில்லை
போர்வைக்குள் முள்
இருப்பதாக
ஓர் உணர்வு
விழித்துக் கொண்ட போதுதான்
புரிகிறது
வாழ்வதே முட் காட்டினுள்
என்பதை
இன்னும் உறங்கிக்
கொண்டிருக்கிறேன்
விழிகள் திறந்த வண்ணம்!

*தமிழன்பன் லூக்கஸ்*
*களுத்துறைச் சிறைச்சாலை.*

### அர்த்தமுள்ள அருவமாய்...

தூக்கத்தை எதிர்பார்த்து
தினம் தூங்காது
தவிர்க்கின்றேன்.
உறக்கத்தில் உன்வரவு கண்டு,
ஓலமிடக் கனவுவருமென்று
தெருவோரம் நின்று
தேடுகிறேன் உன்னை
உன் புறக்கணிப்பில்
மாற்றம்வருமென்று
புரியாத மொழிகளில் –உன்
நினைவுகளை
கிறுக்குகிறேன் – நீ
புரியவில்லையென்றாவது
என்னுடன் பேசுவாய் என்று
போதாத காலம்
நேற்றுப் போல் இன்றும் நீ
நொருக்கிவிட்டு நடக்கிறாய்
என்,
இதயத்தை நெருஞ்சி
முள்ளாய் நினைத்து
கத்தியழ எண்ணிக்
குளறுகிறேன்,
சத்தமின்றி எனக்குள்
ஏனென்றால்
என் எதிரில் எல்லோரும்
கை கொட்டி நகைப்பதால்–நீ
மறந்துவிடு எனையென்று
மறந்ததாக நடக்கின்றாய்
ஆனால்,
மறப்பதற்கு முயன்றும்
என்னால்
நினைக்கத்தான்
முடிகிறது உன்னை
நிச்சயமாய் உண்மை –என்
காதலில் துளி
கலப்படமுமில்லை நானறிய
நீயறிந்து ஓர்நாள் விம்முவாய்
விழி துடைக்கும்
விரலாய் இல்லாவிடினும்
வருடிவிடும் தென்றலாய்
அன்றும் உன் நினைவுகளுடன்
நான் இருப்பேன்
அர்த்தமுள்ள அருவமாய்....

*பா.பொன்நிலவன்*
*மீசாலை.*

### பாவச்சனம் மட்டும்...?

உயரக் கொடி பறக்கும்....!
ஊர் கிழியக் கை தட்டும்
துயரக் கதை "மீண்டும்"
தூர் பிளந்து வாய் கக்கும்....!
வேர் விட்ட விருட்சமெல்லாம்....
வெந்தழிந்து தான் போகும்!
கோரக் கொடு யுத்தம்...
கதவோரம் கை தட்டும்
பாழ் பட்ட "சனம் மட்டும்"
பட்டினியால் தான் சாகும்!
தேசம் வேனகயிலே.....
தெருவெல்லாம் "தோரணங்கள்"
மாதம் பன்னிரண்டும்
மரணத்தின் யாசகங்கள்
பாசம் பந்தமெல்லாம்.....
பற்றறுந்த "வானரங்கள்"
வேஷம் வெளுக்கிறது...
வெறு வாய்கள் மெல்கிறது...
நாசமாய்ப் போன யுத்தம்....
நகர் சத்தம் கேட்கிறது!
"பாவச் சனம் மட்டும்"....
பதை பதைத்துச் சாகிறது!
ஊர் கெடுத்தார் உருக் கெட்டார்
உருக் கெட்டார் ஊர் கெடுத்தார்
யார் கேட்டார்......?
எது கேட்டார்.....?
ஒரு கவளச் சோறேனும்...
உட்கார்ந்து உண்ணாமல்....
விடிவில்லா "சனம் மட்டும்"....
வெந்தழிந்து சாகிறது......!!!

*அஷ்டகவி*
*திருகோணமலை.*

### நீயல்லவா?

என் வாழ்வில் வசந்தமாய்
வார்த்தையில் உண்மையாய்
பார்வையில் கருணையாய்
இன்பத்தில் குழந்தையாய்
துன்பத்தில் தாயாய்
உணர்வில் நட்பாய்
என்னில் நீயல்லவா......!

*தி.தனுசியா*
*சாவகச்சேரி.*

### ஏன் இந்த (ஏ) மாற்றம்!

மலை மகள் மக்களுக்கு
வந்ததொரு நற்செய்தி
புது யுகம் காண ஒரு
புது முயற்சி
எங்களுக்கோ
எல்லையில்லாத மனமகிழ்ச்சி
ஆறாயிரம் பேருக்கு
ஆசிரிய தொழிலென்று
அறிவிப்புக்கள் வந்ததே
அன்று
ஆனந்தக் கூத்தாடி
அங்குமிங்கும் போராடி
ஆவணங்கள் அதனைத் தேடி
அருமையாய் வந்தோம்
உங்களை நாடி
தகைமைக்கு முதலிடம்
தகுதிக்கு புகழிடம்
எங்களிடம் உண்டு
( நியமன )வெற்றிடம்
நிச்சயம் தருவோம்
உங்களுக்கு என்றீர்கள்
மலை மக்கள் நாங்களும்
மாண்புறுவோம்
என்றது மனசாட்சி
மனக் கோட்டைகளை
மணலாக்கிப் போனதே
மகத்தான உங்கள்
அரசாட்சி
வெட்டிச் சோறு என
விரட்டுகையில்
வேலைக்குப் போய்
விடுவேன் என
விறாப்பாய்க் கூறியது
எத்தனை பேர்
புகைக்குள் புதைந்த
பூவை புதுவுலகு
காண்பேன் என்றாள்
தலைமகனை ஈன்ற
தந்தையவன்தகுதியுடன்
தலை நிமிர்வேன் என்றான்
எண்ணங்கள் தீயாய்ப்
பொசுங்கரக்கங்கள்
அனலாய் தெறிக்க
ஆவணங்கள் அங்குமிங்கும்
அலைபாயஅடியோடு
எம் நெஞ்சை
நொறுக்கி விட்டீர்களே!
மாறியதய்யா உங்கள்
பதவி மாற்ற கையெழுத்து
மாறியே விடுமா எங்கள்
தலையெழுத்து
பதவிகள் ஏனோ இடமாற்றம்
திட்டங்கள் எல்லாம்
உருமாற்றம்
எங்களுக்கு ஏன்
இந்த ஏமாற்றம்?

*யசோதரை சரவணபவன்*
*இறக்குவானை*

### நண்பனே...!

நண்பனே..!
நமது நட்பானது
கண்ணனுக்கும்
அர்ச்சுனனுக்கும்
உள்ள நட்பு
இது...
அன்பில் தோன்றி
ஆத்மாவில் இணைந்தது!
சுயநலங்களை
சுட்டெரித்து
தியாக
தீபங்களாய்த் திகழ்வது !
விஷ்ணுவின்
விரிந்த மார்பில்
வீற்றிருக்கும்
இலட்சுமிதேவியாய்
என்...
நெஞ்சத்துள்
நிறைந்து இருப்பது
நீ தான்
உன்னைப் பிரிந்த
நாள் முதல் தேடுகிறேன்
எப்போது எனை
வந்து...
சேர்வாய்?

*வாலாஜா எஸ்.எம்.நிக்ஷன்*
*செல்வபுரம்*
*முல்லைத்தீவு.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார 'ராசிபலன்' 18–10–2004, 24–10–2004
### பொ. சந்திரன்

### இவ் வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| | செவ்வாய் சித்திரை செவ்வாய்<br>சுக்கிரன் ஆயிலியம் புதன்<br>புதன் சுவாதி+விசாகம் ராகு+குரு | | |
| | சூரியன் சித்திரை செவ்வாய்<br>குரு அத்தம் சந்திரன்<br>சனி புனர்பூசம் குரு | | சுக்கிரன் |
| | | புத<br>சூரியன்<br>கேது | செவ்வாய்<br>குரு |

ஐப்பசி 2 முதல் 8 வரை

சந்திரன் தனு முதல் கும்பம் வரை

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை1.**

ராசிக்குரிய செவ்வாய் 6 இல் இருப்பது சிறப்பானது. மேலும், சொந்த நட்சத்திரத்தில் இருப்பது விசேஷம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. இருப்பினும் ராசியில் ராகு இருப்பது பிரச்சினைகளைக் கொடுக்கலாம். மன அமைதி இருக்காது. (2,7) உரிய சுக்கிரன் 5 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமணவாய்ப்பு உண்டு. நாலாம் இடம் சுத்தமாக இருப்பதால் தாய் நலம். வீடு, வாகனம் லாபம் தரும். கர்மாதிபனான சனி மூன்றில் இருப்பது விசேஷம். பிதா நலம். தொழில்துறை முன்னேறும். ஆலய வழிபாடு அமையும். 7 இல் கேது இருப்பது குடும்பத்தில் அமைதி இருக்காது. மற்றும் குரு மறைவது நல்ல பல பலன்கள் தாமதமாகலாம் அல்லது தடைப்படலாம்.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகினி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் நாலில் இருப்பது விசேஷம். மேலும் புதனின் நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய புதன் 6 இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். பிள்ளைகளின் கல்வியில் ஆர்வம்காட்டுவர். நாலுக்குரிய சூரியன் 6 இல் இருப்பது நல்லது. ஆனால் நீசமாவது கூடாது. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (7,12) உரிய செவ்வாய் ஐந்தில் இருப்பது கூடாது. திருமண வாய்ப்பைப் பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. இருப்பினும் குருவின் இருப்பும் பார்வையும் நிலைமையை மாற்றலாம். தர்ம, கர்ம அதியனும் யோகவானுமான சனி இரண்டில் இருப்பது நல்லதல்ல. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் ஐந்தில் இருப்பது நல்லது. மேலும் நட்புக்கிரகங்கள் ஆன ராகு, குரு ஆகியவற்றின் சாரத்தில் இருப்பது நல்லது. எடுத்தமுயற்சி வெற்றிபெறும். வீடு, வாகனம் லாபம் தரும். இரண்டாம் இடம் சுத்தமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். (7,10) உரிய குரு நாலில் இருப்பது நல்லதல்ல. சிலர் மத்திம பலனைக் கொடுக்கும் என்கின்றனர். ஆனால், கேந்திராதிபத்திய தோசம் மற்றும் பாதகாதிபதியாகும் தன்மையால் நன்மை செய்ய வாய்ப்பு இல்லை. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். தொழில்துறையில் பின்னடைவுவர வாய்ப்புள்ளது. ராசியில் உள்ள சனி தொழில்களஸ்திரம் ஆகிய வீடுகளைப்பார்ப்பது கூடாது.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் 6, 7, 8 ஆகிய வீடுகளைக் கடப்பதால் வார ஆரம்பத்திலும், மத்திய பகுதியிலும் நன்மையுண்டு. 8 இல் நன்மை செய்யாதபடியால் வார இறுதியில் நன்மையில்லை. இரண்டுக்குரிய சூரியன் நாலில் நீசமாவதால் கையில் பணம் இருக்காது. (4,11) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். மூத்த சகோதரத்துக்கு நல்லபலன் உண்டு. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (6,7) உரிய சனி 12 இல் இருப்பதால் திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். எதிரிகள் தூர விலகுவர். ராசியில் கிரகங்கள் இல்லாது இருப்பது, அதாவது வெற்றிடமாக இருப்பது மன அமைதி உண்டு. ஆனால் பாதுகாப்பு இருக்காது.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிக்குரிய சூரியன் மூன்றில் இருப்பது சிறப்பானது. ஆனால், நீசமானது குறை. மேலும், செவ்வாயின் சாரத்தில் இருப்பது பரவாயில்லை. எடுத்த முயற்சி தாமதமானாலும் நிறைவேறும். பிரயாண வாய்ப்பு உண்டு. (2,11) உரிய புதன் மூன்றில் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கு கூடாது. நண்பர்களால் தொல்லை வரலாம். (3,10) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பது தொழில் துறைமுன்னேறும். இளைய சகோதரத்துக்கு நல்ல பலனைக் கொடுக்கும். (4,9) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பது கூடாது. பெற்றோருக்கு நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (6,7) உரிய சனி 11 இல் இருப்பது திருமணவாய்ப்பு உண்டு. பகைவர் நண்பராகலாம். உடலில் முன்பு இருந்த நோய்விலகி உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் இரண்டில் இருப்பது நல்லது. மேலும், ஆரம்பத்தில் ராகுவின் சாரத்திலும் பின்பு குருவின் சாரத்திலும் இருப்பது நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். தொழில்துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும். (2,9) உரிய சுக்கிரன் 12 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதாவுக்கும் நல்லது. (4,7) உரிய குரு ராசியில் இருப்பது கூடாது. தாய்க்கும் நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். மேலும், இவ்விரு வீடுகளையும் சனி பார்ப்பது கூடாது. ராசியில் செவ்வாய் இருப்பது மன அமைதியைப் பாதிக்கலாம். குரு வழிபாடு செய்ய தீயபலனின் தாக்கம் குறையலாம்.

# ராசி பலன்

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன்11இல் இருப்து சிறப்பானது. மேலும், புதனின் சாரத்தில் இருப்பதும் விசேஷம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். பிரயாணவாய்ப்பு உண்டு. (2,7) உரிய செவ்வாய் 12 இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். 7 இல் ராகு இருப்பது குடும்பத்தில் அமைதி இருக்காது. (4,5) உரிய சனி 9 இல் இருப்பது கூடாது. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாதாவுக்கும் கூடாது. குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தாராது. 10 ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். ராசியில் கேது இருப்பது மன அமைதி இருக்காது. தேவையில்லாத பிரச்சினையால் கவலை வரலாம். மேலும், குரு மறைவது பல வழிகளிலும் தீமையானது. குரு வழிபாடு ஆறுதல் தரும்.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் 11 இல் இருப்பது யோகம். மேலும், சொந்த நட்சத்திர சாரத்தில் இருப்பது விசேஷம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு. முன்பு இருந்து நோய் விலகிஉடல் ஆரோக்கியமாக இருக்கும். பகைவர்கள் நண்பராவர். (2,5) உரிய குரு 11 இல் இருப்பது சிறப்பானது. கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3,4) உரிய சனி எட்டில் இருப்பது கூடாது. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். இளைய சகோதரத்துக்கும் கூடாது. (7,12) உரிய சுக்கிரன் 10 இல் இருப்பது நல்லதல்ல. திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. 10க்குரிய சூரியன 12 இல் நீசமாவது தொழில் துறையைப் பாதிக்கும். குருசுகம் இருப்பதால் ஆறுதல் உண்டு.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 10 இல் இருப்பது நல்லதல்ல. ஆனால், சந்திரனின் சாரத்தில் இருப்பது நல்லது. மேலும், குரு கேந்திராதிபத்திய தோசத்தை ஏற்படுத்தாலம். எடுத்த முயற்சி தடைப்படலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (2,3) உரிய சனி 7 இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் கூடாது. (7,10) உரிய புதன 11 இல் இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. தொழில்துறை முன்னேறும். மேலும், சனி 7 இல் இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. சனியின் பார்வை ராசிக்கும், நாலாம், ஒன்பதாம் வீடுகளுக்கும் கிடைப்பது கூடாது. சனி,குரு வழிபாடு தீவிர தன்மையை குறைக்கலாம். ராசியும் ராசிக்கு இருபுறமும் கிரகங்கள் இல்லாது இருப்பது பாதுகாப்பு குறைந்த நிலை.

**மகரம்: உத்தராடம்2,3,4,.திருவோணம், அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 6 இல் இருப்பது யோகம். மேலும், குருவின் சாரத்தில் இருப்பது சிறப்பானது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். சென்ற இடம் எல்லாம் சிறப்புக் கிடைக்கும். கையில் பணம் இருக்கும். (4,11) உரிய செவ்வாய் 9 இல் இருப்பது நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மூத்த சகோதரத்துக்கும் கூடாது. நண்பர்களுக்கும் நல்லதல்ல. (5,10) உரிய சுக்கிரன் 8 இல் இருப்பது நல்லது. தொழில்துறை முன்னேறும். குழந்தைகள் சிறப்படைவர். 7 ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. மேலும், குரு 9 இல் இருப்பதும் ராசியைப் பார்ப்பதும் நல்ல அம்சம். சகல தோசங்களையும் நிவர்த்தி செய்யும். ராசியிலும் ராசிக்கு இருபுறமும் இரு வீடுகளில் கிரகங்கள் இல்லாது இருப்பது குறை.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி ஐந்தில் இருப்பது கூடாது. ஆனால், குருவின் சாரத்தில் இருப்பது நல்லது. ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தடைப்படலாம். சயன சுகம் குறையலாம். (2,11) உரிய குரு 8 மறைவது கூடாது. கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கு கூடாது. நண்பர்களும் விலகி இருக்கக்கூடும். (4,9) உரிய சுக்கிரன் 7 இல் இருப்பது கூடாது. பெற்றோருக்கு நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். 7 க்கு உரிய சூரியன் 9 இல் இருப்பது கூடாது. திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. (3,10) உரிய செவ்வாய் 8 இல் இருப்பது கூடாது. தொழில் துறையில் பின்னடைவு வரவாய்ப்புள்ளது. இளைய சகோதரத்துக்கு கூடாது.

**மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 7 இல் இருப்பது விசேஷம். மேலும், சந்திரனின் சாரத்தில் இருப்பது சிறப்பு, எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். தொழில்துறை முன்னேறும். இருப்பினும் கேந்திராதிபத்திய தோசம் உண்டு. அடுத்த இவ்விரு வீடுகளையும் சனி பார்ப்பது குறை. (2,9) உரிய செவ்வாய் 7 இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் நல்லதல்ல. (4,7) உரிய புதன் 8 இல் இருப்பது கூடாது. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமணவாய்ப்பைப் பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. தாய்க்கும் நல்லதல்ல. சுக்கிரன், குரு ராசியைப்பார்ப்பது நல்லது. தோசம் விலகும். சனி, செவ்வாய் ராசியைப்பார்ப்பது கூடாது. சில, பல தடைகளை உருவாக்கக்கூடும்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 130

சொற்சிலம்பம் 130 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் ஒக்டோபர் 24 ஆம் திகதி ஆகும். விடைகள் ஒக்டோபர் 31ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் நவம்பர் 7 ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.128க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 130

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | ■ | 10 | | | |
| 11 | | | 12 | | | | ■ |
| | ■ | 13 | | | | ■ | 14 |
| ■ | 15 | | | ■ | 16 | | |
| 17 | | | ■ | 18 | | ■ | |
| 19 | | ■ | 20 | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 128

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 செ | ண் | 2 ப | 3 க | ம் | ■ | 4 அ | 5 க |
| ந் | ■ | 6 த | டு | ■ | 7 க | த் | தி |
| 8 த | 9 க | ர் | ப் | 10 பு | ■ | 11 த | ரை |
| 12 மி | டி | ■ | 13 பு | த் | 14 த | ர் | ■ |
| ழ் | ■ | 15 உ | ■ | 16 தி | ரு | ■ | 17 உ |
| ■ | 18 க | த் | 19 த | ரி | ■ | 20 கா | டு |
| 21 ம | ந் | தி | ரி | ■ | 22 அ | ர | ம் |
| 23 கா | தை | ■ | 24 சு | ண் | ணா | ம் | பு |

## சொற்சிலம்பம் போட்டி இல. 130

**இடமிருந்து வலம்**

1. உலக வாழ்க்கை ஆரம்பம் இதனுடன். முதல் இரண்டு எழுத்தை நீக்கினால் வாழ்க்கை முடிவில் கிடைக்கும்தோற்றம்வந்துவிடும்.
4. ரக
6. பர்வதம்
7. ஒரு பூமரம். தற்கொலைக்குப் பலர் நாடுவது இதன் விதையைத்தான்
8. பெண்கள்.
10. மரவேலை செய்பவர்கள்
11. மோட்டார் சைக்கிள் ஓட்டிக்கும் தேவை துடுப்பாட்ட வீரருக்கும் தேவை.
13. கத்தி அழும்.
15. திருட்டு
16. அரிசியைத் தீட்டிப் பெறுவது
17. புண்ணியம் அல்ல.
18. அப்பாவி அல்லன்.
19. கொத்தாகக் காய்த்திருப்பது.
20. காலப் போக்கால் / நிரம்பலால் / மூப்பால் — வருவது.

**மேலிருந்து கீழ்**

1. சிறப்பு/ அதிவிஷேடம் . என்பதைக் குறிக்கும்
2. யுத்த பூமி.
3. பிடிப்பதற்கு விரிப்பது
4. சகிக்க முடியாத வக்கிரமமானது
5. முளைவிடும் இலை
7. பயம் நீக்கு.
9. முண்டத்துக்கு மேல் உள்ளது
10. பிழை.
12. வாசலில் இருப்பது.
14. நள்ளிரவு.
15. துன்பம், துயரத்தைத் தருவது
17. திண்மத்துக்கும் திரவத்துக்கும் இடைப்பட்ட நிலை.
18. அரைவாசி.

## சொற்சிலம்பம்-127 பரிசு பெறுவோர்.

1. எஸ். ஜீவன்,
22, 4/2 மூர் வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06.
2. சி.உமாபதிசிவம்,
இல.333/3 எஃப்,
சென் அந்தனிஸ் மாவத்தை,
கெரவலப்பிட்டிய வீதி,
ஹெந்தலை, வத்தளை.
3. நா.இராஜகிங்கன்,
18/5, குடியிருப்பு,
வவுனியா.

### பாராட்டுப்பெறுவோர்

1. திருமதி.ரீ.பரமேஸ்வரன்,
J/ 3 அன்டர்சன் தொடர்மாடி,
கொழும்பு.
2. செல்வி.வ. இளநிதி,
19/ 26 மாரியம்மன் கோயில் வீதி,
கல்லடி,
மட்டக்களப்பு.
3. செல்வன் க.நிரஞ்சன்,
டாரதி பிம்பராம வீதி,
களுபோவில,
4. அ.கோபிநாத்,
19/10 ஹத்போதிய றோட்,
களுபோவில,
தெகிவளை.
5. திரு.விஜயரட்ணம்,
இல. 79, விஜிதபுர மாவத்தை,
மாகஸ்தொட்டை,
நுவரெலியா.
6. எஃப ஜோர்ஜ்,
155/ 11 ஜம்பட்டா வீதி,
கொழும்பு—13,
7. நா.கணநாதன்,
60, சந்தை சுற்று வட்ட வீதி,
வவுனியா.
8. திருமதி.இ.சந்திரசேகரம்,
24, 32 வது வீதி,
வெள்ளவத்தை.
9. வ.கதிர்காமத்தம்பி,
இல.11 மூர் வீதி,
கொழும்பு — 06.
10. தி.மரியநாதன்,
21, கிறேஞ் ரெறஸ்,
பண்டாரவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெட் குறும்பு




'இந்த ஷேவிங் ரேசரை உபயோகித்து (SHAVE) ஷேவ் செய்தால்.... பூனையே இப்படி என்றால்.... நீங்கள் எப்படி....? என்ற தொனியில் இணையத் தளம் ஒன்று வெளியிட்டிருந்த விளம்பரம் இது.

# கண்ணாமூச்சி

அருகேயுள்ள படத்தில் எத்தனை நாய் முகங்கள் உள்ளது கண்டு பிடியுங்கள்.



# ஐடியா



உலகப்படத்தை பெரியதாக சுவரிலே மாட்டி வைத்து உலக நாடுகளின் இருப்பை அவதானிப்பது ஒரு ரகம் - பசுமாட்டிலே சும்மா அங்கும் - இங்கும் வெள்ளையாக, கறுப்பாக வடிவம் இருப்பதை விட்டு இப்படி உலகப்பட வடிவத்திலே மாடுகள் உருவானால் மாடுகள் அழகாகவும் இருக்கும் எமக்கும் உலக நாடுகளைப் பார்க்கவும் முடியும்.

இனிமேல் மாடுகளை படைக்கும்போது இவ்வாறு படைக்கும்படி கடவுளுக்கு யாராவது ஐடியா கொடுங்களேன் பிளீஸ்...

## ஜோக்

தனது முகாமையாளருக்கு முன்னால் கூனிக்குறுகி நின்ற படி "எனது மனைவிக்கு குழந்தை பிறக்கப்போகிறது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஒரு நாள் லீவு வேண்டும்" என்று மிகப் பணிவாக கேட்டான் ஜானி.


முகாமையாளருக்கோ அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. "தாராளமாக எடுத்துக் கொள்ளுங்கள்" என்று லீவுக்கான அனுமதியை வழங்கினார். மறுநாள் நேரத்துடன் வேலைக்கு வந்துவிட்ட ஜானியைப் பார்த்து "என்ன உமது மனைவிக்கு குழந்தை பிறந்துவிட்டதா? மகனா... மகளா...? எங்கே கற்கண்டு, ரொபி?" என்று கேட்டார் முகாமையாளர்.

ஜானி சொன்னான். "அதை இப்போது எப்படி சார் சொல்ல முடியும்?




இன்னும் பத்து மாதங்களின் பின்பு தான் தெரியவரும்."

# ஓவியச் சிரிப்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெமீமா எங்கிருந்தாலும் வாழ்க; முன்னாள் கணவன் இம்ரான்!



ஹொலிவூட் நடிகர் ஹக் கிரண்ட் டின் அன்பு அரவணைப்பில் இம்ரானின் முன்னாள் மனைவி ஜெமீமா



தனது காதல் மனைவியை இம்ரான் கான் பிரிந்து 5 மாதங்கள் ஆகின்றன. இருந்தாலும் மனைவியை விவாகரத்து செய்தார் என்பது அவருக்குள் வேதனையாகத்தான் இருக்கிறது.

மனைவி ஜெமீமாவை விவாகரத்து செய்தபோது கூட இம்ரான்கான் அவ்வளவாக வருத்தப்படவில்லை.

ஆனால் சமீபகாலமாக இந்தப் பிரிவு குறித்து வரும் தகவல்கள் அவரது மனதை காயப்படுத்துவன போல் உள்ளன. இதனால் விவாகரத்துக்குப் பின்னர் இம்ரான் முதல் முறையாக மனம் திறந்து பேசியிருக்கிறார்.

அதன்போது அவர் கூறியதாவது.:–

''ஜெமீமா என்னை விட்டுப் பிரிந்து போனார் என்பதற்கு நிச்சயமாக நான் காரணம் அல்ல. நான் அரசியலில் அதிபர் முஷாரப்பை எதிர்த்து நீண்ட நாட்கள் போராடி வெல்ல முடியும் என்ற நம்பிக்கை அவரிடம் கிடையாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பாகிஸ்தானில் இருப்பது அவருக்குப் பிடிக்காமல் போய் விட்டது. எனவே அரசியல் நெருக்கடியைத் தாங்க முடியாமல் போனது தான் எங்கள் விவாகரத்துக்கு முதல் காரணம்.

''நிச்சயம் எங்களது பிரிவிற்கு மூன்றாவது நபர் காரணம் அல்ல. இல்லையென்றால் எங்களுக்குள் மனவேறுபாடு தோன்றி ஒன்றரை வருடங்கள் கழித்து நாங்கள் பிரிந்திருக்கமாட்டோம்.

''அவருக்கு வேறொரு நபருடன் தொடர்பு இருந்ததால்தான் அவர் (ஜெமீமா) பிரிந்து விட்டார் என்கிறார்கள். இப்படி பேசுவது எனக்கு வேதனை தருவதாக இருக்கிறது.

''ஜெமீமா மிகவும் கவர்ச்சியான பெண். யாராவது அவரைப் பார்த்தால் நிச்சயம் அவரது அழகில் மயங்கிவிடுவார்கள். அவர் இன்னொரு திருமணம் செய்து கொண்டால் அதுபற்றி எனக்கு கவலையில்லை. எங்கிருந்தாலும் அவர் வாழ்க. என்னைப் பொறுத்தவரை அவருக்கு நான் நல்ல கணவனாகவே நடந்து கொண்டேன். இனி என் வாழ்வில் திருமணம் என்ற பேச்சிற்கே இடமில்லை. அரசியலில்தான் என் வாழ்க்கைப் போராட்டம் இருக்கும்'' என்று கூறினார்.

ஆனால், இம்ரான் – ஜெமீமா விவகாரம் வேறு விதமாகப் போகிறது.

ஜெமீமாவிற்கும் இம்ரான்கானுக்கும் வயது இடைவெளி அதிகம். 50 வயதாகும் இம்ரான்கானைவிட ஜெமீமா 20 வயது இளையவர். அதனால்தான் இருவருக்கும் இடையே தலைமுறை இடைவெளி காரணமாக மனவருத்தம் தோன்றி அது விவாகரத்துவரை போய்விட்டது என்கிறார்கள் சிலர்.

இன்னொரு காரணம், ஜெமீமா ஒரு வருடம் இம்ரான்கானைப் பிரிந்து லண்டனில் வசித்தபோது அவரது மனதை பிரபல ஹொலிவூட் நடிகர் கிரண்ட் கவர்ந்து விட்டார். இந்தக் காதல் மெல்ல மெல்ல முன்னேற்றம் அடைந்து, இருவரும் ரகசியமாய் ஊர் சுற்றும் அளவிற்கு வளர்ந்து விட்டது. 43 வயதாகும் ஹக் கிரண்ட் 14 வருடங்களாக லிஸ் ஹர்லி என்ற ஹொலிவூட் நடிகையுடன் குடும்பம் நடத்தியவர். ஜெமீமாவை சந்திப்பதற்கு முன்புதான் அவர் அவரது மனைவியை பிரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எப்படியோ பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் புயல்வேகப் பந்து வீச்சாளர் வாழ்க்கையில் வீசிய சூறாவளி அவரைக் 'கிளீன் போல்ட்' ஆக்கிவிட்டது.

# மணிரத்னம் இயக்கத்தில் நடிகனாகிறார் சச்சின்

இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் முதல் முறையாக குறும் படம் ஒன்றில் நடிக்கிறார். இயக்குநர் மணிரத்னம் திரைக்கதை எழுதும், உடல் ஊனமுற்றவர்களைப் பற்றிய இந்தப் படத்தின் படப்பிடிப்பு கடந்த வாரம் சென்னையில் ஆரம்பமானது. சச்சின் விளையாடுவதைப்பார்க்க ஆர்வமாக மைதானத்தில் கூடும் குழந்தைகள் படப்பிடிப்பு நடந்த இடங்களிலும் நூற்றுக் கணக்கில் குவிந்து விட்டனர்.

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஊனமுற்றோர்களின் நலனுக்காக செயல்படும் அமைப்பு 'சக்தி பவுண்டேசன்'. இந்த அமைப்பு ஊனமுற்றவர்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக குறும்படம் ஒன்றைத் தயாரிக்கிறது. இப்படத்திற்கு திரைக்கதை எழுதி இயக்குபவர் மணிரத்னம். சமீபத்தில் தமிழிலும், ஹிந்தியிலும் ஒரே நேரத்தில் வெளியான 'ஆயுத எழுத்து', 'யுவா' வெற்றிக்கு பின்னர் மணிரத்னம் இயக்கும் அடுத்த படம் ஊனமுற்றவர்களின் நலனுக்கான இந்தக் குறும்படமே. ஏற்கனவே பல ஆண்டுகள் 'சக்தி பவுண்டேசன்' நடிவடிக்கைகளில், பங்குபெறும் கிரிக்கெட் வீரர் அனில் கும்ளே கேட்டுக் கொண்டார் என்பதால், சச்சின் டெண்டுல்கர் இந்தக் குறும்படத்தில் நடிக்கிறார். இதன் படப்பிடிப்பு கடந்த வாரம் நுங்கம்பாக்கத்தில் உள்ள சர்வதேச டெனிஸ் மைதானத்தில் நடந்தது.

மதியம் ஒரு மணி வரை நடந்த படப்பிடிப்பில் உற்சாகமாக சச்சின் கலந்து கொண்டார். தேர்ந்த நடிகரைப் போலவே அடிக்கடி முடியை சரி செய்து கொண்டும், சளைக்காமல் உடை மாற்றிக் கொண்டும் நடித்த சச்சினைப் பார்க்க ஏராளமான குழந்தைகள் கூடி விட்டனர்.

மைதானத்தில் ஓட்டங்களை சச்சின் குவிக்கும் போது குழந்தைகளிடம் இருக்கும் அதே உற்சாகம், அவர் நடித்த போதும் இருந்ததுதான் ஆச்சரியம். சக்கர நாற்காலியில் உட்கார்ந்து ஊனமுற்றவர்களுடன் பேசி சிரித்து சச்சின் நடித்ததை ரசிகர்கள் கூட்டம் மூன்று மணி நேரம் நின்ற சளைக்காமல் வேடிக்கை பார்த்தது.



குறும்படத்தின் படப்பிடிப்பின் போது சச்சினும், மணிரத்னம் குழுவினரும்



அவுஸ்திரேலியா–இந்திய அணிகளுக்கிடையே பெங்களூரில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் அனில் கும்ளே தனது 400 ஆவது விக்கெட்டைக் கைப்பற்றினார்.

இதன்படி, இந்திய கிரிக்கெட்டில் 400 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவர் பட்டியலில் அவர் இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

இதைமுன்னிட்டு தாஜ் ஹோட்டலில் அவருக்கு விசேட பாராட்டு விழா ஒன்று நடைபெற்றது. அதன் போது தனது குழந்தைக்கு கேக் ஊட்டி மகிழும் அனில் கும்ளேயை படத்தில் காணலாம்.

# 60 ஆம் நாள் நினைவஞ்சலி

**மலர்வு** 10.03.1941 **உதிர்வு** 19.08.2004



**திரு. ஆழ்வாப்பிள்ளை மார்க்கண்டு**

இளைப்பயாறிய பொலிஸ் அலுவலரும், முன்னாள் விவசாயத்துறை மேற்பார்வையாளர் மன்னார் எருக்கலம்பிட்டி களஞ்சியப் பொறுப்பாளர் (வல்லை நெசவாலை)

வடமராட்சியதனில் பிறந்து
வளம்மிக்க தென்மராட்சியில் வாழ்ந்த
இலட்சிய வாழ்வுப் பூங்கா
இன்னலாய் இருண்டதப்பா – எம்
மோகனம் இசைந்த இல்லத்தில் இன்று
முகாரி இராகம் கேட்குதய்யா
தேடினாலும் கிடைத்திடாவெகு
தூரம் சென்றனையோ!

– குடும்பத்தினர்.

இந்துக்கல்லூரி வீதி, சங்கத்தானை
சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிஸ்டர் வேதாளம்



அலுவலகத்தில் முக்கிய வேலைகளிருந்ததால், அவைகளில் மூழ்கி இருந்தோம். எமக்கு முன்னே நிழலாடியது. யார் என்று நிமிர்ந்து பார்த்துவிட்டு பதைபதைத்துவிட்டோம். மிஸ்டர் வேதாளம் நின்றுகொண்டிருந்தார். கைகளிலே மாவு கட்டுப் போடப்பட்டு, கழுத்திலே இருந்து வந்த முக்கோணத் துணிஅவரது கையைத் தாங்கி இருந்தது. நெற்றியிலே பண்டேஜ். ஆங்காங்கே பிளாஸ்திரி என்று அந்த அவலங்கி நொந்து நூடுல்ஸாகி எம் முன்னால் நின்றார் வேதாளத்தார்.

''என்னய்யா... கோலமிது, எங்கே போய் வாங்கிக் கட்டினீர்?'' என்று கேட்டோம்.

''செய்தி சேகரிப்புக்காக கண்டி – மல்வத்தைக்குச் சென்றிருந்தேன்'' என்றார்.

எமக்கு எல்லாம் விளங்கியது. மல்வத்த பீடாதிபதியைச் சந்திக்க தமிழ் கூட்டமைப்புக்காரர்கள் சென்றபோது இவர் செய்தி சேகரிக்கச் சென்றிருக்கிறார். அங்கே எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களிடம் சிக்கி இருக்கிறார் என்பது விளங்கியது. ஆனால், சென்ற எல்லாச் செய்தியாளர்களும் பாதிப்பில்லாமல் திரும்பிய போது இவர் மட்டும் எப்படி அவர்களிடம் சிக்கினார்? அதை அவரிடமே கேட்டோம்.

''ஐயா! என்னால் தான் பறக்க முடியுமே என்ற துணிவில் கொஞ்சம் ஊடுருவிச் சென்றுவிட்டேன். என்னிடம் ஊடகவியலாளர் அடையாள அட்டையும் இருக்கவில்லை. அதனால் சந்தேகம் கொண்டு போட்டுத் தாக்கிவிட்டார்கள்'' என்றார்.

''சரி...சரி... இந்தத் தொழிலுக்குவந்தால் இதெல்லாம் சர்வ சாதாரணம். விடயத்தைச் சொல்லும். அந்தக் கூட்டத்தில் என்ன பிடுங்கினீர்...?''

''கூட்டமைப்புக்காரர்கள் கண்டிக்குச் சென்று ஒரே நாளில் மல்வத்த பீடாதிபதி, அஸ்கிரிய பீடாதிபதி ஆகிய இரு பௌத்த தலைவர்களையும் சந்திப்பது தான் திட்டம். அதற்குரிய ஏற்பாட்டை கேகாலை எம்பியான மனோ விஜயரட்ண செய்திருந்தார். ஆனால், இதற்கு இரு நாட்களுக்கு முன்னர் பல்வேறு இனவாத அமைப்புக்களைச் சேர்ந்த 12 பிரதிநிதிகள் இரு பீடாதிபதிகளையும் சந்தித்தனர். 'தமிழ் கூட்டமைப்பினர் விடுதலைப்புலிகளின் கையாட்கள். எனவே, அவர்களைச் சந்திக்கக்கூடாது' என்று நெருக்கடிகொண்டனர். இது தவிர பல அனாமதேய தொலைபேசி அழைப்புக்களும் அவர்களுக்குச் சென்றனவாம்.''

''ஓஹோ...! அது தான் அஸ்கிரிய பீடாதிபதி கூட்டமைப்பினரைச் சந்திக்கவில்லையோ?''

''ஆம்... இனவாதிகளின் வேண்டுகோளை அவர் ஏற்றுக்கொண்டுவிட்டார். தனக்கு வேறு வேலை இருப்பதாகச் சொல்லி சந்திக்க மறுத்துவிட்டார். ஆனால், மல்வத்த பீடாதிபதியிடம் அவர்களின் பாச்சா பலிக்கவில்லை. 'ஆமாம்... இந்த மல்வத்த மஹாவிகாரைக்கு யார் வந்தாலும் நான் வரவேற்கத் தயாராக இருக்கிறேன். அது பிரபாகரனாக இருந்தாலும் கூட நான் வரவேற்பேன். யாரையும் வர வேண்டாம் என்று சொல்லவோ.. அவர்களை எதிர்க்கவோ ஒரு புத்த பிக்குவாகிய எனக்கு அதிகாரம் கிடையாது.' என்று கடுமையாகச் சொல்லிவிட்டார்.''

''அந்தக் கடுப்பிலே தான் மல்வத்த வாசலில் எதிர்ப்புச் செய்ய கிளம்பினரோ...?''

''ஆம்...அதனை எதிர்பார்த்த பீடாதிபதி பாதுகாப்புத் தரப்புக்கு முன்னெச்சரிக்கை கொடுத்துவிட்டார்.''

''அதுசரி இவ்வளவின் பின்னர் சந்திப்பு சுமுகமாக நடந்திருக்கிறது தானே..!''

''ஆம்...ஆனால் இந்தப் பீடாதிபதி முன்னர் இருந்தவைகளை போலல்லவாம். வித்தியாசமானவராம். சமாதானத்தை சமாதானம் மூலமே கொண்டுவர வேண்டும் என்ற சிந்தனை உள்ளவராம். முன்னைய பீடாதிபதிகளை விட வயதில் இளையவராம். இவருக்கு தமிழர் தரப்பு நியாயத்தை எடுத்து விளக்கி அவர் மூலம் சிங்கள மக்களுக்கு சமாதானத்தின் தேவையை எடுத்து விளக்குவது தான் கூட்டமைப்பினரின் நோக்கமாக இருந்தது.''

''அது வெற்றி அளித்ததோ...?''

''இல்லை என்று தான் சொல்ல வேண்டும். தலதா மாளிகை தாக்குதல், அநுராதபுரம் தாக்குதல், பிக்கு ஒருவரின்கொலை என்று அடுக்கிக்கொண்டேபோன பீடாதிபதியிடம் ஏன் உங்கள் ஆட்கள் மட்டும் எமது தேவாலயங்களை, இந்து ஆலயங்களை அழிக்கவில்லையா என்று கேட்டுத்தான் அவரின் வாயை அடைக்க வேண்டி இருந்ததாம்''.

''ஓஹோ அப்படியோ...! வேறு''

''அதுமட்டுமல்ல.... சிங்கள மக்களிடம் உண்மைகளைத் தெரிவியுங்கள் என்ற பேச்சுக்கோ, அரசை சமாதானப் பேச்சுக்கு இழுத்துவரும்படியான வேண்டுகோளுக்கோ அவர் பிடிகொடுக்கவில்லையாம். ஜனாதிபதியின் சமாதானக் குழுவில் சேர்ந்து கொள்ளுங்கள் என்று ஒரே போடாய்ப்போட்டு விட்டாராம்''

''அப்ப பேச்சு தோல்வி என்கிறீரா?'' என்றோம்.

''இல்லை... என்கிறார்கள் கூட்டமைப்பினர். எமது பிரச்சினைகளை அவர் நன்றாகக் கேட்டார்... எம்மை ஆசீர்வதித்து நூல் கட்டி விட்டார் என்று சந்தோஷப்பட்டுக் கொள்கிறார்கள்'' என்றார்.

''அப்படியா...! அது சரி. அடுத்த சேதி என்ன?'' என்றோம்.

''அம்மா கட்சியினருக்கும் சிவப்புக் கட்சியினருக்கும் மீண்டும் லடாய். ஆனால், இது விடயத்தில் அமுக்கி வாசிக்கிறார்கள் இரு பகுதியினரும்.'' என்று புதிராகப் பேசினார் வேதாளத்தார்.

''என்னய்யா! தெளிவாகச் சொல்லுமேன்'' என்றோம்.

''அம்மா ஆட்சிக்கு வரும்போது அமைச்சர்கள் எண்ணிக்கை 25 ஐத் தாண்டாது என்றார். ஆனால் இப்போதே அமைச்சர்கள் – பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை 75ஐ தொட்டுவிட்டது. அதிலும் அம்மாவின் கட்சியில் வெற்றிபெற்ற 48பேரில் மூன்று பேர் தவிர ஏனைய அனைவரும் அமைச்சர்களும்– பிரதி அமைச்சர்களுமாகி விட்டார்கள்.''

''அட... ஆமாம்... அப்படியானால் ஏனைய மூவரும் யார், யார்?''

''விஜயதாச ராஜபக்ஸ, எச்.ஆர்.மித்ரபால, நிர்மல கொத்தலாவை. இவர்களில் விஜயதாஸ ஜனாதிபதியின்சட்டத்தரணி, ஏனைய இருவருக்கும் விரைவில் வேறு நல்ல பதவி கிடைக்கப் போகிறதாம். இதை எல்லாம் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கிறீர்களே என்று சிவப்புச்சட்டைக் காரர்களை சீண்டிவிடுகிறார்கள் எதிர்க்கட்சியாளர்கள். சிவப்புச்சட்டைக்காரர்கள் மனதுக்குள் குழம்பி– குமுறிக்கொண்டிருக்கிறார்கள். என்று கூறிவிட்டு.. விசுக்கென்று அல்ல.... வி... வி... சு... சு... க்... க்... கென்று... மெதுவாகப் பறந்தார் காயப்பட்ட வேதாளத்தார்.

# புலிகள் – முஸ்லிம் தலைவர்கள்.....

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏனெனில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் கைச்சாத்திட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், முஸ்லிம்களின் உயிர், உடமைகள் மற்றும் சொத்துக்களுக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் ஆட்கொலைகளும், கப்பம் அறவிடுவதும் தொடரவோ செய்தன – அவற்றுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுப்பில்லை எனவும் வேறு சில தீய சக்திகளின் கைவரிசையே அவை எனவும் புலிகள் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் உட்பட பிராந்திய மட்டத் தலைவர்கள் அனைவரும் மறுத்து வந்தனர்.

எனினும் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் புலிகள் மீதே குற்றம் சுமத்தி வந்தனர். அதனால் விரும்பியோ, விரும்பாமலோ தலைவர் ரவூப் ஹக்கீமும் புலிகளைக் குற்றச்சாட்டி –கண்டனம் தெரிவித்தார்.

அதனால் புலிகள் சீற்றமடைந்தனர். எம்முடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தவர்கள் – குறுகிய காலத்துக்குள்ளேயே எம்மீது அவநம்பிக்கை வெளியிட்டு – எடுத்ததற்கெல்லாம் எம்மை குற்றஞ்சாட்டி – கண்டிக்கிறார்கள் என்றால், அந்த ஒப்பந்தம் எதற்கு என புலிகள் கருதினர்.

## ஒப்பந்தம் காலாவதி

சென்ற வருடம் ஒக்டோபர் மாதம் கிழக்கு முஸ்லிம் செய்தியாளர்கள் வன்னி சென்று, புலிகளின் தலைவர்களைச் சந்தித்தபோது, மேற்படி ஒப்பந்தம் எப்போதோ காலாவதியாகிவிட்டது என அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் தெரிவித்தார்.

அத்துடன் அவர் இன்னுமொரு விடயத்தையும் சுட்டிக்காட்டினார். ''முஸ்லிம்களின் ஏக பிரதிநிதிகள் எனக் கருதியே முஸ்லிம் காங்கிரஸை அழைத்துப் பேச்சு நடத்தினோம். ஆனால், அக்கட்சி பல்வேறு துண்டுகளாக உடைந்து பிளவுபட்டிருப்பதால், இனிமேல் மு.கா.வுடன் தனித்துப் பேச மாட்டோம். எல்லா முஸ்லிம் தலைமைகளும் ஒன்றிணைந்தால் மட்டுமே முஸ்லிம் தரப்புடன் பேச்சு நடத்துவோம்'' என தமிழ்ச் செல்வன் முஸ்லிம் செய்தியாளர்களிடம் கூறியிருந்தார்.

எனவே, புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு முன்னதாக முஸ்லிம் தலைவர்கள் ஒற்றுமைப்பட்டு, கொள்கை ரீதியாக கருத்தொருமிப்புக் காண வேண்டும்.

புலிகளைச் சந்தித்து பேச்சு நடத்துவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் இப்போது தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என அதன் செயலாளர் ஹஸனலி தெரிவித்துள்ளார். அதே வேளை புலிகளுடன் முஸ்லிம் தலைவர்கள் பேச்சு நடத்துவதன் அவசியத்தை நுஆ செயலாளர் நாயகம் சேகு இஸ்ஸதீன் வலியுறுத்தி வருகிறார்.

பொதுவாக, புலிகளுடன் பேச்சு நடத்துவதன் மூலமே முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால், அது கட்சி அரசியலுக்கு அப்பால் சமூக நலன் கருதி – இதய சுத்தியுடன் – முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

## புலிகளுடன் முஸ்லிம் தலைமைகளின் கூட்டுச் சந்திப்பே அவசியம்

புலிகளுடன் சுமுகமான உறவைப்பேணி – அவர்களுடன் பேச்சு நடத்துவதற்கு மு.கா. மேற்கொண்டு வருகின்ற முயற்சிகள் மிகவும் வரவேற்கத்தக்கவையே.

தமிழ்– முஸ்லிம் மக்களிடையே உறவைக் கட்டி எழுப்புவதற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் கை கோத்துச் செயற்படுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் முன்வந்திருப்பதும் பாராட்டப்படவேண்டிய ஒரு விடயமாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகளைச் சந்திப்பதற்கு முன்னதாக ஏனைய முஸ்லிம் தலைவர்களை பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஒன்றிணைப்பதற்கும், அதன் பிரகாரம் முஸ்லிம் தலைவர்கள் அடங்கிய குழு ஒன்று புலிகளுடன் பேச்சு நடத்துவதற்குமான முயற்சிகளை முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொள்ள முன்வர வேண்டும்

முஸ்லிம் தலைவர்கள் ஒன்றிணைந்த அமைப்பு ஒன்றுடனேயே இனிமேல் தமிழீழ விடுதலைப்புலிகள் பேச்சு நடத்துவர் என்று தமிழ்ச் செல்வன் முன்னர் கூறியிருந்ததை மு.கா. நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

# சுதந்திரக்கட்சியின்....

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓடாது நிறுத்த வேண்டும்.'' இவ்வாறு லங்கம சுறிகீமி சமித்தி சண்ட நய (LANGAMA SUREKEEME SAMITHI SANDANAYA) இன் கூட்டத்தில் ஜே.வி.பி அமைச்சர் லால்காந்த் பேசியுள்ளார்.

### அரசாங்க ஊழியர்களைத் தூண்டும் ஜே.வி.பி

அனைத்து அரசாங்க ஊழியர்களும் ஐயாயிரம் ரூபாய் சம்பள உயர்வு கோரி நடவடிக்கையில் இறங்க வேண்டும் என்றும் அந்த அமைச்சர் அக் கூட்டத்தில் உரக்கக் கூவியுள்ளார்.

எல்லா வகையிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் அரசாங்கம் செயற்கையாக இழுத்துக்கட்டி வைத்திருந்த விலைவாசிகள் தற்பொழுது திறந்த பொருளாதாரச் சந்தையின் சந்தைக்காரணிகளின் சுயாதீன இயங்குகைக்கு விடப்பட்டதனால் சர்வதேச, உள்ளூர் சந்தைகளின் நிலைவரங்களின் செல்வாக்குக்கு உட்பட்டு றொக்கட் வேகத்தில் ஏறிக்கொண்டிருக்கின்றன. இவ்வாறான மக்கள் நலன் காப்பாற்ற முடியாத விவகாரங்களில் ஜே.வி.பி தூரவிலகிநின்று, ஜனாதிபதி சந்திரிகாவின் கட்சியினால் மட்டுமே இவ்விவகாரங்கள் நிகழ்வதாகக் காட்டி, அதற்கான பரிகாரங்களாக தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தூண்டுகிறது. இதன் மூலம் தூய அரசியல் இலாபத்தை ஜே.வி.பி சம்பாதிக்கத் தொடங்கிவிட்டது.

### ஆயிரம் குளங்களின் அரசியல்

ஆயிரம் குளங்களை ஆழமாக்கி புனரமைக்கும் திட்டமே ஜே.வி.பி கையில் எடுத்துள்ள மூன்றாவது விடயமாகும். இத்திட்டத்தின் மூலம் நாடளாவிய ரீதியில் விவசாயக் குடும்பங்கள் முழுவதற்கும் பெரும் நன்மைகளை அளிக்க முன்வந்துள்ள ஜே.வி.பி அவர்களின் ஒட்டுமொத்தமான அரசியல் ஆதரவையும் திரட்டிக்கொண்டுவிடும்.

ஆனால், இத்திட்டத்துக்குப் பொறுப்பான ஜே.வி.பி அமைச்சர் அனுர திஸநாயக்காவின் நடவடிக்கைகள் பற்றி ஜனாதிபதி மிகக் கடுமையான விமர்சனங்களை அமைச்சரவைக் கூட்டங்களில் முன் வைத்திருக்கிறார். ஆயிரம் குளங்கள் புனரமைப்புக்கு விவசாயிகளின் குழுக்களை ஏறத்தாழ ஆயிரம் அளவுக்கு நிறுவி அவர்கள் மூலமாகச் செயற்படுத்துவது என்று ஆரம்பத்தில் முடிவு எடுக்கப்பட்டிருப்பினும் ஜே.வி.பி தனது உறுப்பினர்கள், ஆதரவாளர்களின் மூலமாக அமைக்கப்படும் குழுக்கள் மூலம் இந்தப் புனரமைப்பைச் செய்ய முற்படுவதாகவும் இது நிதிப் பிரமாணங்களை மீறும் நடவடிக்கையாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

### குளங்களில் என்ன குளறுபடி?

மேலும், ஜே.வி.பி அமைச்சர் அனுர திஸநாயக்காவின் கீழ்வரும் ஆயிரம் குளங்கள் புனரமைக்கும் திட்டத்தின் குளறுபடிகள் தொடர்பாக தனக்கு இரு வாரங்களுக்குள் அறிக்கையிடுமாறு அந்த அமைச்சரை அமைச்சரவை மெமறெண்டம் (CABINET MEMORANDUM) மூலம் ஜனாதிபதி கோரியுள்ளார்.

ISGA ஐ எதிர்த்தல், வேலை நிறுத்த நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல் ஆகிய இரு விடயங்களிலும் வெற்றிகரமாக அரசியல் இலாபங்களைத் தேடிக்கொண்டிருக்கும் ஜே.வி.பி ஆயிரம் குளங்களை புனரமைக்கும் திட்டத்தில் நிதியமைச்சர் சரத் அமுனுகம, ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் ஆகியோரில் தங்கி நிற்க வேண்டிய நிலைமையில் உள்ளது. எனினும், ஆயிரம் குளங்களின் புனரமைப்புத் தொடர்பாக நிதியமைச்சரோ, ஜனாதிபதியோ எக்காரணத்தையிட்டும் காலதாமதம் செய்தால் விடயத்தை விவசாய மக்களுக்கு பிரசாரப்படுத்தி ஜே.வி.பி அதிலும் அரசியல் இலாபம் தேடவே முனையும் என்பது தெளிவு.

### அடுத்த வரவு, செலவுத் திட்டத்திலும் ஜே.வி.பிக்கு இலாபம்

பொருளாதார விடயங்களிலும் சரி, அரசியல் சமாதான நடவடிக்கைகளிலும் சரி ஒன்றுக்கொன்று மாறுபட்ட கொள்கைகளை முன்னெடுத்துவரும் ஜே.வி.பியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பரபரப்புடன் எதிர்பார்க்கப்படும் அடுத்த ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தை எவ்வாறு உருவாக்கப் போகின்றன. என்பதே இன்று எழும் முக்கிய கேள்வி ஆகும். ஜே.வி.பி அமைச்சர் லால்காந்த அறை கூவியுள்ள ஐயாயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பை அரச ஊழியர்கள் கோரினால் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கினால் ஆகக்குறைந்த சம்பள அதிகரிப்பாக 5 ஆயிரம் ரூபா வரவு செலவுத்திட்டத்தில் இடம்பெற வேண்டும் என்று ஜே.வி.பி வலியுறுத்தினால் அரசாங்கத்தின் பாடு குறிப்பாக திறைசேரியின் நிலை வலு திண்டாட்டமாகவே இருக்கும்.

ஆனால், எது நன்மையாக நடக்கிறதோ அது தன்னால் நடக்கிறது என்றும் எதுபாதமாக நடக்கிறதோ அதுஜனாதிபதியால் நடக்கிறது என்றும்ஜே.வி.பி தொடர்ந்தும் அரசியல் இலாபமீட்டியபடியே இருக்கும். ஜே.வி.பிக்கு தொட்டதெல்லாம் பொன்னாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகக் கண்ணோட்டம்



இரா. புத்திரசிகாமணி

# காட்டிக் கொடுப்பது கைவந்த கலையா?

இடதுசாரி இயக்கங்களின் பிதாவும், புட்சிகரமான எண்ணங்களைக் கொண்டவரும், ஏக காலத்தில் தமிழ் – சிங்கள மக்களின் பாராட்டைப் பெற்றவரும் தான் டபிள் டொக்டர் என்.எம்.பெரேரா. இலங்கையின் சுதந்திரத்துக்காக தமிழ்த் தலைவர்களுடன் இணைந்து செயற்பட்டவர். இவரிடம் தமிழர், சிங்களவர் என்றபேதம் இல்லை. சமவாத நோக்கம் கொண்டவர். அதனால் சமசமாஜக்கட்சியை ஆரம்பித்து தென்பகுதித் தமிழர்களின் ஆதரவையும் பெற்றவர் என்பதை எவரும் மறுக்க முடியாது. உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதை எதை எல்லாமோ பெற்றுக் கொடுக்க வேண்டும் எனப் பல போராட்டங்களை நடத்தியவர்.

தோட்டத் தொழிலாளர்கள், அரச ஊழியர்கள், தனியார் துறையினர் என அனைத்து ஊழியர்களினதும் சம்பள உயர்வு முதல் அடிப்படை உரிமைகளுக்காக 21 அம்சக் கோரிக்கைகளைத் தயாரித்து அரசாங்கத்தையே ஆட்டம் காண வைத்தவர். அன்று பிரதமர்களாக இருந்த டட்லி சேனநாயக்க, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆகியோருக்கு சிம்மசொப்பனமாக இருந்தவர். 21 அம்ச கோரிக்கையை முன்வைத்து காலிமுகத் திடலில் இவர் நடத்திய போராட்டம் சரித்திர முக்கியத்துவம் பெற்றது.

ஆனால் ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவின் காய்நகர்த்தல் டபிள் டொக்டரை அரசாங்கத்திடம் மண்டியிட வைத்துவிட்டது. அமைச்சரவையில் பலமிக்க நிதி அமைச்சுப் பொறுப்புக்களை இவரிடம் ஒப்படைத்துவிட்டார் அம்மையார்.

'நமது தலைவர் அமைச்சராகிவிட்டார். அதுவும் நிதி அமைச்சராகிவிட்டார். இனி நமது பிரச்சினைகள் தீர்ந்துவிடும், எனப் பெருமை கொண்டது தொழிலாளர் வர்க்கம்.

டபிள் டொக்டர் என்.எம்.பெரேரா 'நோ மணி' பெரேராவானார். 21 அம்சக் கோரிக்கை என்ன எதையுமே செய்யமுடியாது அரசிடம் பணம் இல்லை என்று கைவிரித்துவிட்டார். இதனால் புரட்சித்தலைவர் எனப் பாராட்டுகளைப் பெற்றவரை 'என்.எம். பெரேரா அண்ணாச்சி 21 அம்ச கோரிக்கை என்ன ஆச்சு?' என்று நையாண்டி செய்யும் நிலை ஆனது.

இந்த நிலைமை தான் இன்று இ.தொ.காவுக்கும் ஏற்பட்டுள்ளது. அன்று தாயாரிடம் மாட்டினார் டபிள் டொக்டர். இப்பொழுது மகளிடம் சிக்கிக்கொண்டார் ஆறுமுகன் தொண்டமான்.

''தொழிலாளர்களுக்கு முறையான குடியிருப்புகள் இல்லை. சுகாதார வசதிகள் இல்லை, சுத்தமான குடிநீர் இல்லை, ஆஸ்பத்திரிகள் இல்லை, பாடசாலைக் கட்டிடங்கள் இல்லை. அங்கே தேவையான ஆசிரியர்களும் நியமிக்கப்படவில்லை. படித்த இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகள் வழங்கப்படவில்லை.'' என்றெல்லாம் தோட்டத்துரைமாருக்கும் அமைச்சர்களுக்கும் பலகடிதங்களை தொழிற்சங்கப் பிரதிநிதியாக இருந்து எழுதியவர்தான் அமைச்சர் முத்து சிவலிங்கம்.

அப்போது துரைமாரிடம் இருந்து வந்த பதில் 'எங்களால் எதையும் செய்யமுடியாது அரசாங்கத்திடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்' என்பதே.

டபிள் டொக்டரைப் போன்று முத்து சிவலிங்கமும் பல்டி அடித்து விடுவாரா என்ற சந்தேகம் எழுந்துவிட்டது.

தொழிற்சங்கப் பிரதிநிதியாக இருந்து கடிதம் எழுதிய முத்து சிவலிங்கம் இன்று பெருந்தோட்டத்துறைக்கு மட்டுமல்ல சமூக அபிவிருத்திக்கும், வீடமைப்புக்கும் பொறுப்பான அமைச்சராகிவிட்டார். அன்று அவர் எழுதிய கடிதங்களுக்கு இப்பொழுது அவரே பதில் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டதுதான் யதார்த்தம்.

* குடியிருக்க வசதியான வீடுகள்.
* பாடசாலைக்கட்டிடங்கள்.
* ஆசிரியர் நியமனங்கள்.
* குடிநீர் – சுகாதார வசதிகள்.
* வாசிக சாலைகள்.
* படித்த இளைஞர் யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பு.

இவற்றுக்கெல்லாம் மனிதவலுவைத் தேடி அலைய வேண்டிய அவசியம் இல்லை. மலையகத்தில் படித்ததகுதிபெற்ற இளைஞர், யுவதிகளின் விவரங்கள் உங்களுடைய அமைச்சின் கணனியில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவர்களுக்கு எல்லாம் தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பீர்களா? உழைக்கும் தொழிலாளர்களுக்கு விமோசனம் பெற்றுத்தருவீர்களா? அல்லது டபிள் டொக்டர் என்.எம்.பெரேராவின் வழியில் காட்டிக் கொடுப்பது கைவந்தகலை என்று பல்டி அடித்து விடுவீர்களா? இது தான் அமைச்சர் முத்து சிவலிங்கத்திடம் மலையகம் எதிர்பார்ப்பது அது ஏமாற்றமாகிவிடக் கூடாது.




சென்ற முறை ஏற்பட்ட வெள்ளப் பெருக்கும், மண் சரிவும் டெனியாய பகுதியில் உள்ள தோட்டத் தமிழ்ப் பாடசாலைக்கும், அங்கு படிப்பித் தமிழ் பேசும் மூன்று ஆசிரியைகளுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டனவாம்.

தூர இருந்து வந்த இளம் ஆசிரியைகள் பாடசாலை விடுதியிலும், அயல் இடங்களிலும் தங்கி இருந்து வேலை செய்தனராம்.

அதிபரும் ஆசிரியைகளுக்கு விதம் விதமான தின்பண்டங்களை வாங்கி வந்து கொடுப்பாராம். இளம் ஆசிரியைகளும் ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் ருசித்துச் சாப்பிட்டார்களாம்.

அதிபரின் சாப்பாடு செமிக்காமல் மூன்று ஆசிரியைகள் ஒரே நேரத்தில் வாந்தி எடுக்க ஆரம்பித்துவிட்டனராம். இரகசியமாக டாக்டர்களிடம் போக விசயம் அம்பலமாகிவிட்டதாம். ஆளை விட்டால் போதும் என்று அதிபர் கம்பி நீட்டிவிட்டாராம். ஆறு மாதமாக ஆளையே காணோமாம். அனாதரவாக அல்லல்படுகின்றனராம் அப்பாவி ஆசிரியைகள்.



# டேஸ்ட்கடை தணிகாசலம்

தணிகாசலம் அண்ணன் கடை வீதிக்குப் போய் கடைக்குத் தேவையான சமான்களை எல்லாம் லொறியில் ஏற்றிவிட்டு, பஸார் பக்கம் சென்றார்.

அந்தப் பாடசாலையைத் தாண்டி சென்ற போது பாடசாலையில் இருந்து பெற்றோர் சிலர் வெளியே வந்தனர். அவர்கள் தணிகாசலம் அண்ணனைக் கண்டு அவரிடம் வந்தனர்.

''வணக்கம் அண்ணே!'' என்றனர்.

''வணக்கம் தம்பி! எப்படி எல்லோரும் நல்ல சுகமாக இருக்கின்றீர்களா?''

''நல்ல சுகம் தம்பி, என்ன காலையிலேயே ஸ்கூலுக்குப் பொயிட்டு வாராப்புல இருக்கு''

''ஆமாங்க அண்ணே! ஐந்தாம் வகுப்பு ஸ்கொலசிப் சோதனை ரிசல்ட் வந்து இருக்கு. அதைப் பார்க்கத்தான் போனோம்.''

''உண்மைதான் தம்பி இந்தமுறை ஏழு பேர் பாஸ்பண்ணி இருக்காங்களாமே?''

''ரொம்பச் சந்தோசமாக இருக்கு. உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதை மாதிரி 21பேர், 18 பேர், 10 பேர் என்று பாஸ்பண்ணி பாடசாலையில் கடைசியா 5 பேர், 3 பேர், 1ஆள் என்று சுத்தசூனியமாகிப் போய்விட்டது. அதனால் தான் இந்த ஸ்கூல் பக்கம் கூட போக ஆசை இல்லாமல் போய்விட்டது.''

''அதுவும் சரிதானுங்களே அண்ணே! ஒரு காலத்தில் இரத்தினபுரிப் பகுதியிலேயே நம்பர் வன் பாடசாலை. 5 ஆம் வகுப்பா இருக்கட்டும் இல்ல மத்த கவர்மென்ட் பரீட்சையாக இருக்கட்டும் எல்லாத்திலயும் முதல் இடம் நம்ப இஸ்கூலுக்குத்தான்.''

''ஆமாங்க அண்ணே! இதுதான் நாங்க படிச்ச இஸ்கூல், எங்கள் பிள்ளைகள் படித்த இஸ்கூல் என்று சொல்லிக் கொள்வதில் பெருமையாக இருந்தது.''

''இப்ப மட்டும் என்ன தம்பி! இந்தப் பகுதியில் வேற எந்தப் பாடசாலையிலையும் இல்லாதசகல வசதிகளும் இங்கதானே இருக்கு. அவசியமான கட்டிடங்கள், தகுதியான ஆசிரியர்கள் எல்லாம் இருக்காங்க. அதில ஒன்றும் குறைச்சல் இல்லியே!''

''அதில் எந்தவிதமான குறைகளும் இல்ல தம்பி. இந்த முறை ஜீ.சி.ஈ. சதாரணம், உயர் தரம் என்று கூட நிறையப்பேர் பாஸ்பண்ணி இருக்காங்க ஆனால்.......''

''என்ன தம்பி நல்லவிதமான காரியத்தை சொல்லிவிட்டு ஆனால் என்று இழுக்குரீங்க?''

''ஆமாங்க அண்ணே! இங்க படிச்சி குடுக்கிற ஆசிரியர்கள் மத்தியிலதான் ஒரே போட்டியும் பொறாமையும் தலைவிரித்து ஆடுது.''

''என்ன சொல்லுரீங்க; இப்பதானே தம்பி கீழே விழுந்த பாடசாலையை மீண்டும் கட்டி எழுப்புனாங்க.''

''அது உண்மை தாங்க அண்ணே! இந்த வாத்திமார் எல்லாம் அரசாங்கத்தில சம்பளம் வாங்கிக்கிட்டுத் தான் இங்க படிப்பிக்க வாறாங்க''



''என்னங்க அண்ணே சம்பளம் என்று மெதுவா சொல்லுரீங்க. டியூசன் பீஸ் என்று கிம்பளமும் இல்ல வாங்கிறாங்க''

''அப்படி சொல்லக் கூடாது தம்பி. நம்ம பிள்ளைகள் படிக்கணும். வாத்திமாரும் வேலை நேரம் முடிஞ்சி அவுங்க வேலைகளை எல்லாம் விட்டுப்புட்டு நம்பபுள்ளைகளுக்கு படிச்சிக் கொடுக்குறாங்க.''

''அவுங்களப் பற்றி ஒன்னும் சொல்ல இல்லீங்க. படிப்பிக்க வாரவுங்க வாத்திமார். படிக்க வாரவுங்க எல்லாரும் மாணவர்கள் இல்லீங்களா?''

''அதில் என்ன தம்பி சந்தேகம்? நம்ப புள்ளைகளுக்கு தாய்மார் மாதிரி படிச்சி கொடுப்பாங்க என்று தானே நம்பி அனுப்புகிறோம்.''

அங்கே போய்பார்த்தா இது பொலிஸ் காரன் வீட்டுப்புள்ள, இது தோட்டத்தொரையோட புள்ள, இது வாத்தியாரோட புள்ள, வாத்தியாரோட புள்ளைக்கு இன்னொரு வாத்தியார் படிச்சிக் கொடுக்கமுடியாது அப்படி இப்படி என்று அடம்பிடிக்கிறாங்களாம்.''

''இது என்னடா புதுக்கதையா இருக்கு. வாத்திமார் ஊட்டுபுள்ளைகளுக்கு மத்த வாத்திமார் படிச்சிக்கொடுக்க மாட்டோம் என்று அடம் பிடிக்கிறாங்களாம்.''

''என்னங்க இது, இஸ்கூல் என்ன இவங்க பாட்டன்'ர ஊட்டுச் சொத்தா? நினைச்சா படிச்சிக் கொடுப்போம். இல்லாட்டிமுடியாது என்று சொல்லிவிடமுடியும்?''

''முடியாது தான் ஆனால் இந்தப்பள்ளிக் கூடத்தில் அப்படித்தானே நடக்குது.''

''அப்படீன்னா ஹெட்மாஸ்டர் பிரின்ஸிப்பல் அப்படி இப்படி என்று ஒருத்தரும் இல்லியா?''

''இல்லாம என்ன? எல்லாம் இருக்காங்க. ஆனால் அவுங்க பேச்சைக் கேட்கத் தான் வாத்திமார் இல்ல.''

''இது அநியாயமா இல்ல இருக்கு. பிரின்ஸிப்பல் ஓடரை வாத்திமார் கேட்கிற காலம் போக இப்ப வாத்திமார் ஓடரை பிரின்ஸிப்பல் கேட்டு நடக்க வேண்டிய காலம் வந்துரிச்சி.''

''என்ன மோங்க அண்ணே! இப்பத்தான் கொஞ்சம் கொஞ்சமா வளர்ந்து வருது என்று சந்தோசப்பட்டால் இந்த வாத்திமாரோட போட்டா போட்டியில் நம்ப புள்ளைகளோடபடிப்பு இல்ல குட்டிச்சுவராப் போயிடும் போல இல்ல இருக்கு.''

''நாம என்னங்க அண்ணே செய்ய முடியும்? இந்தப் பள்ளிக்கூடத்திலயும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், தலைவர் காரியதரிசி என்று இருக்காங்கதானே! அவுங்க இதை எல்லாம் போய் கேட்க மாட்டாங்களா?''

''எப்படீங்க அண்ணே கேட்பாங்க இங்க ஒரு காலும் அங்க ஒரு காலும் இல்ல வைச்சுகிட்டு இருக்காங்க.''


''இங்க படிச்சுக் கொடுக்கிற வாத்திமாரோட புள்ளைகளும், கமிட்டியில இருக்கவுங்களோட புள்ளைகளும் கண்டியிலயும், அட்டனிலும் இல்ல படிக்கிறாங்க. அப்புறம் எப்படி இந்தப்பாடசாலையைப் பற்றி அக்கறை கொள்ளப் போறாங்க? நல்ல மனசோட படிச்சிக் கொடுக்கப்போறாங்க? இந்தப்பாடசாலையையும் நம்ப புள்ளைகளையும் ஆண்டவன்தான் காப்பாத்தனும்.''

''அப்படி ஒன்றும் சும்மா ஆண்டவன் வந்து பாக்கமாட்டார். நாங்களும் போய் அதிபரைக் கண்டு பேசி உடனடியாக பெற்றோர் கூட்டத்தைக் கூட்டச் சொல்லுவோம்'' என்று தணி அண்ணன் முன்னே செல்ல அக்கறை உள்ள பெற்றோர்களும் பின் சென்றனர். ஏதாவது நடக்குமோ?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மசாலா மிக்ஸ்


அகம் – புறம் காண்பியம்

## அற்புத வாய்ப்பு!

அழகை ஆராதிப்பவர்களுக்கெல்லாம் ஒரு அற்புத வாய்ப்புக் காத்திருக்கிறது. 2004 உலக அழகிப் போட்டியில் வெல்பவரைத் தீர்மானிக்க முதல் தடவையாக பார்வையாளர்களும் வாக்களிக்கப் போகிறார்கள்.

உலக அழகிப் போட்டி தற்போது மனித வாழ்வில் தவிர்க்க முடியாத ஒரு அங்கமாகிப் போய்விட்டது. போட்டியில் வென்றால் அந்த நாட்டுப் பெண்கள் வென்ற மாதிரி ஒரு தற்பெருமை பூரிப்பு. அடேயங்கப்பா....! ஆனால், இலங்கை அழகிகளைக் கவனிப்பாரில்லை என்பது வேறு விடயம்.



நடுவர்கள் தான் இதுவரை அழகிகளைத் தேர்ந்தார்கள். அழகில் மயங்கி பக்கச் சார்பாக நடந்துகொண்டார்களோ என்னவோ! தொலைக்காட்சியில் ஆடைக்குறைப்பு அழகிகளைப் பார்த்து 'ஜொள்' ளும் எல்லோரும் இனி தங்கள் விருப்பங்களையும், ஏற்பாட்டாளர்களுக்கு தொலைபேசி மூலம் அல்லது எழுத்து மூலம் தெரியப்படுத்தலாம். வருடாந்தம் இந்தப் போட்டியை 20 லட்சம் பேர் பார்க்கிறார்கள். "யப்பா...!" இவ்வளவு பேருமா வாக்களிக்கப் போகிறார்கள்?

இந்த வருடம் 54ஆவது உலக அழகிப்போட்டி சீனாவின் சான்யா தீவில் நடக்கிறது. 120 பேர் தங்கள் அழகை அள்ளி வழங்கக் காத்திருக்கிறார்கள். உங்களிடம் ஒரு செல்லிடப்பேசி இருந்தால் அதில் அழைத்து உங்கள் தெரிவைச் சொல்லலாம். அல்லது குறுந்தகவல் சேவையிலும்(ண்ட்ண்) நீங்கள் அழகிகளை விரும்பலாம். முடிந்தால் முயன்றுபாருங்களேன்.

## இப்படியும் ஒரு போட்டி


உலக அழகிப் போட்டிக்காக சீனாவில் தங்கியிருக்கும் பிரேஸில் அழகியின் விந்தியாசமான ஆடை அலங்காரம்.

போலந்து நாட்டின் தலைநகரான வார்சோ நகர சபைக்கும் அங்கு கண்காட்சி ஒன்றை ஒழுங்கு செய்தவர்களுக்கும் இடையே பெரும் இழுபறி. கண்காட்சியில் இடம்பெற இருந்த ஒரு போட்டிக்குநகரசபையினர் தடைவிதித்ததுதான் ஏற்பாட்டாளர்கள் சீறக் காரணம்.

"முடிந்த வரையில்அதிகஆண்களுடன் உறவுவைத்துக்கொள்வதில் எந்தப்பெண் உலக சாதனை படைப்பாள்?", கேட்க ஒரு மாதிரியாக இருந்தாலும்இதுதான்அவர்கள்வைத்தபோட்டி. "அப்படியெல்லாம் போட்டிவைக்க முடியாது. சட்டத்துக்கு முரணானது. மீறி வைத்தால் தொலைத்துவிடுவோம்'' என்று நெருப்பெடுக்கிறார் நகர மேயர். அவர் இப்படிக் கொதிக்க போலந்து ஒன்றும் புனித பூமி அல்ல. அங்கு பாலியல் தொழிலுக்கும், காமத்துக்கும் தடையேதும் இல்லை. எல்லாத்துக்குமே அரசின் முழு ஆசீர்வாதம் உண்டு. ஆனாலும் இந்த உலக சாதனைக்கு அதிகாரிகள் ஏனோ மறுக்கிறார்கள். "அது கிரிமினல் குற்றம். அப்படிச் செய்தால் 3 ஆண்டுகள் தூக்கி உள்ளே போட்டுவிடுவோம்''என்று மிரட்டுகிறார்கள். அதையும்தான் பார்த்துவிடுவோமே என்று வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிறது எதிர்த்தரப்பு. "நாங்கள் ஒன்றும் சட்டத்தை மீறவில்லை. நாங்கள் எது செய்தாலும் அதிகாரிகளுக்குப்பிடிப்பதில்லை'' என்பது அவர்கள் வாதம்.

இந்த காமக்கண்காட்சி கடந்தவாரம் வியாழக்கிழமை ஆரம்பமாகி 4 நாள்கள் தொடர்ந்து நடந்தது. கடந்த ஆண்டு நடத்திய இந்தக் கண்காட்சியை 11000பேர் பார்த்துள்ளார்கள். காமம் பற்றி எல்லாமே இங்கு பார்க்கலாமாம். இந்த வருடம் அதைவிடக் கூடுதலானவர்கள் பார்வையிட்டார்கள் என்பது ஏற்பாட்டாளர்களின் எதிர்பார்ப்பு. "செக்ஸ் உலக சாதனை நிகழ்த்தப்படும்'' என்று இந்த கண்காட்சிக்காக விளம்பரங்கள் எல்லாம் வீதிக்கு வீதி ஒட்டியாயிற்று. அதை நம்பி, பார்க்க வந்தவர்கள் ஆசையை நிறைவேற்ற முடியவில்லையே என்பது தான் ஏற்பாட்டாளர்களின் ஒரே கவலை.


வளையும் திரை

## ஆன்மாவை உலுக்கியவை

20ஆண்டுகளுக்கு மேலான யுத்தம் இழக்கச் செய்தவை பல. எஞ்சியிருப்பது என்ன என்ற கேள்வி தான் இப்போதெல்லாம் எஞ்சி நிற்கின்றது. 80களில் எரிந்து கருகிய யாழ்.பொதுசன நூலகம் கடந்த காலக் 'கறுப்பு' களைத்தனக்குள் புதைத்து வெள்ளை வெளீரெனக் காட்சி தருகிறது. புனரமைத்த தோற்றத்துக்குள் எல்லாம் மறைந்துவிட்டதாகத் தோன்றும் ஒரு தருணத்தில் வான் பார்த்து உயர்ந்தபடி கிடக்கும் இந்தக் கைகள் பல எழுப்பும் கேள்விகளும் பலப்பல.



போரின் ஆன்மாவை உலுக்கும் இந்தக் கைகளும், வெள்ளை அடிக்கப்பட்ட நூல் நிலையத்துக்குள் தான் கிடந்தன. ஆயிரமாயிரம் பேர் கைப்பட்ட நூல்களின் சாம்பல் மேட்டில் இருப்பது அவற்றுக்குப் பொருத்தம் தான்.

அண்மையில் யாழ். நூல் நிலையத்துக்குள் நடந்த அகம்-புறம் சமகாலக் காண்பியக் கலைக்காட்சியில் தென்னிந்தியக் கலைஞர் ஒருவரின் "கைகள்'' இவை. போர் எல்லோரையும் ஒரே மாதிரித்தான் பாதிக்கிறது.

அற்புதமான இந்தக் கண்காட்சி சொல்லிய செய்திகள் பல. அதே கண்காட்சியில் இருந்த பெண்ணின் ஓவியம் தான் இதுவும். பெண் என்பவள் சொந்த அடையாளங்களில் இருந்து விலக்களிக்கப்படுகிறாள். சிந்தனை வழிப்படுத்தலுடன் கூடிய சமூக நியமங்கள் அவளை ஆளுகின்றன. மீறிவிடத் துணிந்தால் அவள் மீழுருக் கொள்ள வேண்டும். ஆயினும் சமூக, அரசியல் பொருளாதாரப் பின்னடைவுகள் எதிரிகளாக்கி இயலாத மாந்தர்களாக வாழ வைக்கின்றன. இதுவும் தென்னிலங்கை ஓவியரின் படைப்புத் தான். *( படமும் தகவலும் எமக்கு அனுப்பியவர் அ.விஜயநதன்)*

## சறுக்கல்

நம் நாட்டுத் தேசப்படத்தில் தான் குளறுபடிகள் செய்கிறார்கள் என்றால் வரைபடக் குளறுபடிகளால் ஐரோப்பிய யூனியனும் கலங்கிப் போய்க்கிடக்கிறது. அது வெளியிட்ட ஐரோப்பா வரைபடத்தில் இங்கிலாந்தின் வேல்ஸ் மாநிலம் நீருக்குள் அமிழ்ந்து போய் விட்டது. அடியடா பிடியடா என்று கண்டனங்கள் கிளம்ப இப்போது மன்னிப்புக் கேட்டிருக்கிறது ஐரோப்பிய ஒன்றியம். ஆனாலும் ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேற வேண்டும் என்று ஆத்திரத்தில் குதிக்கிறார்கள் சில அரசியல்வாதிகள்.2004ஆம் ஆண்டு புள்ளிவிபரவியல் புத்தகத்தை ஐரோப்பிய ஒன்றியம் கடந்தவாரம் வெள்ளிக்கிழமை வெளியிட்டது. அதில்தான் இந்தத் தவறு. வெளிவிட்ட 8,650 பிரதிகளையும் திரும்பப்பெற்றால் நஷ்டம் என்று கூறும் ஒன்றியம் அவற்றுக்குள் மன்னிப்புக்கோரும் 'துண்டு' ஒன்றை வைக்கப் போகிறதாம். ஆனைக்கும் அடிசறுக்கும் என்பார்களே? இதுதானோ?


ஐரோப்பிய வரைபடத்துடன் மாணவர்கள்

## ஏன் செய்தார்?

ஐ.தே.கட்சியில் இருந்த திலக் கருணாரத்ன இனவாதம் பேசிக்கொண்டு சிஹல உறுமய என்று ஒரு கட்சியை ஆரம்பித்தார். அதன் உறுமலில் சிங்களவர்கள் பயப்படாமல் போயினர். அதனால் கட்சிக்கு 2001 தேர்தலில் ஒரு இடம் கூடக்கிடைக்கவில்லை. இந்த லட்சணத்தில் இலங்கை ஒரே நாடு என்று சொல்லிக்கொண்டு யாழ்ப்பாணத்திலும் வேறு போட்டியிட்டது கட்சி. அங்கே கொஞ்சம் வாக்குகளும் கிடைத்தன என்பது வேறு கதை. ஹெல உறுமயவின் இனவாத உறுமல் செல்லுபடியாகாமல் போக பிக்குகளின் பின்னால் கட்சி மறைந்துகொண்டது. சிஹல உறுமய போய் ஜாதிக ஹெல உறுமய வந்தது. திலக் கருணா ரட்னவின் இனவாதத்துக்கு உச்ச சான்று இது. தான் வளர்த்த கட்சியையே தாரை வார்த்த கர்ணனாக. அதற்குள்ளும் ஒரு நப்பாசை இருந்தது. பிக்குகள் வென்றாலும் கேட்டவுடன் தனக்கும் ஒரு நாடாளுமன்றப் பதவியைத் தருவார்கள் என்று. முற்றும் துறந்தவர்கள் தானே அவர்கள். ஆனால் கூடாரத்துள் புகுந்த ஒட்டகம் மாதிரியாகிவிட்டனர் பிக்குகள். திலக் கருணாரத்னவையே வெளியேற்றிவிட்டனர். ஆத்திரத்துடன் புறப்பட்டு மீண்டும் தன் தாய்க் கட்சியிலேயே சேர்ந்துவிட்டார். இப்போது ஐ.தே.கட்சியின் கம்பகா மாவட்ட அமைப்பாளர் அவர். அங்கே என்ன செய்கிறார் தெரியுமா? கட்சிக்குப்புதிதாக ஆள் திரட்டுகிறார். தேர்தலுக்கு முன் கட்சியை நன்றாகப் பலப்படுத்திவிட வேண்டுமாம். சிங்கள இனத்தை ஐ.தே.க பாதுகாக்கும் என்று மீண்டும் நம்பிவிட்டார் போல...!

## நுட்பம் விரிய சுருங்கும் திரை

சர்வமும் கணினி மயம் இப்போது. தொலைக்காட்சியும் பிரிக்க முடியாத அங்கம். இந்த இரண்டும் இன்றியமையாதவையாகிப் போனவாழ்வில் அவை பற்றி ஆராய்ச்சிகளும் அதிகம். ஆரம்பத்தில் பெரியஅளவில் அதிக இடத்தை அடைத்துக்கொள்ளம் அளவில் இவை வந்தன. தொழில்நுட்பம் வளர வடிவங்களும் மாறின. முன்னுக்கு வண்டி வைத்துத் தள்ளிக் கொண்டிருந்த தொலைக்காட்சித் திரையும் கணினித் திரையும் பின்னர் தட்டையாகின.

கையில் எடுத்துச் செல்லக் கூடிய கணினிகள் வந்த பிறகு நிறை குறைந்த சிறிய திரைகள் தயாராகின. காகி தம் போலவும் அணிந்து கொள்ளக் கூடியவை போலவும் அவை பின்னர் வடிவம் மாறின.


வார்சோ கண்காட்சியில் ஓர் அழகி

மெல்லிய கணினித் திரைகளைத் தயாரிப்பதில் இப்போது தாய்லாந்து நிறுவனம் ஒன்று புதிய சாதனை படைத்துள்ளது. மின் காகிதத் திரை (Electronic Paper Displayer - EPD) என்று இதற்குப் பெயர். இந்தத் திரையை ஜேர்மன் நாட்டு இரசாயன நிறுவனம் ஒன்றுடன் இணைந்து அந்த நிறுவனம் உருவாக்கியது. 0.125 மில்லி மீற்றர் மட்டுமே தடிப்புக் கொண்ட இந்த மின் காகிதத் திரையை எந்த இடத்திற்கும் எளிதில் எடுத்துச் செல்லலாம். எளிதில் வளையும் தன்மை கொண்டது இது. இதன் மூலம் எதிர்காலத்தில் தொலைக்காட்சி மற்றும் கணினிகளின் திரைகளின் அளவைச் சின்னதாக்கி விடலாம் என்று கணிக்கப்படுகின்றது. கையில் கொண்டு திரிவதற்குப் பதில் மடித்து சட்டைப் பையில் அப்படியே போட்டுக் கொண்டு சென்றுவிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விடுகதைகள்

1. வரும்போது வெண்சிவப்பு! வளர வளரத் தக தகப்பு! போகும் போது கடும் சிவப்பு! அது என்ன?
சூரியன்

2. மழைக்காலம் வந்துவிட்டால் மகராசி பாட்டெடுப்பாள் அவள் யார்? தவளை

3. கல்வீட்டுத்தாத்தா மெதுவாகத்தான் நடப்பார், அவர் யார்? ஆமை

*உமாச்சந்திரன் நிகழ்யா, யா/காமாட்சி பாலர் பாட.*

## துணுக்குச் செய்திகள்

- தாவரங்களில் அதிகவேகமாக வளரக் கூடியது மூங்கில்.
- எறும்புகளில் 3500 இனங்களுக்கு மேல் இருக்கின்றன.
- ஒருவர் வாழ் நாளில் ஒரு தொன் அளவு நீர் அருந்துகின்றார்.
- 24 மணி நேரத்தில் தலை முடி ஒரு அங்குலத்தில் ஐந்தில் ஒரு பங்கு வளரும்.

*பி.சிந்துஜா, தரம் 09 கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி.*

## பொது அறிவு விடயம்

1. பெற்றோலை அமெரிக்கர்கள் எந்தப் பெயரில் அழைக்கின்றார்கள்? கேசோலின்
2. கிழக்கு ஆபிரிக்காவில் பெரும்பான்மையானோர் பேசும் மொழி? சுவாஹிலி
3. நோபாளத்தின் தேசிய விலங்கு எது? பசு
4. ஜெபல்ராம் என்பது எந்த நாட்டின் மிகப் பெரிய சிகரம்? ஜோர்டான்
5. ஆசியாவின் முதல் தபால் தலை எப்போது வெளியிடப்பட்டது? 1852 ஆம் ஆண்டு
6. இந்தியப் பெருங்கடலில் உள்ள மிகப்பெரிய தீவு? மடகாஸ்கர்
7. 'லோங் லிவ் அவர் பிளவட் கிங்' என்பது எந்த நாட்டின் தேசிய கீதம்? சவுதி அரேபியா
8. இந்தியாவிலேயே முழுமையாக உருவாக்கப்பட்ட முதல் செயற்கைக் கோள் எது? ஜி. சாட்
9. கலிங்கா விருதை வழங்குவது யார்? யுனெஸ்கோ
10. உலகில் அதிக அளவு கிறிஸ்தவ மக்கள் வாழும் நாடு எது? அமெரிக்கா

*சி. உமா, தரம் 08, கோண்டாவில்.*

## அறிந்து கொள்ளுங்கள்

1. உலகின் மிகவும் பழமையான மரம் எது? அது எங்குள்ளது? பிரிஷ் டிவிகன், கலிபோர்னியாவில் உள்ளது.
2. இலங்கையின் வரலாற்றில் ஒரு நாள் மட்டும் ஆட்சி நடத்தியவன்? நிஸங்க மன்னனது மகன் வீரபாகு
3. இலங்கையில் உயர்நீதி மன்றம் நிறுவப்பட்ட ஆண்டு? 1810
4. கொழும்பில் துறைமுகம் நிறுவப்பட்ட ஆண்டு? 1870
5. வளிமண்டலத்தில் அதிக வேகத்தில் காணப்படும் வாயு? நைதரசன்

*வி.கஸ்தூரி*
*தரம் 7,*
*யா/ வட்டு மத்திய கல்லூரி.*

## படம் சொல்லும் பழமொழி-09




அன்பானதம்பி, தங்கைகளே! மேலே உள்ள படங்கள் ஏதோ ஒரு பழமொழியை நினைவூட்டுகின்றன. அவை என்ன பழமொழிகள் என்பதை கண்டுபிடித்து விடையை தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள். சரியான விடையை ஒக்டோபர் 24 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடை எழுதும் 5 பேரின் பெயர் விபரம் சுடர் ஒளி வாரமலரில் பிரசுரமாகும். செப். 26 ஆம்திகதி சுடர் ஒளியில் உள்ள பழமொழிகளுக்கு சரியான விடைகள் வருமாறு.

1. சிறு துரும்பும் பல் குத்த உதவும்
2. எறும்பூரக் கற் குழியும்
3. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
4. எலி வளை ஆனாலும் தனி வளை வேண்டும்

செப். 19 ஆம் திகதி சரியான விடையை அனுப்பியவர்களது பெயர் விபரம் வருமாறு: 1.சி.தனலட்சுமி,தரம் 9,வ/ தவசிகுளம் அ.த.க.பா.. 2.லோ.நிரோஜா,தரம் 9,கிளி/புனிததிரேசா பெகல். 3.கு. வத்சலா, தரம்9, நொச்சிக்குளம் அ.த.க.பாடசாலை. 4. லோ. நேருஜா, தரம் 9, கிளி/புனித திரேசா பெண். கல்லூரி. 5.அ.அனிஸ்டன், 988, அன்புவழிபுரம்,திருகோணமலை.

அனுப்பவேண்டிய முகவரி: *'படங்கள் சொல்லும் பழமொழி',*
*சுடர் ஒளி வாரமலர், 85, ஜயந்த மல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு - 14*

## அஷ்டலட்சுமிகள்



முன்னொரு காலத்தில் நம்பிராஜன் என்ற மன்னன் இருந்தார். இம்மன்னன் கடும் தவம்புரிந்து அஷ்டலட்சுமிகளான ராஜ்ஜிய லட்சுமி, கீர்த்தி லட்சுமி, சௌரிய லட்சுமி, தனலட்சுமி, தானிய லட்சுமி, வித்திய லட்சுமி, விஜய லட்சுமி, தைரிய லட்சுமி ஆகியோரின் கடாட்சத்தைப் பெற்றுத் தன் நாட்டை நன்கு ஆண்டு வந்தார்.

ஒரு நாள் ஒவ்வொரு லட்சுமியும் மன்னனிடம்வந்து, "நான்உன்னோடுபலவருடங்கள் இருந்து விட்டேன். இனி உன்னிடமிருந்து விடை பெற்றுக் கொள்கிறேன்!" என்று கூறி, ஏழு லட்சுமிகளும் அம்மன்னனிடமிருந்து போய்விட்டனர்.

கடைசியாக தைரியலட்சுமியும் வந்து, "நானும் போகிறேன்!" என்றாள்.

மன்னன் தைரிய லட்சுமியைத் தடுத்து நிறுத்தி, "மற்ற எல்லா லட்சுமிகளும் போனதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால், தைரிய லட்சுமியாகிய நீங்கள் மட்டும் என்னை விட்டுப் போகக் கூடாது. நீங்கள் இல்லையென்றால் ஒரு மன்னாகிய நான் கோழையாகிவிடுவேன்.

கோழை ஒரு நாட்டை ஆள்வது என்பது இயலாத காரியம். எனவே, உங்களை நான் போகவிடமாட்டேன்." என்று கூறி அவரை அரண்மனைக்குள் அடைத்துவிட்டார். சற்று நேரத்தில் மற்ற லட்சுமிகளும் மன்னனிடம் திரும்பி வந்தனர்.


"ஏன் வந்து விட்டீர்கள்?" என்று கேட்டார் மன்னன்.

"எந்த இடத்தில் தைரிய லட்சுமி இருக்கிறாளோ, அங்கே தான் நாங்களும் இருப்போம்." என்றனர் அவர்கள். மனம்மகிழ்ந்தார் மன்னன்.

## சிறார் கவின் கைவண்ணம்


எஸ். மயூரன் தரம் 9 வைரவன் கல்லூரி, ஹட்டன்


ப. விநோதடாஸ் தரம் 9 பயோகபுரம் மகா வித்தியாலயம்


கு. யனுதாஸ் தரம் 6 யா/கொக்குவில் இந்துக் கல்லூரி


ம. திமலினி தரம் 5 யா/ இளவாலை கன்னியர் ம/ம/வித்


எவ். சரா நஸார் தரம் 8 கிங்ஸ்ரன் சர்வதேச கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவ வயதில் தோன்றும் பிரச்சினைகளும் தீர்வுகளும்

'டீன் ஏஜ்'என்பது ஓர் அற்புதமான பருவம்.பகலும் இல்லாத இரவும் இல்லாத ஓர் அந்திப்பொழுது எவ்வளவு அழகானதோ, அப்படித்தான் இப்பருவமும்.பெண்களைப் பொறுத்தவரை குழந்தையுமில்லாத, பெரியவர்களுமில்லாத அந்த இரண்டும் கெட்டான் வயது மிகவும் அழகானது.மனதில் ரொமான்டிக் பூக்கள் மலரத் தொடங்குகின்ற வயது என்று 'டீன் ஏஜ்' பற்றி வர்ணிக்கிறார் மனித உறவு அறிவியல் வைத்தியர் ஒருவர்.

சிற்சில நேரங்களில் வயது முதிர்ந்தவர்கள் இந்த இளம்பருவத்தினர் செய்யும் சில குறும்புகளைப் பார்த்து ''எல்லாம் வயசுக் கோளாறு...'' என்பார்கள். ஆனால், உண்மையில் கோளாறு என்பது வயதில் அல்ல. ஹோமோன்களில் தான் என்று 'டீன் ஏஜ்' தடுமாற்றங்களுக்கு அறிவியல் ரீதியான விளக்கம் தருகிறார் ஓர் அறிஞர்.

உடலில் ஹோமோன்களால் மாற்றங்கள் நிகழும்போது அவளது உள்ளத்தைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு தாய்மார்களுக்குத்தான் உண்டு.சொல்லப்போனால் பிஞ்சுக்குழந்தையாக அவள் இருந்தபோது,எவ்வளவு கவனமும்,அக்கறையும் காட்டி வளர்த்தார்களோ அதே கவனமும், அக்கறையும் இப்போதும் தேவை.

பிஞ்சுப்பருவத்தையும்,இந்த டீன் ஏஜ் பருவத்தையும் ஒருவகையில் நாம் ஒப்பிட முடியும்.படுத்தே கிடக்கும் குழந்தை, சில நாட்களின் பின் அம்மாவின் முகம் பார்த்துச் சிரிக்கிறது. அடுத்து, கையை, காலை ஆட்டுகிறது, அடுத்த சில மாதங்களில் உட்காருகிறது, தவழ்கிறது, நடக்கிறது, பின் ஓடவே ஆரம்பிக்கிறது. இதேபோன்ற கிடுகிடு வளர்ச்சி மீண்டும் குறுகிய கால இடைவெளியில் மனித வாழ்வில் ஏற்படுவது இந்த 'டீன்ஏஜ்' பருவத்தில் தான் என்று விளக்கம் தருகிறார் அந்த அறிஞர்.

பொதுவாகப் பெண்ணின் வளர்ச்சியை பீர்க்கங்காய் வளர்ச்சி என்பார்கள். இப்போதெல்லாம் குழந்தைகள் பருவமடையும் வயது மிகவும் குறைந்திருக்கிறது. ஒன்பது வயதிலேயே சில குழந்தைகள் பருவமடைந்து விடுகின்றனர். அதனால் அந்த நேரத்தில் தாய் தான் பக்குவமாக தன் குழந்தைக்கேற்பட்ட மாற்றங்களை எடுத்துக் கூற வேண்டும். அம்மாவே தயங்கினால் யாரிடம் போய் அந்தக் குழந்தை தன் சந்தேகங்களைப் பகிர்ந்து கொள்ள முடியும்? 'இது வளர்ச்சியின் அடுத்த கட்டம். இதில் வெட்கப்பட எதுவும் இல்லை' என்பதை தாய் தன் மகளுக்குத் தெளிவாகப்புரிய வைக்க வேண்டும். இந்தச் சமயத்தில் தான் அம்மாவால் மகளிடம் மிகவும் நெருங்க முடியும். இதுதான் என்று விளக்கம் கொடுத்துவிட்டால் அதன் மேல் இருக்கும் கவனம் போய் குழந்தையின் கவனம் படிப்பில் திரும்பிவிடும். இல்லையேல் குழந்தைக்கு அதுவே பெரிய கேள்வியாகி, பதில்தேட ஆரம்பிக்கும். அது சிலசமயங்களில்விபரீதங்களிலும்முடியலாம்என்கிறார் இளம்பருவ சிறப்பு மருத்துவர் ஒருவர்.



மனதில் புதுப்புதுக்கனவுகள், ஆசைகள்,எதிர்பார்ப்புக்கள் ஏற்படுகிற நேரம் இது. அங்கீகாரங்களை எதிர்பார்ப்பதும், பாராட்டுக்களை எதிர்பார்ப்பதும் அவர்கள் வயது.பெற்றோர்கள் அதைக் கொடுக்கத் தவறும் பட்சத்தில் வெளியில் இருந்து அவை கிடைக்கும்போது சந்தோஷப்படுவார்கள். அதில் மயங்கிச் சிறிது சிறிதாக வீட்டிலிருந்து விலகவும் ஆரம்பிப்பார்கள்.

(தொடரும்)

# டி.வி பார்க்கலாமா?



டி.வி பார்ப்பது தவறில்லை. வாய்க்கு இதமாகச் சாப்பிடுவது தவறில்லை. உடற்பயிற்சிக்குப் போகவில்லையா? தவறில்லை ஆனால்...?

ஒரு நாளைக்கு மூன்று மணி நேரத்துக்கு மேல் தொடர்ந்து இருந்த இடத்தை விட்டு அசையாமல் டி.வி பார்ப்பது தான் தவறு.

நல்ல சமையல் எண்ணெய் ஆக இருந்தாலும், அடிக்கடி சாப்பிட்டுக்கொண்டிருப்பதும் தவறு.

ஒரு நாளைக்குக் குறைந்த பட்சம் அரை மணி நேரமாவது காலை, மாலை இரவில் காலாற நடக்காமல் இருப்பது தான் தவறு.

என்ன புரிந்துகொண்டீர்களா? நீங்கள் ஆணோ, பெண்ணோ யாராக இருந்தாலும், இந்த மூன்றில் தவறே செய்யாமல் இருந்தீர்களானால், நாற்பதைத் தாண்டிய பின், வேண்டாத சிக்கல்கள் உங்கள் உடம்புடன் உறவு கொண்டாடிக் கழுத்தறுக்காது.

இதில் என்ன விசேடம் என்று பார்த்தால், அமெரிக்கர்கள் எதை, எதையெல்லாம் தவறு என்று எம்மைப் பார்த்துத் தவிர்க்கிறார்களோ, அதையெல்லாம் நாம் இறுக்கமாகப் பிடித்துக் கொள்கிறோம்.அவர்கள் தெரிந்ததனால் தப்புச் செய்வதிலிருந்து மாறிவிட்டார்கள். நாம் தெரியாமலே சில தவறுகளைச் செய்கிறோம். இதன் விளைவு தான் இன்று பல நாடுகளில் மாரடைப்பு உட்பட இருதய நோய்கள் பரவி வருகின்றன.

ஒரு நாளைக்கு மூன்று மணிநேரத்துக்கு மேல் டி.வி பார்ப்பவர்களுக்கு, அவர்கள் [illegible] முதல் 50 வயதைத் தாண்டிய நிலையில், இருதயப் பாதிப்பு வர மற்றவர்களை விட [illegible]8 சதவீதம் அதிகம் வாய்ப்பு உள்ளது.

உடற்பயிற்சி என்பது எம்மில் பலருக்கு முடியாத ஒன்றாக இருக்கின்றது. குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு அரை மணி நேரமாவது நடக்க வேண்டும்.வீட்டு வேலைகள் செய்து உடலை வளைக்க வேண்டும்.

எண்பது முதல் நூறு வயது வரை வாழ்ந்த காலம் பழைய காலமாகிவிடும் போலிருக்கிறது. இன்னும் 20 ஆண்டுகளில் இருதயக் கோளாறினால் இறப்போர் வயது 6[illegible]க்குள் கீழ் வந்துவிடும் என்று கூறப்படுகிறது.

ஆம்.ஆய்வு முடிவுகளைப் பார்க்கும்போது பயமாகத்தான் இருக்கிறது அல்லவா? எனவே, நீங்கள் இந்த வகையினராக இருப்பின் மாறுங்கள்— உடம்பைக் கவனியுங்கள் முதலில்!

# நீங்களும் செய்யலாம்




பொதுவாக நாம் எமது சந்தோஷங்கள், விசேட நிகழ்வுகள் அனைத்தையுமே ஏதேனும் சிறு சிறு பரிசுப்பொருட்களை வழங்கியே பிறரோடு பகிர்ந்துகொள்வோம். அந்த வகையில் அதனைக் காசு கொடுத்து கடையில் வாங்கிக்கொடுப்பதைவிட, நாமே எமது கையால் எம் கற்பனையில் தோன்றும் வண்ணம் செய்து கொடுக்கும் போது ஏற்படும் திருப்திக்கு அளவே இல்லை அல்லவா?

எனவே, அப்படி உங்கள் கையால் ஒரு வாழ்த்து அட்டையை உருவாக்குவது எப்படி என்பதை இப்போது பார்ப்போம்.

*தேவையான பொருட்கள்*

| | |
|---|---|
| றெஜிவோம் | —1/2அல்லது 3/4 அங்குலம் மொத்தமானது. |
| கால்ஷீட் | |
| பிளேட் | 1 |
| fabric colour | பச்சை,சிவப்பு, வெள்ளை (ஒவ்வொரு போத்தல்) |
| தங்க நிற கிளிட்டர் பவுடர் 1 பைக்கட்(சிறியது) | |
| பெவிகால் | |
| வளையும் தன்மை உடைய கம்பி | —தேவையான அளவு |
| செயற்கை இலைகள் | —தேவையான அளவு |
| 8ஆம் இலக்க brush | —1 |
| உப்புத்தாள் | —நடுத்தர அளவு |

*செய்முறை*

மொத்தமான கடதாசி ஒன்றில் இதய வடிவத்தை வரையுங்கள். வரைந்ததை வெட்டி எடுங்கள்.பின்பு ஒன்றரை அங்குலம் அகல இடைவெளி விட்டு, மீதியுள்ள பகுதியை வெட்டி எடுங்கள்.

றெஜிவோமை எடுத்து அதன் மீது இதய வடிவமுள்ள அட்டையை வைத்து அடையாளமிடுங்கள்.(படம்1)அதன் வெளிப்பகுதியைச் சுற்றி அடையாளமிட்டு,இரண்டு பகுதியிலும்,வெளிப் பகுதி மற்றும் உட் பகுதியைச் சுற்றி அடையாளமிட்டு ஒரு பகுதியை எடுத்துக் கொள்ளுங்கள்.(படம்2,3)உட்பகுதி வளைவு குறிக்கப்பட்ட பகுதியில்,உட் பகுதியை வெட்டி எடுங்கள்.(படம்4)


(படம்1)

வெட்டப்பட்ட றெஜிவோமின் ஓரங்களை உப்புத்தாள் வைத்துத் தேயுங்கள். வழுவழுப்பாகிவிடும்.


(படம்2)

நடுவில் வெட்டப்படாத இரண்டு றெஜிவோம் துண்டுகளிலும் சிவப்பு fabric colourகளைப் பூசுங்கள்.

நடுவில் வெட்டப்பட்ட றெஜிவோம் துண்டைச் சுற்றிலும் பெவிகாலைத்தடவி கிளிட்டர் பவுடரைப் பரவலாகக் காயவிடுங்கள்.

மீதியுள்ள றெஜிவோம் பகுதியை, தேவைக்கேற்ப 1 அடி சதுரத் துண்டுகளாக வெட்டி எடுத்துக்கொள்ளுங்கள். அதன் கூர்மையான பகுதிகளைக் கத்தியால் இலேசாகத் தேய்த்துக்கொண்டே வர உருண்டை வடிவம் வெகு எளிதாக வரும்.(படம்5)


(படம்3)

கம்பிகளை எடுத்து அவற்றின் நுனிகளில் பெவிக்காலைத் தடவி, ஒவ்வொன்றின் நுனியிலும் தெர்மோக்கோல் உருண்டைகளைக் குத்திக் காய வையுங்கள். பிறகு உங்கள் விருப்பம்போல், சிவப்பு fabric colour, பெவிகால்போன்றவற்றைத் தடவி தங்க வண்ணக்கிளிட்டரை பூசிக் காய வையுங்கள்.(படம் 6,7)


(படம்4)

றெஜிவோம் உருண்டைகளுக்குக் கீழே உள்ள கம்பி தான் தண்டுப்பகுதி. இதற்குப் பச்சை நிற fabric colour ஐ பூசிக்காய விடவும்.


(படம்6)

இதய வடிவ றெஜிவோம் துண்டுகள் காய்ந்ததும், அவற்றில் சிவப்பு நிறத் துண்டுகளை ஒன்றின் மீது ஒன்றாக, முதல் துண்டிலிருந்து, அடுத்த துண்டு 1அடி கீழே இருக்குமாறு வைத்து பெவிகோல் தடவி ஒட்டுங்கள். இரண்டாவது துண்டுக்கு 1அடி கீழே, தங்க நிற றெஜிவோம்துண்டை வைத்து பெவிகால் தடவி ஒட்டுங்கள்.(படம்8)


(படம்8)


(படம்7)


(படம்5)

இதயங்களுக்கு இடையே தடவியுள்ள பெவிகால் காயும் முன்பு அங்கே பழங்களைத் தாங்கியிருக்கும் கம்பிகளையும், செயற்கை இலைகளையும் சொருகுங்கள்.

வழக்கமாக இதயத்தின் இடையே அம்பைத் துளைப்பார்கள். ஆனால், எதையும் காயப்படுத்துவது எமது நோக்கம் அல்லவே? எனவே, வித்தியாசமாக எதையும் செய்து அழகுபடுத்தலாம்.எனவே, நடுவே படங்கள் ஒட்டலாம். அல்லது ஓவியங்கள் போன்றவற்றை வரைந்து அசத்தலாம். அல்லது வாசகங்களை எழுதி அசத்தலாம்.

உங்கள் எண்ணங்கள் வண்ணங்களாக ஜொலிக்கும் இந்த இதயத்தைப் பரிசளித்தால், எதிரிகள் கூட நண்பர்களாகிவிடுவர். முயற்சித்துத் தான் பாருங்களேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயானத்தில் மறைக்கப்பட்ட பெண்ணுடல்கள்



1967 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் இள வயதுப் பெண்கள் ஒன்றன்பின் ஒன்றாக மாயமாக மறைந்து கொண்டு போயினர்.

அதே மாதம் 17 ஆம் திகதி வரை மொத்தம் 15 பெண்கள் காணாமல் போயிருந்ததாய் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. அனைத்துப் பெண்களும் 15 தொடக்கம் 18 வயதுக்கு இடைப்பட்டவர்களாகவே காணப்பட்டனர்.

இதில் 7 பேர் பாடசாலை மாணவிகள். ஏனைய 8 பேரும் தொழில்புரியும் பெண்கள். அனேகமாக இவர்கள் எல்லோரும் இரவு நேரத்தில்தான் வீடு வருபவர்கள். ஆகையால் இரவு நேரத்தில்தான் இவர்கள் காணாமல் போயிருக்கலாம். அல்லது கடத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் ஊகித்தனர்.

இதனைக் கண்டுபிடிக்கவும் நிலைமை மேலும் மோசமடையாமல் தடுத்து நிறுத்தவும் உளவுத்துறையினர் கடும் முயற்சி எடுத்தனர்.

காணாமல் போன பெண்களின் பெற்றோர்கள், அவர்களின் பாடசாலை ஆசிரியர்கள், சகமாணவிகள், அதே போல் காணாமல் போன உத்தியோகம் பார்க்கும் பெண்களின் சக ஊழியர்கள், அலுவலக உரிமையாளர்கள் இது தவிர வெளிநண்பர்கள் போன்றவர்களிடம் இருந்து வெவ்வேறுபட்ட விபரங்களை உளவுத்துறையினர் திரட்டினர்.

அவர்களில் அனேகமாக சந்தேகத்துக்கிடமானோரை விசாரணைக்கு உட்படுத்தினர். இருப்பினும் காணாமல் போன பெண்களில் ஒருவரையாவது கண்டுபிடிக்கக் கூடிய தகவல் எதனையும் உளவுத்துறையினரால் பெற முடியவில்லை.

[illegible]தேவேளை வேலை முடிந்ததும், பாடசாலை முடிந்ததும் வீட்டுக்கு வரும் பெண்களை உளவுத்துறையினர் பரவலாகக் கண்காணிக்கத் தொடங்கினர். அவர்களை எவராவது பின்தொடர்கிறார்களா என அவதானித்தனர். விசேடமாக இரவு நேரங்களில் வீடு வந்து சேரும் பெண்களையே அதிகம் கண்காணித்தனர்.

அப்பெண்களைப் பின்தொடர்ந்து வந்த சில ஆண்கள் உளவுத்துறையினரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

உளவுத்துறையினர் இவ்வாறான கண்காணிப்புக்களையும், விசாரணைகளையும் மேற்கொண்ட போதிலும் பெண்கள் காணாமல் போகும் சம்பவம் நாளுக்கு நாள் இடம் பெற்றுக் கொண்டே போனது.

கடத்தப்பட்ட பெண்களில் இதுவரை ஒருவரையாவது உயிருடனோ அல்லது பிணமாகவோ மீட்க முடியவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் உளவுத்துறையினர் தடுமாறிக்கொண்டிருந்தனர்.

இந்தநிலையில் திடுக்கிடும் திடீர் தகவல் ஒன்று பொலிஸாருக்கு கிடைத்தது. சிக்காக்கோ நகரில் உள்ள முதியவர் ஒருவர் சுகயீனம் காரணமாக மரணமடைந்தார். அவரது உடலைப் புதைக்கும் நோக்கில் அவரின் உறவினர்கள் சிக்காக்கோ நகரில் உள்ள மயானம் ஒன்றுக்குச் சென்று குழி ஒன்றைத் தோண்டினர்.

அவர்கள் தோண்டிய குழியினுள் இருந்து ஒரு இளம் பெண்ணின் சடலம் வெளிவந்தது. அச்சடலம் சமயமுறைப்படி அடக்கம் செய்யப்படாது பாடசாலைச் சீருடையுடன்




காணப்பட்டது. உடம்பில் பல இடங்களில் கத்திக்குத்துக் காயங்கள் காணப்பட்டன. சீருடை இரத்தம் தோய்ந்து காணப்பட்டது.

இத்தகவல் உளவுத்துறையினருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு விரைந்து வந்த உளவுத்துறையினர் அச்சடலத்தை எடுத்துச் சென்று வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

15 வயது நிரம்பிய அப்பெண் ஒரு மாணவியாவாள். பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருந்தாள். ஒரு வாரத்துக்குள்ளேதான் இக்கொலை இடம்பெற்றுள்ளது என வைத்திய அறிக்கை தெரிவித்தது.

இதனையடுத்து இப்பெண்ணின் சடலம் பெற்றோர்களினால் அடையாளம் காணப்பட்டது. ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி பாடசாலை சென்ற தனது மகள் வீடு திரும்பவில்லை என பெற்றோர் கூறினர். இது குறித்து ஏற்கனவே பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

உளவுத்துறையினர் மயானத்தை முற்றுகையிட்டனர். புதிதாகச் சடலங்கள் ஏதும் புதைக்கப்பட்டுள்ளனவா எனத் தேடுதல் நடத்தினர்.

அத்தேடுதலின்போது சந்தேகத்துக்கிடமான சில புதைகுழிகள் மீண்டும் தோண்டப்பட்டன. அவற்றுள் இருந்து அதிர்ச்சியூட்டும் விதத்தில் பல சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. அனைத்தும் இளம் பெண்களின் சடலங்கள். பாடசாலைச் சீருடைகளுடனும் உத்தியோக சீருடைகளுடனும் சடலங்கள் காணப்பட்டன.

அவற்றுள் சில சடலங்கள் இரத்தக் கறை படிந்தும், சில சடலங்கள் கைகால்கள் கட்டப்பட்ட நிலையிலும் காணப்பட்டன. அவைகள் அனைத்தும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அனைத்துப் பெண்களும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டும், கத்தியால் குத்தப்பட்டும், கழுத்து நெரிக்கப்பட்டும் கொல்லப்பட்டிருந்தனர்.

அனைத்துச் சடலங்களும் உரியவர்களின் பெற்றோரால் அடையாளம் காணப்பட்டன. இக்காலப்பகுதியில் காணாமல்போன பெண்களே இவர்கள். ஆனால், இவற்றைச் செய்தது யாரென்றுதான் இன்னும் அறியப்படவில்லை. இருப்பினும் இக்கொலைகளை குறிப்பிட்ட ஒருவன் அல்லது ஒரு கும்பலே செய்திருக்க வேண்டும் என உளவுத்துறையினர் ஊகித்தனர்.

கொலையாளியைக் கண்டுபிடிக்க உளவுத்துறையினர் அந்த மயானத்தில் உள்ள மறைவிடங்களில் இரகசியமாகப் பதுங்கிக் கண்காணிப்பு வேலையில் ஈடுபட்டனர்.

ஒருவாரமாகக் கண்காணிப்பு வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் 1967 ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி இரவு 2 மணியளவில் அந்த மயானத்தில் கார் ஒன்று வந்து நின்றது.

அதிலிருந்து 35 தொடக்கம் 40 வயதுக்குட்பட்ட ஒருவன் இறங்கினான். சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு காரின் பின் கதவைத் திறந்து அதில் இரத்த வெள்ளத்தில்கிடந்த இளம் பெண் ஒருத்தியின் சடலத்தை வெளியே எடுத்தான். அச்சடலத்தைத் தூக்கி கொண்டு வந்து தரையில் வைத்து விட்டுத் தன்னோடு கொண்டு வந்திருந்த மண்வெட்டியை எடுத்து குழி தோண்ட ஆரம்பித்தான். அப்பொழுது நாலா பாக்கங்களிலும் இருந்து உளவுத்துறையினர் அவனை நோக்கிப் பாய்ந்தனர். பிணத்துடன் அவன் கைது செய்யப்பட்டான்.

ஹெவ் ஜோக் என்ற அவன் ஒரு தொழிலதிபர். காணாமற்போன அத்தனைப் பெண்களையும் தானே கடத்திச்சென்று கற்பழித்துக் கொலை செய்ததாக அவன் ஒத்துக்கொண்டான். அவனது வெறியை அடக்க அவனுக்கு வேறுவழி இருக்கவில்லை.

இதையடுத்து சிக்காக்கோ நீதிமன்றம் 1967 – 10 – 11 அன்று அவனுக்கு மரண தண்டனை விதித்தது.

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

Shakthi சக்தி TV

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 7.05 | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 7.30 | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | சங்கீதமேடை 7.55 அன்பு மடல் | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா 7.55 அன்பு மடல் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | ஆங்கில காட்டூன் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நிகழ்ச்சி |
| 9.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | ஹோலிவூட் மூவி சிறுவர் | அரட்டை அரங்கம் |
| 9.30 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | குட்டி சுட்டி | ஞாயிறு சமையல் |
| 10.00 | பெப்சி உங்கள் சொய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப்பாட்டு | நம்ம நேரம் | கொண்டாட்டம் | களம்(பாகம் 3) | சப்தஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கானங்கள் | இசைத் தென்றல் | திரை விமர்சனம் | டாப்10 மூவிஸ் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | இப்படிக்கு நீங்கள் | கோல்டன் மூமன்ஸ் ஒப் கிரிகெட் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | திரை வானம் | சண்டே சமையல் | மங்கையர் நேரம் | மங்கை | ரிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள் (எம்.ரி.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார் ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 1.30 | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | (ஆகா எத்தனை அழகு) | வாரஇறுதிநாள்திரைப்படம் |
| 2.00 | (காதல் காவியம்) | (அதிரடி) | (நகைச்சுவை) | (கிளசிக்) | (குடும்பம்) | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 2.30 | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்திதிரைப்படம் | சக்தி திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 3.00 | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 3.30 | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 4.00 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | மை டியர் பூதம் | மை டியர் பூதம் | சக்தி திரைப்படம் | விக்கிரமாதித்தன் | சூப்பர் 10 பாடல்கள் |
| 4.30 | கார்ட்டூன் நிகழ்ச்சி | கி–மேன் | கிட்ஸ் சோன் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | அன்பு மடல் 4.55 விக்கிரமாதித்தன் | விசேட நிகழ்ச்சி |
| 5.00 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுப்பர் காட்சிகள் | என்றும் கலாட்டா | நகைச்சுவை நேரம் | என்றும் கலாட்டா |
| 5.30 | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | ஈ– சொயிஸ் | சூப்பர் காட்சிகள் |
| 6.00 | களம் பாகம் 3 | இளைய கானம் | விசேட நிகழ்ச்சி | பாடல்கள்/இளந்தளிர் 6.15 | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிக்கட் | புத்தம் புதிசு | மின்னல் |
| 6.30 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | திமி தக்க தா | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | மியுசிக்கல் | வேலன் |
| 7.30 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | மியுசிக்கல் | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | ருத்ர வீணை | இளைய கானம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் உணர்வை வளப்படுத்திய இலக்கிய விழா

ஓர் இனத்தின் மேன்மையையும், சிறப்பையும் உலகுக்கு அடையாளப்படுத்துவது அவ் இனத்தின் கலாசார, பண்பாட்டு நிகழ்வுகளாகும். அந்த வகையில் தமிழ் இனத்தின் தொன்மையையும், உயர்ச்சியையும் உலகுக்கு விளம்பும் வகையில் வடக்கு– கிழக்கு கல்வி, கலாசார அமைச்சின் இலக்கிய விழா அண்மையில் இடம் பெற்றது.

'இலக்கியம் காலத்தின் கண்ணாடி' என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு கூற்று. அவ்வாறே இலக்கிய விழாக்களும் காலத்தின் தேவைக்கேற்ப இடம்பெறுவது அவ்வினம் பெருமை கொள்ளும்நிகழ்வுகளாகும்.



யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் இ.சிவானந்தன், வடக்கு -கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன், வடக்கு-கிழக்குமாகண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் ஆகியோர் காணப்படுகின்றனர்.

ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் வடக்கு– கிழக்கு கல்வி, கலாசார அமைச்சின் 2004ஆம் ஆண்டுக்கான இலக்கிய விழாகடந்த வாரம் யாழ் இந்து மகளிர் கல்லூரியில்இடம்பெற்றது. 9,10,11 என மூன்று நாட்கள் தொடர்ந்து இடம்பெற்ற இவ்இலக்கிய விழாவில் பல அறிஞர்களும், இலக்கிய வாதிகளும் பங்கு கொண்டனர்.

16 தமிழ் இலக்கிய நூல்களுக்கான இலக்கியப்பரிசுகளும், 8 தமிழ் அறிஞர்களுக்கான ஆளுநர் விருதும் வழங்கப்பட்டமை இவ்விழாவின் குறிப்பிடக்கூடிய அம்சமாக அமைந்திருந்தது.

முதல் நாள் விழா நிகழ்வுகள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் தலைமையில் இடம் பெற்றன. பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் கலந்துகொண்டார்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தலைமையில் நிகழ்ந்தேறியதுடன் பிரதம அதிதியாக யாழ்.பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் கலந்துகொண்டார்.

விழாவின் இறுதி நாளான மூன்றாவது நாள் தமிழரின் கலை, கலாசாரங்களைச் சித்திரிக்கும் வகையில் பேரணி ஒன்றும் இடம்பெற்றது. பிற்பகல் மூன்று மணியளவில் நல்லூர் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இப்பண்பாட்டுப் பேரணி அரசடி வீதி வழியாக கந்தர்மடம் சந்தியை வந்தடைந்து அங்கிருந்து இந்து மகளிர் கல்லூரியைச் சென்றடைந்தது.

இப்பண்பாட்டுப் பேரணியானது தமிழ் மக்களின் கலை பண்பாடு போன்றவற்றை வெளிப்படுத்தும்பாரம்பரிய அம்சங்கள் பலவற்றைக் கொண்டமைந்திருந்தது. பண்பாட்டுப்பேரணி அரங்கை வந்தடைந்ததும் விழா நிகழ்வுகள் ஆரம்பமாகின. இத் தமிழ் இலக்கியப் பெருவிழா கலாநிதி நடிகமணி வி.வி. வைரமுத்து அரங்கில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

இம்மாகாண இலக்கிய விழாவில் 2004 ஆண்டுக்கான ஆளுநர்விருது பெற்ற இலக்கியகர்த்தாக்கள்பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் வடக்கு– கிழக்கு மாகாணத்தில்கடந்தவருடம்இலக்கிய நூற் பரிசுத் தேர்வில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டன.

முல்லை முஃப்ரிபா, சோ.பத்மநாதன், வி.கௌரிபாலன், மலரவன், தாமரைச்செல்வி, ஓ.கே.குணநாதன், முருகேசு பாக்கியநாதன், க.சபாரெத்தினம், திருமதி பத்மா சோமகாந்தன், எம்.ஏ.சமது, பேராசிரியர் சபா ஜெயராஜா, அன்ரன் நோபேட், தேவானந்த், அருணா செல்லத்துரை திருமதி வாசுகி நடேசன், திருமதி ஜெயரஞ்சினி ஞானதாஸ் போன்றவர்களே இலக்கிய நூல்களுக்கான பரிசு பெறும் இலக்கிய கர்த்தாக்களாவர்.



நிகழ்வில் இடம்பெற்ற சத்தியவான்-சாவித்திரி கூத்து நாடகத்தின் ஒரு காட்சி



விழாவில் தே. தேவானந்த் இலக்கிய விருது பெறுகிறார்.

அதனைத் தொடர்ந்து பேராசிரியர்கா.சிவத்தம்பி பற்றிய ஆவண ஒளிப்பேழை வெளியிடப்பட்டது. இறுதியாக கலை நிகழ்வுகள் இடம்பெற்று விழாவுக்கு அழகு சேர்த்தன.

வடக்கு– கிழக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்ட பின்னர், இம்முறை தான் இவ்விழா யாழில்இடம்பெற்றதுஎன்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் இனத்தின் தொன்மையையும், அதன் அழகுமிக்க பாரம்பரியங்களையும் உலகுக்கு எடுத்தியம்பும் முகமாக எடுக்கப்பட்ட விழாக்களில்இம் மாகாண இலக்கிய விழாவும் ஒன்றாகும். இவ் விழா தமிழ் இலக்கி[illegible] கர்த்தாக்களின் உயர்ச்சிக[illegible] வழிகோலியதோடு தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் உரமிட்டது என்று கூறின் மிகையில்லை.



அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தின் இரவுத் தோற்றம்

தர்ஷனா


## வீட்டு யுத்தம் தீர்ந்தது!

வளரும் சிறுபிள்ளைகளின் பசியைத் தூண்டும் சுவைமிக்க விட்டமின் பானம்

**Hungry Plus**

வளரும் பருவத்திலுள்ள சிறுபிள்ளைகளுக்கு உணவு ஊட்டப்போனால் வீடே யுத்த களமாகும். அதட்டியும் மிரட்டியும் அடித்தும் அவர்களுக்கு உணவு ஊட்டுவதற்குள் தாய்மாருக்கு உயிரே போய்விடும்...ஆனால், இப்போது இப் பிரச்சினைக்குச் சிறந்த பரிகாரம் கிடைத்துள்ளது. அதுதான், ஹங்ரி பிளஸ் விட்டமின் பானம்!

சிறுவர்களின் பசியுணர்வை இயற்கையாகத் தூண்டும் லைசின் மற்றும் விட்டமின்கள் அடங்கிய சுவைமிக்க ஹங்ரி பிளஸ் பானம், பிள்ளைகளின் நலமான வாழ்வுக்கும் உற்ற துணையாகும்.




## ஹங்ரி பிளஸ்


பசியைத் தூண்டும்...

இப்போது, முன்னணி மருந்தகங்களிலும் சுப்பர் மார்க்கட்டுகளிலும் வாங்கலாம்.

Marketed by: ARKEM PHARMACEUTICALS Tel: 011- 2470290




வெதுப்பகத் துறையில் புதிய புரட்சியை ஏற்படுத்திய ஷெரி இடமிருந்து புதிய உபகரணங்கள் இப்போது மலிவு விலைகளில்...




- பல வடிவங்களிலும், பல அளவுகளிலும்கிடைக்கும்.
- ஒரு வருட நிலையான உத்தரவாதம்.
- போக்குவரத்து இலவசம்.
- பேக்கரி தொழிலுக்குத் தேவையான வேறுபல உபகரணங்களான தட்டு, ட்ரொலி, வெள்ளியிலான மேசை, ஸ்பஞ்ச் தட்டுகள் போன்றவையும் உண்டு.

இறக்குமதி செய்து விநியோகிப்போர்

ஷெரி பேக்கரி இக்யூப்மன்ட் சப்லயர்ஸ் (பிரைவட்) லிமிடட்

SHERRY

பிரதான காரியாலயம்:
இல. 735, ஆ. கொழும்பு வீதி,
கனிங்கம வட்டக்கு, மஹரே.
தொ.பே.: 011 5516567
0112759333, 0112789752
பெக்ஸ்: 0114407443
ஈமெயில்: sherry@wow.lk

கிளை காரியாலயம்:
இல. 93, கொழும்பு வீதி,
பொக்குணை,
நுதாகல்.
தொ.பே.: 037 2237755.
பெக்ஸ்: 037 2237744.

Sudar Oli Grafix - 2 399666


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு — 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 ஒக். 17 ஆம் திகதி வெளியிடப்பட்டது.